
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா

தமிழரசு சிறப்பு வெளியீடு எண். 8

தமிழரசு வெளியீடு

மே 2012

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு,
சென்னை – 600 009.

விலையில்லா வெளியீடு

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணாசாலை
சென்னை – 600 002.

# பதிப்புரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கிய பல்வேறு மக்கள் நலத் திட்ட உதவிகளினால் பயன்பெற்ற பயனாளிகளின் மன உணர்வை வெளிப்படுத்தும் விதமாக வெற்றிக்கதைகள் எனும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத்திட்டங்கள் எவ்வாறு தமிழக மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது என்பதை அனைவரும் அறிந்துக் கொள்ளும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

தமிழக அரசின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள், மக்களிடையே சிறப்பாக கொண்டு செல்லப்பட்டதற்கு சான்றாக அமைந்துள்ள இந்நூலை, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டத்தினால் பயன்பெற்ற பயனாளிகளின் வெற்றிக் கதைகளைச் சீரிய முறையில் தொகுத்து நூலாக வழங்கிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இஆப அவர்களையும் இப்பணிக்கு உறுதுணை புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் மனதார பாராட்டுகிறேன். இந்நூலை அனைவரும் படித்து பயன்பெற வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முனைவர் மூ.இராசாராம், இஆப
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித்துறை

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | விலையில்லா அரிசி வழங்கும் உன்னத திட்டம் | 1 |
| 2. | ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு நிதியுதவியும், தாலிக்குத் தங்கமும் வழங்கும் திட்டம் | 9 |
| 3. | மாத ஓய்வூதியம் - உதவித்தொகை ரூ.500லிருந்து ரூ.1,000 ஆக உயர்வு | 25 |
| 4. | மீன்பிடித் தடைக் கால நிவாரணம் 2000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணை | 38 |
| 5. | தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர் புதுவாழ்வு பெற ஏற்றமிகு திட்டங்கள் | 47 |
| 6. | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரைவு பட்டா மாறுதல் திட்டம் | 53 |
| 7. | பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டை மூலம் ஓய்வூதியம் வழங்கிடும் முன்னோடித் திட்டம் | 68 |
| 8. | குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டிவியின் ஒளிபரப்பு | 74 |
| 9. | பள்ளி மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் | 83 |
| 10. | மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி - உபகரணங்கள் வழங்கும் திட்டம் | 91 |
| 11. | விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் புதியதோர் திட்டம் | 102 |
| 12. | விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம் | 118 |
| 13. | பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் தலையாய பெருந்திட்டம் | 143 |
| 14. | முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | 158 |
| 15. | நடமாடும் மருத்துவமனை திட்டம் | 177 |
| 16. | சூரிய ஒளி மின்சக்தியுடன் பசுமை வீடு திட்டம் | 188 |
| 17. | சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கும் தொலைநோக்குத் திட்டம் | 192 |
| 18. | உணவு உற்பத்தியைப் பெருக்கிட உருவாகியுள்ள இரண்டாம் பசுமைப் புரட்சித் திட்டம் | 210 |

# விலையில்லா அரிசி வழங்கும் உன்னத திட்டம்

**ஏழை எளியோர் பசிப்பிணி நீக்கும்**
**மாண்புமிகு அம்மா அவர்களின் இணையிலா மக்கள் அரசு**



"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்பது வள்ளுவர் வாக்கு. பசிப்பிணி இல்லா நாடே நல்ல நாடு என்ற வான்புகழ் வள்ளுவரின் கோட்பாட்டை மெய்ப்பித்திட, தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அனைவரும் வயிறார உணவு உண்டு, உளமார உழைத்திட,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம்தான் – குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டமாகும்.

ஏழை, எளியோர் வாழ்க்கைத் தரம் உயர்வு பெற ஏற்றமிகு திட்டங்களைச் செயல்படுத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் வாழும் மக்கள் வாழ்வில் பட்டினி என்பதை அறியாதவர்களாக இருக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்குடன் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார். இதன்மூலம் "வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" எனும் பாரதியின் கனவு தமிழகத்தில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 16.5.2011 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே மக்களின் அடிப்படைத் தேவை முதன்மையான உணவுப் பாதுகாப்பே எனக் கொண்டு முதன் முதலாக அத்திட்டத்திற்கான உத்தரவில் கையெழுத்திட்டார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.6.2011 அன்று சென்னை ஆழ்வார்பேட்டை ஸ்ரீராம் காலனி டி.யு.சி.எஸ். நியாய விலைக்கடையில் எளிமையாக நடைபெற்ற விழாவில், குடும்ப அட்டைதாரர்களின் இல்லந்தோறும் விலையில்லா

அரிசி வழங்கும் மாபெரும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின்படி பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்கள் நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைகளுக்கு மாதம் 20 கிலோ அரிசியும், அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்கள் மாதம் 35 கிலோ அரிசியும் விலையின்றிப் பெற்றுப் பெரும் பயனடைகின்றார்கள்.

**விலையில்லா அரிசி பெற்று**
**மனமும் வயிறும் குளிர்ந்த பயனாளிகள்**
**சிலரது இதயக்குரல்**
**இங்கே எதிரொலிக்கிறது**

**ஈரோடு மாவட்டம், தாமரைக்கரை மலை கிராமத்தில் வசித்து வரும் திரு மூர்த்தி தம்படி அவர்களின் மனைவி திருமதி ராஜு (வயது 45) என்பவர் கூறியதாவது**

"நான் கூலித்தொழிலாளி. மலைப்பகுதியில் தொடர்ந்து கூலி வேலை கிடைக்காது. வேலை கிடைக்கும் நாளில் கூலியாக ஒரு நாளைக்கு ரூ.50 லிருந்து ரூ.60 மட்டுமே கிடைக்கும். எனது வூட்டுக்காரரும் கூலித் தொழிலாளிதான். அவருக்கும் ஒருநாளைக்கு ரூ.70 முதல் ரூ.80 மட்டுமே கூலியாகக் கிடைக்கும். மாதத்தில் 10 அல்லது 15 நாட்கள் வேலை கிடைப்பதே ரொம்பக் கஷ்டமா இருக்கும். எங்கள் இரண்டுபேர் வருமானமும் எங்கள் குடும்பச் செலவிற்கே போதாது. இந்நிலையில் ஒரு வேளை சாப்பாடு




சாப்பிடுவதற்கே ரொம்ப சிரமப்பட்டு வந்தோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களின் பசியைப் போக்கிட இலவசமாக அரிசி கொடுக்குறாங்க. எங்களுக்கும் மாதந்தோறும் 35 கிலோ அரிசி இலவசமாகக் கிடைக்குது. இதனால் எங்க குடும்பத்தில் நானும் என் கணவரும் மற்றும் குழந்தைகளும் வயிறார மூன்று வேளையும் சாப்பிடுகிறோம். எங்களைப் போன்ற ஏழை பாழைகளுக்கு விலையில்லா அரிசி வழங்கி எங்களைப் பசியின்றி வாழ வைத்து வரும் முதல்வர் அம்மா அவர்களை மனதார வாழ்த்துகிறோம். அன்னபூரணித்தாய் வாழ்க" என்று அவர் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

**கோவை மாவட்டம், தெற்கு தாலுக்கா காளம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பாத்தாள் கூறுகையில்**

"எனது கணவர் பெயர் சின்னுசாமி. எனக்கு இரண்டு குழந்தைகள், ஒரு பையன் மற்றும் ஒரு பொண்ணு. நானும்




எங்க வீட்டுக்காரரும் விவசாயக் கூலி வேலைக்குப் போகிறோம். தொடர்ந்து எங்களுக்கு வேலை கிடைத்தால் மாதம் ரூபாய் 1500/– லிருந்து ரூ.3000 வரை கிடைக்கும். முதலமைச்சர் அம்மா அவர்கள் இலவசமா அரிசி வழங்குறது எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். எங்க வீட்டிற்குப் பக்கத்தில் உள்ள (97 / பி.பி.ஓ.67) ரேசன் கடையில் அரிசி வாங்கறோம். மாதம் 20 கிலோ அரிசி இலவசமாகக் கொடுக்கிறாங்க. முன்பெல்லாம் பழுப்பு அரிசி, கருப்பு அரிசி கலந்து வரும். இப்போ நல்ல அரிசியா தராங்க. இலவசமா அரிசி கொடுக்கரதாலே கூலிவேலை செஞ்சு சம்பாதிக்கிற காச வைத்து குழம்புச் செலவைப் பாத்துக்கிறோம். ரேசனில் துவரம் பருப்பு, உளுந்து, பாமாயில், சர்க்கரை, மண்ணெண்ணெய் எல்லாமே வாங்கிக்கிறோம். அம்மா அவங்க முதலமைச்சரா வந்ததற்கு அப்புறம் பொருட்கள் எல்லாம் ரொம்ப நல்லா இருக்கு. இலவச அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்த அம்மா அவர்களுக்கு மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோவை மாவட்டம், மாதம்பட்டு காலனியைச் சார்ந்த வெள்ளையம்மாள் ( வயது 54) கூறுகையில்**

"என் பெயர் வெள்ளையம்மாள். நான் கோவை மாவட்டம் மாதம்பட்டி காலனியில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் பெயர் தங்கவேலன். எங்களுக்கு செந்தில் குமார், பழனிச்சாமி என இரண்டு மகன்கள். அவங்கெல்லாம் கல்யாணம் முடிச்சுத் தனியா போயிட்டாங்க.

அவங்க எங்களுக்கு எந்த உதவியும் செய்வதில்லை. நாங்க விவசாயக் கூலி வேலைக்குத் தான் போயிட்டிருக்கோம். உடம்பு சரியில்லாததால என்னால் தினசரி வேலைக்குப் போக முடியாது. இரண்டு நாளைக்கு ஒருதடவ போவேன். கிடைக்கிற குறைந்த வருமானத்தை வைத்து ஏனோதானோவென்று குடும்பம் நடத்திட்டு இருந்தோம். இப்ப நம்ம அம்மா ரேசன்ல இலவசமா 20 கிலோ அரிசி போடறாங்க. அரிசியும் நல்ல தரமா இருக்கு. மிச்சமாகிற காசுல குடும்பச் செலவு பாத்துக்குறேன். எங்கக் கஷ்டத்தைப் புரிந்து நல்லது செய்ற அம்மா அவர்கள் எப்பவுமே முதலமைச்சராவே இருக்கணும். எங்கக் கஷ்டத்தைப் புரிந்து செய்யறதால எங்களுக்குத் தெய்வமே அவங்கதான்".




**நீலகிரி மாவட்டம், காந்தல் கிராமத்தைச் சார்ந்த சாந்தி (வயது 35) கூறுகையில்**

"எனது கணவரும், நானும் கட்டட வேலைக்குச் சென்று வருகிறோம். எங்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். நிலையான வருமானம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்த நேரத்தில்தான் அம்மா அவர்கள் இலவச அரிசித் திட்டத்தினைக் கொண்டு வந்து எங்கள் வாழ்க்கையில்



கஷ்டத்தைத் தீர்த்துள்ளார்கள். அம்மா அவர்களின் உயர்ந்த குணத்தைப் போல அவர்கள் வழங்கும் அரிசியும் மிகவும் தரமாக உள்ளது. எங்களைப்போன்ற எத்தனையோ குடும்பங்களின் பசிப்பிணியைப் போக்கிய அம்மா அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நெஞ்சார்ந்த நன்றியை எங்களது குடும்பத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறினார்.

**நாமக்கல் மாவட்டம், நல்லிபாளையம் பகுதியைச் சேர்ந்த திருமதி காளியம்மாள் (வயது 65) கூறுகையில்**




“நான் விவசாயக் கூலி வேலை செய்து வந்தேன். தற்போது எனக்கு வயசாயிடுச்சி. இந்த வேலையை என்னால் செய்ய முடியவில்லை. இந்தக் காலத்தில் பெற்ற மகனே தன்னுடைய தாயை கவனிப்பதில்லை. முதல்வர் அம்மா அவர்கள் இலவச அரிசி தந்து ஏழைகளின் குடும்பத்திற்கும் மற்றும் வயதான முதியோர்களுக்கும் ஆதரவாக மகளின் நிலையில் இருந்து பசியைப் போக்கி வருகிறார்கள். அம்மா வழங்கும் இலவச அரிசியை நான் பெற்று அதையே சாப்பிட்டு வருகிறேன். ஏழைகளின் பசியைப் போக்கிய அம்மா பல்லாண்டு வாழ வேண்டும்” என்றார்.

**நாமக்கல் மாவட்டம், தும்மங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திருமதி பெத்தாயி (வயது 70) கூறுகையில்**

“எங்க வீட்டுல நான், எங்க வூட்டுக்காரர், மூன்று பொண்ணுங்க, ஒரு பையன் என மொத்தம் 6 பேரு இருக்குறோமுங்க. என் வீட்டுக்காரர் கூலி வேலைக்குப்

போய்த்தான் பொழைப்பைப் பார்க்கிறோம். அம்மா கவர்மெண்ட் வந்த பிறகு நான் என்னுடைய ரேசன் கார்டுக்கு 20 கிலோ அரிசி இலவசமாகப் பெற்று வருகிறேன். நாங்க மாசா மாசம் இந்த விலையில்லா அரிசியை வாங்கி சமைச்சு சாப்பிடுகிறோம். அரிசியும் நல்லா இருக்கு, சாப்பாடும் நல்லா இருக்குது. விலையில்லா அரிசி கொடுத்த அம்மாவுக்கு நன்றியைத் தெரிவிச்சுக்கிறோம்,'' என்று கூறினார்.


பெத்தாயி

**நாமக்கல் மாவட்டம் காதப்பள்ளியைச் சேர்ந்த திரு சின்னுசாமி (வயது 65) கூறுகையில்**


சின்னுசாமி

“நான் என்னுடைய வயதான காலத்தில் வாரத்திற்கு ஒரு நாள்தான் கூலி வேலைக்குச் செல்ல முடிகிறது. தமிழக முதல்வர் அம்மா அவர்கள் வழங்கும் இலவச அரிசி மூலம் தான் சாப்பாடு செய்து சாப்பிடுகிறேன். வயதான காலத்தில் அம்மா வழங்கும் இலவச அரிசி எனக்குப் பசியைப் போக்கிட உறுதுணையாக உள்ளது. மேலும் என் கூலிப் பணத்தில் அரிசிக்காகப் பணம் செலவிட வேண்டியதில்லை. அரிசி இலவசமாய் வழங்குவதால் அரிசிக்காக செலவிடப்படும் தொகையை நான் சிறிய அளவில் சேமித்து வைத்து வருகிறேன்,'' என்றார்.

★ ★ ★

# ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு நிதியுதவியும், தாலிக்குத் தங்கமும் வழங்கும் திட்டம்

## ஏழைப் பெண்கள் ஏக்கம் நீக்கி வாட்டம் போக்கும் அம்மாவின் அரசாணை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பெண் குழந்தைகள் அனைவரும் கட்டாயம் கல்வி பெற வேண்டும்; பெண் பிள்ளைகளை குறைந்தது 10ஆம் வகுப்பு முதல் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு வரை பயில வேண்டும்; கல்வி பயில வேண்டிய இளம் வயதில் பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பதைத் தவிர்க்க வேண்டும்; உரிய வயதில் பல்வேறு

குடும்பச் சூழ்நிலை காரணமாகத் திருமணத்தை நடத்த முடியாமல் இருக்கும் சூழ்நிலையைப் போக்க வேண்டும் – என்ற உன்னதமான நோக்கங்களோடு உருவாக்கிய திட்டம்தான் உயர்த்தப்பட்ட திருமண நிதி உதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டமாகும்.

அடித்தள மக்களின் நெஞ்சங்களிலும், ஆதரவற்றோர் உள்ளங்களிலும் குலவிளக்காகக் குடிகொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இத்திட்டத்தின் மூலம் 10ஆம் வகுப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு ரூ.25,000/– நிதி உதவியுடன், 4 கிராம் தாலிக்குத் தங்கமும், பட்டம் மற்றும் பட்டயம் படித்தவர்களுக்கு ரூ.50,000/– நிதி உதவியுடன், 4 கிராம் தங்கமும் வழங்க உத்தரவிட்டார்கள்.

இந்த ஆணையின்படி, படித்த ஏழைப் பெண்களுக்கு அவர்களது பெற்றோர் திருமணம் செய்துவைக்க மிகவும் சிரமப்படுகின்ற சூழ்நிலையைப் போக்குகின்ற வகையில் ஏழை எளிய இளம்பெண்களின் உள்ளங்களிலும் அவர்தம் இல்லங்களில் மகிழ்ச்சி பொங்கிடும் வகையிலும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 6.6.2011 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்த்தப்பட்ட நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

திருமணம் தங்கத்தினால் தடைப்படக்கூடாது என்று திருமணத்திற்கு நிதி உதவி வழங்குவதுடன், ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தின் மூலம், ஏழைப்பெண்களின் வாழ்வில் புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

**தங்க மனம் கொண்ட**
**தமிழக முதலமைச்சர்**
**மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய**
**தாலிக்குத் தங்கத்தினைப் பெற்றுத்**
**தங்களது பெண் குழந்தைகளின்**
**திருமணத்தைச் சிறப்புடன் நடத்திய**
**பெற்றோர் மற்றும் திருமணம் முடித்த பெண்கள்**
**நன்றியுடன் நினைவு கூர்வதைக் கேட்டறியலாம்**
**வாருங்கள்.**




**விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், கோபாலம் பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு தங்கப்பாண்டியன் மனைவி திருமதி பூங்கொடி திருமண நிதியுதவி மற்றும் தாலிக்குத் தங்கம் பெற்று, தனது மகளின் திருமணத்தை நடத்தியதைப் பற்றி மனம் கொள்ளா மகிழ்ச்சியுடன்,** தான் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், தானும் தனது கணவரும் கூலி வேலை செய்து வருவதாகவும், அன்றாட வருமானத்தால் தங்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்ல உகந்த சூழ்நிலை இல்லாதபோதும் தன்னுடைய பெண் குழந்தையை அருகில் உள்ள பள்ளியில் 10–ஆம் வகுப்பு படிக்க வைத்ததாகவும், பின்பு மாண்புமிகு தமிழக

முதல்வர் அம்மா அவர்கள் 2001 – 2006ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளி பயிலும் மாணவ / மாணவிகளுக்காகக் கொண்டு வரப்பட்ட இலவச மிதிவண்டியினை பெற்று அதன் மூலம் மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்தாகவும் கூறினார். மேலும், அவர் கூறியதாவது, ‘‘எனது மகள் திருமண வயதை எட்டிய நிலையிலும், பொருளாதாரப் பிரச்சினையால் திருமணத்தைக் குறித்த காலத்திற்குள் நடத்த முடியாமல் இருந்த சூழ்நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வையால் கொண்டு வரப்பட்ட திட்டத்தின் மூலம் ரூ.50,000/– திருமண நிதி உதவியுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கியதைப் பெற்று என்னுடைய மகள் திருமணத்தை பிறருடைய உதவியின்றி தன்மானத்துடன் எங்களால் நடத்த முடிந்தது. ஆகையால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு வாழ்நாள் முழுவதும் அம்மா அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம். எங்கள் வாழ்க்கையில் அம்மா அவர்களை என்றும் மறக்க முடியாது. அவர்கள் நீடுழி வாழ இறைவனை வேண்டிக் கொள்கிறோம்'' எனத் தெரிவித்தார்.

**சாத்தூர் வட்டம், சடையம்பட்டியைச் சேர்ந்த இ.கிருஷ்ணமூர்த்தி திருமண நிதியுதவி ரூ.25,000/–ம், 4 கிராம் தாலிக்குத் தங்கமும் பெற்றுக் கொண்டு கூறியதாவது**

‘‘நான் 30 ஆண்டுகளாக சைக்கிள் (மிதிவண்டி) பழுது பார்க்கும் பணியினை மேற்கொண்டு வருகிறேன். நாள் ஒன்றுக்கு ரூபாய் 150/– இருந்து ரூபாய் 250/– வருமானம் வருகிறது. அந்த வருவாயைக் கொண்டு என்னுடைய 3 பெண் பிள்ளைகளில் கடைசிப் பெண் பிள்ளையை மட்டும் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த வைக்க முடிந்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் எங்களைப் போன்ற ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகளின் திருமணத்திற்காகக் கொண்டு வரப்பட்ட சிறப்புமிக்க திட்டத்தின் மூலம் பயன் அடைந்து உள்ளேன். மேலும், ஏழ்மையில் வாழ்கின்ற நாங்கள் எங்களுடைய பெண் பிள்ளைகளின் திருமணத்திற்கு சீதனமாக செய்ய முடிகிறதோ இல்லையோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாய்க்குத் தாயாக இருந்து தாய் வீட்டுச் சீதனம் ஆக தாலிக்குத் தங்கமும் திருமண உதவியும் வழங்கி வருகிறார்கள். ஏழைப் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நன்றியினை அவர்களின் காலடிகளில் காணிக்கையாகப் படைக்கின்றோம்".


இ.கிருஷ்ணமூர்த்தி

**கோவை மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியம்**
**அன்னூர் கட்டபொம்மன் நகரைச் சேர்ந்த**
**திரு பழனிசாமி கூறுகையில்**


பழனிசாமி

“தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த நான் படிப்பறிவு இல்லாத காரணத்தால் விவசாயக் கூலி வேலைக்குச் செல்கிறேன். எனக்கு உடல்நிலை சரியில்லாமல்

கடினமான வேலைகள் செய்ய முடியாததால் மாதத்தில் 10 – 15 நாட்கள் மட்டும்தான் வேலைக்குச் செல்வேன். என் மனைவியும் வீட்டு வேலை தவிர வேறு வேலைக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளார். நாங்கள் கஷ்டப்பட்டு எங்கள் மகள் ஜெகதீஸ்வரியை பிளஸ் டூ வரை படிக்க வைத்தோம். அதற்கு மேல் படிக்க வைக்க எங்களால் முடியவில்லை.

எங்கள் மகளுக்குத் திருமணம் செய்யக்கூட பண வசதியில்லாமல் தவித்து வந்தோம். அப்போது தமிழக முதல்வர் அம்மா அவர்களின் 4 கிராம் தங்கம் மற்றும் திருமண உதவித் தொகை திட்டம் பற்றி அறிந்து அன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருமண உதவித்தொகை கேட்டு 20.05.2011 அன்று மனு கொடுத்தேன். அதன் பிறகு என் மகள் திருமணத்திற்கு திருமண உதவித்தொகை ரூ.25,000/– மும், 4 கிராம் தங்கமும் கிடைத்தது. தங்கம் விற்கும் விலையில் தங்கம் வாங்கி என் மகள் திருமணத்தை எப்படித்தான் நடத்தப்போகிறேனோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், முதல்வர் அம்மா அவர்கள் என் மகள் திருமணச் செலவிற்குப் பணமும், திருமாங்கல்யம் செய்யத் தங்கமும் கொடுத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் என் மகள் திருமணத்தை 3.06.2011 அன்று நடத்தினேன். இதன் மூலம் என் மகள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த தங்கமான மனதுகொண்ட நம் தமிழக முதல்வர் அம்மா அவர்களை என் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன், நம் முதல்வர் அம்மா அவர்களுக்குக் கோடான கோடி நன்றிகள்".

**கோவை மாவட்டம் அன்னூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குமாரபாளையத்தில் வசிக்கும் திருமதி ரத்தினம் கூறுகையில்**

என் கணவர் இறந்து விட்டதால் நான் மட்டும் கூலி வேலை செய்து என் குடும்பத்தை நடத்திக்கொண்டு என்

மகள் சுமதியைப் படிக்க வைத்தேன். என் மகள் நன்றாகப் படித்து நல்ல மதிப்பெண் பெற்றதால் அரசு உதவித்தொகை பெற்று பி.காம். வரை படித்தாள். மேற் கொண்டு படிக்க வைக்க முடியாத நிலையில் என் மகளுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தேன். திருமணம் செய்யப் பொருளாதார நிலை சரியில்லாததாலும் யாருடைய உதவியும் இல்லாததாலும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது தமிழக முதல்வர் அவர்கள் தாலிக்குத் தங்கம் மற்றும் திருமண செலவிற்கு நிதியுதவியும் தருவதை அறிந்தேன். 2.09.2011 அன்று என் மகளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்து 11.08.2011 அன்று திருமண நிதியுதவி கோரி விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பத்தைப் பரிசீலித்து என்னுடைய மகள் திருமணத்திற்குத் திருமண உதவித்தொகையாக 50,000/– மும் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் வழங்கினார்கள்.




எனக்கு உதவி செய்ய யாரும் இல்லாத நிலையில் கணவனை இழந்த நான் என் மகள் திருமணத்தை எப்படி நடத்துவது, யாரிடம் கடன் பெறுவது, அதை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது, என கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது புதையல் கிடைத்தது போல நம் தமிழக முதல்வர் அவர்கள் திருமண செலவிற்குப் பணமும் திருமாங்கல்யத்திற்குத் தங்கமும் கொடுத்து என் கவலையைத் தீர்த்தார்கள். எங்கள் குடும்பத்தை வாழவைத்த நம் முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோவை மாவட்டத்திலிருந்து சுமார் 60 கி.மீ. தொலைவில் உள்ள பொள்ளாச்சி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த ஆலாங்கடவு மலை கிராமத்தில் வசிக்கும் ராஜ் கூறுகையில்**




மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 10ஆம் வகுப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு ரூ.25,000/– பணமும் தாலிக்கு 4 கிராம் தங்கமும் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது அறிந்து எனது மகளின் திருமணத்திற்கும் உதவிட வேண்டி ஆனைமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பத்தை எடுத்துவந்து வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். எனது மகள் 10ம் வகுப்பு படித்த கல்விச்சான்று, சாதிச்சான்று, வருமானச்சான்று எல்லாம் அலுவலகத்தில் கொடுத்தேன். எனது மகளை படிக்க வைக்க மிகவும் சிரமப்பட்டேன். கூலிவேலை செய்து படிக்க வைத்தேன். நான் மலை ஜாதியைச் சார்ந்தவன். 10ம் வகுப்பு கஷ்டப்பட்டு படிக்க வைத்தேன். எனக்கு சொந்த வீடு இல்லை எந்தவிதமான சொத்துகளும் இல்லை. எங்களது சமூகத்தில் படித்தவர்கள் மிகவும் குறைவு; நான் படிக்க வில்லை, எனது மகளாவது படிக்கட்டும் என நினைத்தேன். ஆனால் தொடர்ந்து படிக்க வைக்க முடியவில்லை. மகள் திருமணத்தை எப்படி நடத்துவது என மிகவும் மன வருத்தத்துடன் இருந்தேன். கடன் வாங்கினால் திருப்பிக்

கொடுக்க இயலாதநிலை, அதனால் கடன் கொடுப்பவர்கள் யாரும் இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தெய்வம் போல வந்து, எனது மகளுக்கு திருமண நிதியுதவியாக ரூ.25,000/–மும், 4 கிராம் தங்கமும் வழங்கியது மிகவும் உதவியாக இருந்தது. எனது மகள் திருமணத்திற்கு என்று எந்தவித பணம் நான் சேர்த்து வைக்கவில்லை. திருமண நிதியுதவி கிடைத்த பணம் மிகவும் சந்தோசத்தைக் கொடுத்தது. யாரிடமும் கடன் வாங்காமல் திருமணத்தை முடித்தேன். உண்மையிலேயே எனது குடும்பம் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. எனது மகள் திருமணம் 10.07.2011–ல் நடைபெற்றது. என்னைப்போன்ற மலைவாழ் மக்களின் பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்ய உதவி செய்துவரும் முதல்வர் அம்மா அவர்களுக்கு நானும், எனது குடும்பத்தினரும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நீலகிரி மாவட்டம், பாரஸ்ட் கேட் புதுமந்து கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்பவரை கலப்புத்திருமணம் செய்துக்கொண்ட லதாமணி (வயது 23) கூறுகையில்**


லதாமணி

“எனது தாய் தகப்பனார் இருவரும் தேயிலைத் தோட்டத்தில் கூலி வேலை செய்து வருகின்றனர். என்னுடன் உடன்பிறந்தவர்கள் ஒரு ஆண், இரண்டு பெண்கள். கூலிவேலை செய்தாலும் என்னை நன்றாகப் படிக்க வைத்தனர். அவர்களது முயற்சியால் பி.காம்., முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று வெற்றி பெற்றேன். அடுத்தக் கட்டமாக எனக்குத் திருமணம் செய்து

வைக்க எனது பெற்றோர் முடிவெடுத்தபோது திருமணத்திற்குப் போதுமான தொகை கைவசமில்லாததால் திருமணக் காரியம் தடைபட்டு வந்தது. அச்சமயத்தில் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு பயின்ற பெண்ணிற்குத் திருமண நிதியுதவியாக ரூ.50 ஆயிரமும், 4 கிராம் தங்கமும் வழங்க உத்திரவிட்டுள்ளதை நாளிதழ்கள் வாயிலாகவும், தொலைக்காட்சி வாயிலாகவும் கண்டபோது எங்கள் குடும்பமே மிகவும் சந்தோஷம் அடைந்தது. அதன்பின் மணிகண்டன் என்பவரை எனது பெற்றோர் தேர்ந்தெடுத்து எனக்குத் திருமணம் செய்து வைத்தனர். எங்களது திருமணம் கலப்புத் திருமணமாகும்.

இன்றைய கால கட்டங்களில் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்குத் தங்கம் எட்டாக்கனியாக ஒரு கனவாகவே இருந்து வந்தது. தற்சமயம் அப்படிப்பட்ட ஒரு நிலை மாறி நாங்களும் மற்றவர்களைப்போல தங்கத்தில் தாலி அணிந்திருப்பதைக் கண்டு எங்கள் மனது சொல்ல முடியாத சந்தோஷத்தில் திளைக்கிறது. இத்தனைக்கும் காரணம் முதல்வர் அம்மா அவர்கள்தான். பெண்ணின் கஷ்டம் இன்னொரு பெண்ணிற்குத் தான் தெரியும் என்பார்கள். ஏழை, எளிய பெண்களின் மனதில் உள்ள கஷ்டத்தினை அறிந்து கேட்காமலேயே அள்ளிக் கொடுக்கும் தெய்வம் அம்மா ஒருவரே.

எத்தனையோ ஆட்சியாளர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். ஆனால், எவருமே திருமணத்திற்குத் தேவைப்படும் திருமாங்கல்யத்தைப் பற்றிச் சிந்தித்ததே இல்லை. ஏழைப் பெண்களுக்கும் ஒரு ஆசை இருக்குமே, at least,

தாலிக்காவது ஒரு பொட்டுத் தங்கம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்களே என்று யாருமே எண்ணிப் பார்க்கவில்லை; ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கியதில்லை. அரசியல் சரித்திரத்திலேயே முதன்முதலாகத் தாலிக்குத் தங்கம் வழங்கி மாண்புமிகு அம்மா சாதனை படைத்துள்ளார். சேமிப்பு என்பது எங்கள் வாழ்க்கையிலே நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். உறவினர்கள், நண்பர்கள் என எவரும் அடுத்தவரின் திருமணத்திற்கு உதவிட மறுக்கும் இக்காலக்கட்டத்தில் சொன்ன சொல்லை – கொடுத்த வாக்கை மறவாமல் அதனை நடைமுறைப் படுத்திய நமது தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எங்கள் குடும்பத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

**ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தில் தனது மகளுக்கு 4 கிராம் தாலிக்குத் தங்கமும், ரூ.50,000/– நிதியுதவியும் பெற்ற ஈரோடு மேட்டுநசுவம்பாளையம் அர்பன் பேங்க் காலனியைச் சேர்ந்த திருமதி சுப்புலட்சுமி (வயது 48) தெரிவித்ததாவது**

"நான் விவசாயக் கூலித் தொழிலாளி. எனது கணவர் பெயர் இரத்தினசாமி, அவர் இறந்து 15 வருடங்கள் ஆகிறது. எங்களுக்கு சுகந்தி என்ற ஒரே மகள் மட்டும் உள்ளார்.


சுப்புலட்சுமி

நான் கூலி வேலைக்குச் சென்று கிடைக்கும் கூலியை வைத்து மிகவும் சிரமப்பட்டு எனது மகளைப் பட்டப்படிப்பு படிக்க வைத்தேன். என் மகளும் B.Sc., கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டம் பெற்றாள். தற்போது எனது மகள் திருமணத்திற்கு பணம் இல்லையே, தாலி வாங்கக் கூட வழியில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். அப்போது தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பட்டம் பெற்ற பெண்களுக்கு ரூ.50,000/– திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் வழங்க உத்தரவிட்டுள்ளார் என எனது மகள் கூறினாள். உடனே அருகில் உள்ள ஈரோடு ஊராட்சி ஒன்றிய சமூகநல விரிவாக்க அலுவலரை அணுகி விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களோடு சேர்த்துக் கொடுத்தேன். எனது மனுவை ஏற்று என் மகளின் திருமணத்திற்கு ரூ.50,000/– திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

கணவரை இழந்து, கண்ணீர் சிந்தி, வாழ்வதற்கு வழியின்றி, என் மகளின் திருமணத்தை எவ்வாறு நடத்தப் போகிறேனோ என்று ஏங்கித் தவித்த எனக்கு, கண்கண்ட கடவுளாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.50,000/– திருமண நிதியுதவி உடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கத்தையும் வழங்கி என் ஏக்கத்தைத் தீர்த்துள்ளார். இதற்காக நானும், எனது மகள் மற்றும் அவரது குடும்பமும் ஆயுள் உள்ளவரை நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்போம்" எனக் கண்ணீருடன் நன்றி தெரிவித்தார்.

**இதே திட்டத்தில் பயன்பெற்ற ஈரோடு இராஜாஜிபுரத்தைச் சேர்ந்த கணவரை இழந்த சரசு (வயது 52) தெரிவித்ததாவது**




“எனது கணவர் இறந்து 20 வருடங்கள் ஆகிறது. எனக்கு இரண்டு மகன்களும் இரண்டு மகள்களும் உள்ளனர். 2 மகன்கள் மற்றும் 1 மகளுக்கு திருமணம் முடிந்து விட்டது. விவசாயக் கூலி வேலை செய்து குழந்தைகளைக் காப்பாற்றி அனைவருக்கும் வாழ்க்கை அமைத்துக் கொடுத்துவிட்ட நிலையில் கடைசி மகளான மரகதத்திற்கு திருமணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்தேன். வறுமையில் வாழ்ந்து, கூலி வேலை செய்து அதில் வரும் வருமானத்தை வைத்து கடைசி மகளை பட்டப்படிப்பு படிக்க வைத்து விட்டேன். திருமணத்திற்குச் சொந்த பந்தங்களிடம் பணம் கடனாகக் கேட்ட போது அனைவரும் உனக்கு எவ்வித நிரந்தர வருமானமும் இல்லை, கூலி வேலை செய்து எப்படி கடனைத் திருப்பிக் கொடுப்பாய் என கேட்டு கடன் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இதனால் மனது நொந்து போன எனக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் படித்த பட்டதாரி ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– திருமண நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் இலவசமாக வழங்குகிறார், அதன் மூலம் எனது திருமணத்தை நடத்தி

விடலாம் என எனது மகள் எனக்கு ஆறுதல் கூற, நானும் உடனே திருமண ஏற்பாடுகளை செய்து திருமண நிதியுதவி வேண்டி விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பித்த 20 நாட்களுக்குள் ரூ.50,000/– திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் இலவசமாக வழங்கினார்கள். எனது மகளின் திருமணத்தையும் சிறப்பாக நடத்தி முடித்தேன்.

ஆதரவற்ற எனக்கு சொந்தபந்தங்கள் கூட உதவ முன்வராத நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எனக்கு ஆதரவுக்கரம் நீட்டி நிதியுதவி வழங்கி இருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்துள்ளது. உற்றார், உறவினர்களே உதவி செய்ய முன்வராதபோது எனது மகளின் திருமணம் நடத்திட உதவிகரமாக இருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் எங்களுடைய முதல் சொந்தக்காரார். அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில் பயன்பெற்ற திண்டல், பெரியார் காலனியைச் சேர்ந்த செங்கோட்டையன் (வயது 55) தெரிவித்ததாவது**

''மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கு ரூ.25,000/– பணமும், திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்கமும் வழங்கி வருவதாகக் கேள்விப்பட்டேன். உடனே விண்ணப்பம் செய்தேன். தற்போது ரூ.25,000/– திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கத்தையும் வழங்கி எனது

மகளின் திருமணத்தை எப்படி நடத்துவது என ஏங்கித் தவித்த எனது தவிப்பை போக்கியுள்ளார். இந்த நன்றியினை நானும் எனது குடும்பமும் ஆயுள் உள்ளவரை மறக்கமாட்டோம். ஏழைக்கு உதவி செய்த எங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.




**இதே திட்டத்தில் பயன்பெற்ற ஈரோடு, பவானி மெயின் ரோடு, லட்சுமி நகரைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் பழனிச்சாமி (வயது 48) தெரிவித்ததாவது**




''நான் ஆட்டோ ஓட்டும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். எனது மனைவி தனலட்சுமி குடும்ப வேலைகளை மட்டும் செய்து வருகின்றார். என்னுடைய மகள் சங்கீதாவிற்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தேன். அதற்கு பணம் இன்றி தவித்து வந்தேன். எனது நண்பர்கள், உற்றார், உறவினர்களிடம் கடன் கேட்டு கிடைக்காத நிலையில் எனது மகளின் திருமணத்தை எவ்வாறு முடிக்கப்போகிறேன் என்று அஞ்சிக் கொண்டிருந்தேன்.



அப்பொழுது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருமணத்திற்கு நிதியும், திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்கமும் வழங்குகிறார் என்று அறிந்தேன். உடனே, அருகிலிருந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்று விண்ணப்பம் செய்தேன். எனது விண்ணப்பத்தைப் பரிசீலித்து, எனக்கு ரூ.25,000/– பணமும், 4 கிராம் தங்கமும் வழங்கினார்கள்.

எங்களைப் போன்ற ஏழைகளின் குடும்பங்களில் திருமணங்கள் சிறப்பாக நடத்திட வேண்டும், ஏழைகளின் துயரங்களை துடைத்திட வேண்டும் என எங்களுக்காக இது போன்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

★ ★ ★

# மாத ஓய்வூதியம் – உதவித்தொகை ரூ.500லிருந்து ரூ.1,000 ஆக உயர்வு

## நலிவுற்ற மக்கள் வாழ்வில் நலம் சேர்க்கும் அம்மாவின் நல்லரசு



"எல்லோர்க்கும் எல்லாம் இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்" என்ற பாவேந்தர் பாரதிதாசன் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மக்களாட்சியின் மாண்புகளை காக்கும் மகத்தான திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே

தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் குறிக்கோளாகும். “தமிழக மக்கள் யாரிடத்திலேயும் எதற்காகவும் கையைநீட்டிப் பெறுகின்ற நிலை இருக்கக் கூடாது. அந்த நிலையை எனது வாழ்நாளில் நான் காண வேண்டும், அதுதான் எனது இலட்சியம்" என அறிவித்து, அதற்கேற்ற திட்டங்களை வகுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற 16.05.2011 அன்று கையெழுத்திட்ட ஏழு முக்கிய திட்டங்களில் முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டப் பெண்கள் மற்றும் கைம் பெண்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத்தொகையை ரூ.500லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தி ஆணையிட்ட இத்திட்டமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இதன்படி ஆதரவற்ற முதியோர்கள், ஆதரவற்ற விதவையர், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளிகள், 50 வயது எய்தியும் வசதி வாய்ப்பின்றி திருமணமாகாத – உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்கள் ஆகியோருக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு அவர்களும் தங்கள் வாழ்வில் வளம் காண மாதாந்திர ஓய்வூதியத்தொகை ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.1000/– பெற்றுப் பயனடைந்து வரும் முதியோர், கைம்பெண்டிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சிலரின் மனங்கனிந்த கருத்துகள் வருமாறு**

**எவ்வித ஆதரவும் அற்ற வேலூர் மாவட்டம், குரிசலாம்பட்டு வள்ளியம்மாள் கூறியதாவது**


வள்ளியம்மாள்

"அய்யா எனக்கு 75 வயசாகுதுங்க என்னால வேலை வெட்டிக்குப் போக முடியலை. என்னோட கணவரும் இரண்டு வருடங்களுக்கு முன்னாடி இறந்துட்டாரு. எனக்கு இரண்டு பொண்ணுங்க அவங்களை கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டேன். இப்ப நான் தனியாதான் இருக்கேன் தமிழக முதலமைச்சர் அம்மா கொடுக்கிற இந்த ஆயிரம் ரூபாய் பணம் நான் சாப்பிட்டு உயிர் வாழறத்துக்கு உதவியா இருக்கு, முதல்வரு அம்மா நல்லா இருக்கணும்".

**வேலூர் மாவட்டம், ஆண்டியப்பனூரைச் சேர்ந்த அமிர்தம்மாள் கூறியதாவது**


அமிர்தம்மாள்

"அம்மா ஒசத்திக் கொடுத்த ஆயிரம் ரூபாயை என் வீட்டுக்கே வந்து கொடுத்துடுறாங்க. வயசான காலம் பாருங்க, நடக்கக் கூட முடியல. ஆதரவு இல்லாதவங்களுக்கு தெய்வம்தானே துணை! அப்படி தெய்வமா வந்து ஆயிரம் ரூபாய் அளித்த அம்மாவுக்கு நன்றி".

**விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், பெரியகடை பஜாரைச் சேர்ந்த திரு சிவகாமிநாதன் கூறுகையில்**




"எனக்கு வயதாகி விட்டதால் எந்தவித ஆதரவுமின்றி வாழ்ந்து வருகிறேன். குடியிருக்க வீடு கூடக் கிடையாது. வாடகை வீட்டில் மிகவும் சிரமமான நிலையில் வாழ்ந்து வருகிறேன். எனக்கு முதியோர் உதவித் தொகையாக ரூ.1000/– கிடைத்தது மிகவும் சந்தோசமாக உள்ளது. இன்றைய சூழ்நிலையில் ரூ.1000/– என்பது வயதான எனக்குப் போதுமானதாக உள்ளது. உதவித் தொகையுடன் அம்மாவின் ஆட்சியில் இலவச அரிசியும் வழங்கப்படுவதால் வயிறாற சாப்பிட முடிகிறது.

மற்ற செலவுகளுக்குப் பணம் தேவை என்று யாரிடமும் கையேந்தத் தேவையில்லை. வயிறாற சாப்பிட இலவச அரிசியும், மற்ற செலவுகளுக்குப் பணமும் கொடுத்து என்னைச் சொந்தக் காலில் நிற்கச் செய்த ஏழைகளின் இதய தெய்வம், புண்ணியவதி, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை நான் என்றும் மறக்க மாட்டேன். அவர்கள் நீண்ட காலம் தமிழக முதல்வராக இருந்து என்னைப்போல ஆதரவற்ற முதியோர்களைக் காப்பாற்ற வேண்டும் என மனதார ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்''.

**விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அம்பலபுலிபஜார், சிவகாமிபுரம் தெருவில் வசிக்கும் திருமதி பாக்கியலெட்சுமி கூறுகையில்**

"கூலித் தொழில் செய்து வந்த நான் வயதாகி விட்டதால் எந்த வேலையும் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுத்

தனிமையில் வாழ்ந்து வந்தேன். எனது பிள்ளைகளுக்குத் திருமணமாகி தனியாகச் சென்று விட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் என் போன்ற ஆதரவற்ற முதியோர்களுக்கு ரூ.1000/– மாதந்தோறும் வழங்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து நான் உதவித் தொகை வேண்டி விண்ணப்பம் செய்தேன். எனக்கு உடனடியாக உதவித் தொகை கிடைத்தது. இதனால் இப்போது மனதைரியத்துடன் இருக்கிறேன். நல்லது கெட்டது பார்க்க முடிகிறது. எங்களைப் போன்ற ஆதரவற்ற முதியோர்களுக்குப் பிள்ளையாக இருந்து பாதுகாக்கும் தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் எப்போதும் தமிழக முதல்வராகவே இருக்க வேண்டும்".


பாக்கியலெட்சுமி

**விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அண்ணாநகரில் வசிக்கும் திருமதி.முத்துப்பேச்சி கூறுகையில்**

"ஜெயலலிதா அம்மா அவங்க வயசானவங்களுக்கெல்லாம் உதவித் தொகையாக ரூ.500/–ஐ 1000/– ஆக உயர்த்தி உத்தரவு போட்டிருக்காங்க எனக் கேள்விப்பட்டதும் ரொம்ப சந்தோசமாக இருந்தது. இலவச அரிசி வேற கெடைக்குது! அடுத்த வேளை சாப்பாட்டுக்கு என்னப் பண்ணப்போறோம் என்ற கவலையும்


முத்துப்பேச்சி

இனிமேல் இல்லை. எனக்கு உடம்புக்கு முடியவில்லை. நடக்கவும் முடியவில்லை. உண்மையிலேயே இந்த ரூ.1000/– உதவிப் பணம் என் சிரமத்தைப் போக்கும். என் சிரமத்தைத் தீர்த்த அந்த மகராசி அம்மாவுக்குக் காலமெல்லாம் நான் நன்றி சொல்வேன் என்றும் நன்றிக் கடன் பட்டவளாக இருப்பேன்".

**விருதுநகர் ரோசல்பட்டியைச் சேர்ந்த**
**திரு சந்தனதேவா கூறுகையில்**


சந்தனதேவா

"எனக்குக் கெடைக்கிற உதவித் தொகை இனிமே மாசாமாசம் 1000 ரூபாயா கிடைக்கும்னு நெனைச்சாலே மனசு ரொம்ப பூரிப்பாக இருக்கு. அம்மா குடுக்கிற அரிசியை சமைச்சி, இந்தப் பணத்தை வச்சி சத்தான காய்கறிங்க வாங்கி குழம்பு வெச்சி ருசியோட வயிறார சாப்பிடுறேன்.

இந்த வயசான காலத்தில் ஆசைப்படுகிற பொருள்களை இந்தப் பணத்துல வாங்கி சாப்பிடலாம். என்னைப் போன்றோருக்கு மாதந்தோறும் ரூ.1000/– கொடுக்கும் மகராசி அம்மா நல்லாயிருக்கோணும். முதியோர்களைக் காப்பாத்துற காவல் தெய்வம் அம்மா நீடூழி வாழணும்னு தெனமும் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்கிறேன். எப்பொழுதும் அம்மாவுக்கு விசுவாசமாக இருப்பேன்".

**பெரம்பலூர் மாவட்டம் தண்ணீர்பந்தல் கிராமத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித்தொகை பெற்று வரும் மாற்றுத்திறனாளி திருமதி லெட்சுமி தெரிவிக்கையில்**


லெட்சுமி

"எனது தந்தையார் பெயர் வையாபுரி. என்னால் சரியாக நடக்க முடியாது. இதனால் நினைத்த இடங்களுக்குச் சென்று வருவது, ஆசைப்படும் வேலைக்குச் செல்வது என்பது என்னால் இயலாத காரியமாகும். தையல் தொழில் செய்து என் வாழ்க்கையை நடத்தி வருகின்றேன். எனது குழந்தை தற்போது எல்.கே.ஜி. படித்து வருகிறாள். எனது குழந்தையின் கல்வியை மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு அளிக்கும் மாதாந்திர உதவித் தொகையைக் கொண்டு என்னால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

**முதியோர் உதவித்தொகை பெறும் செல்லம்மாள் (வயது 76) தெரிவிக்கையில்**


செல்லம்மாள்

"என் வூட்டுக்காரர் பேரு வெள்ளையன். எனக்கு எளம்பலூர்தான் ஊரு. எனக்கு வயசாகிடுச்சு. என்னால என்னோட வேலைகளைச் செய்வதே முடியாத காரியம். எம் பொண்ணப் பாக்கணும்; என் பேரக் குழந்தைகளைக் கொஞ்சணும் ஏதாவது வாங்கித் தரணும்னு எனக்கு ரொம்ப ஆசை. என் வாழ்க்கையில அவங்கள எனக்கு ரொம்பவும் பிடிக்கும்.

முதலமைச்சர் அம்மா மாத உதவியை 1,000மா வழங்கறதால என் செலவுல கொஞ்சம் மிச்சம் பிடிச்சி பேரக் குழந்தைகளுக்குத் தேவையானதை வாங்கித்தந்து அவங்க சந்தோசப்படறத பார்த்து நானும் சந்தோசப்படுவேன். இதுக்கெல்லாம் காரணமாக உள்ள அம்மாவுக்கு நன்றி ".

**கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் – வாகையடி வடக்குத் தெருவைச் சார்ந்த திருமதி சுப்பம்மா (வயது 55) அவர்கள் ஆதரவற்றோருக்கான உதவித்தொகை பெறுவது குறித்து கூறும்பொழுது**


சுப்பம்மா

"எனது கணவர் காலமாகி விட்டதால் எந்தவித ஆதரவுமின்றி வாழ்ந்து வருகிறேன். குடியிருக்க வீடுகூட கிடையாது. வாடகை வீட்டில் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வரும் எனக்கு ஆதரவற்றோருக்கான உதவித்தொகை ரூ.1,000/– முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்க உத்தரவிட்டது சந்தோஷமாக உள்ளது. ரூ.1,000/– என்பது இன்றைய சூழலில் என் ஒருத்திக்குப் போதுமானதாக உள்ளது. உதவித்தொகையுடன் இலவச அரிசியும் வழங்கப்படுவதால் வயிறாற சாப்பிட முடிகிறது. பணம் தேவை என்று யாரிடமும் கையேந்தத் தேவையில்லை. வயிறாற சாப்பிட பணம் கொடுத்து இலவசமாக அரிசியும் கொடுத்து என்னை சொந்தக்காலில் நிற்கச் செய்த அந்த புண்ணியவதியை என்றும் மறக்க மாட்டேன்" என்றார்.

**கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாரைச் சார்ந்த திரு எம். சண்முகம் (வயது 77) முதியோருக்கான உதவித்தொகை பெறுவது குறித்து கூறும்பொழுது,**




"நெசவுத்தொழில் செய்து வந்த நான், வயதாகி விட்டதால் எந்த வேலையும் செய்ய முடியாமல் ஒரு வேளை சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். எனது ஒரே மகன் திருமணமாகி என்னைத் தனியா விட்டுட்டுச் சென்று விட்டான். இந்த நிலைமையில என்னைப் போன்ற முதியோருக்கு முதலமைச்சர் அம்மா அவர்கள் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவிச்சி, உடனடியாக உதவித்தொகை கிடைத்திடச் செய்தார். அதனால இப்போ வயிறாறச் சாப்பிட முடியுது. நான் சந்தோசமாக இருக்கிறேன். என்னைப் போன்ற வயசானவங்களை வாழ வைக்கின்ற தாயுள்ளம் உள்ள முதலமைச்சர் அவர்கள் எப்பவுமே தமிழக முதலமைச்சரா இருக்கணும். அதுதான் என் ஆசை" என்று கூறினார்.

**கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலைச் சார்ந்த திரு ராமாச்சாரி (வயது 70) அவர்கள் கூறுகையில்**

"வயதான காலத்தில் தெருத்தெருவாக சென்று சுண்டல் வியாபாரம் செய்து வருகிறேன். எனது ஒரே மகள் திருமணமாகிச் சென்ற பின் எந்தவித ஆதரவுமின்றித் தனியாக வசித்து வருகிறேன். சுண்டல் வியாபாரத்தில் கிடைத்த குறைந்த வருமானத்தில் மிகவும் கஷ்டத்துடன்

வாழ்ந்து வந்தேன். ஜூன் மாதம் முதல் எனக்கு ரூ.1,000/– உதவித்தொகை கிடைத்து வருகிறது. எனது வாழ்விலும் சந்தோஷத்தைக் கொடுத்த அம்மா அவர்களை என்றும் மறக்க மாட்டேன். என் வாழ்நாள் முழுவதும் அம்மா அவர்களுக்குக் கடமைப்பட்டவனாகவே இருப்பேன்" என்றார்.




**திண்டுக்கல் மாவட்டம் பள்ளிக்கூடத்தான்வலசு கிராமத்தைச் சேர்ந்த கருப்பணக்கவுண்டர் மனைவி தங்காத்தாள் (வயது 83) கூறும்போது**

"எனக்கு ஆதரவு யாரும் இல்லை. வாழ வழியும் இல்லை. முதல்வர் அம்மா கொடுக்குற ஆயிரம் ரூபாய் உதவியால்தான் என்னோட காலம் பூராவும் துயரம் இல்லாமல் இருக்கும். என்னுடைய கடைசி காலத்துல கிடைக்கிற இந்தப் பணம் என் வாழ்வை தள்ளுதற்கு ரொம்ப உதவியா இருக்குது. முதலமைச்சர் அம்மா தான் என் குலதெய்வம், என் மக மாதிரி, என் ராசாத்தி, அவங்க நீடூழி ரொம்ப நாள் வாழனும்," என்று நெகிழ்ச்சியோடு கூறினார்.



**விழுப்புரம் மாவட்டம், வழுதாரெட்டி ஊராட்சி, பெருமாள் கோயில் தெருவைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணவேணி (வயது 80) கூறுகையில்**


கிருஷ்ணவேணி

"என் பெயர் கிருஷ்ணவேணி, எனக்கு 80 வயதாகிறது. என்னால் எந்த வேலைக்கும் செல்ல முடியவில்லை. எனது பிள்ளைகள் யாரும் என்னைக் கண்டு கொள்வதில்லை. நானும் அவர்கள் குழந்தை குட்டிகளுடன் இருப்பதால் தொந்தரவு செய்யவில்லை. அரைவயிற்றுக் கஞ்சியைக் குடித்துக் காலம் தள்ளி வருகிறேன்.

ஏற்கெனவே நான் ரூ.500/– பென்சன் கவர்மெண்டிலிருந்து வாங்கிட்டிருந்தேன். ஆனால், மகராசி அம்மா எங்களுக்கெல்லாம் ரூ.1,000/–ம் தருவேன்னு சொன்னாங்க. யாரு சொன்னத செஞ்சிருக்காங்க என நினைத்தேன். ஆனா எல்லாரும் சொன்னாங்க அந்த மகராசி பதவியேத்துக்கிட்டதும் முதல் கையெழுத்தா எங்கள மாதிரி வயசானவங்களுக்குப் பென்சன் உயர்த்தி ரூபா 1,000மா கொடுத்துருக்காங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கு. இனி நான் பணம் தேவையின்னு யாருக்கிட்டேயும் போகத் தேவையில்லை. வயிறாற சாப்பிட அந்த மகராசி பணம் கொடுத்திருக்காங்க. காலம் பூரா எங்களுக்குப் படியளந்த மகராசிய மறக்கமாட்டோம். எங்களுக்காக அவங்க நீடூழி வாழனும்" எனக் கண்ணீர் மல்கக் கூறுகிறார்.

**விழுப்புரம் மாவட்டம், வழுதாரெட்டி ஊராட்சி பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த திருமதி லட்சுமி (வயது 75) கூறுகையில்**



“ஜெயலலிதா அம்மா வயசானவங்களுக்கு எல்லாம் 500 ரூபாயை 1,000 ரூபாயாகக் குடுக்க உத்தரவு போட்டிருக்காங்க. கேக்கவே ரொம்ப சந்தோஷமாக இருக்கு. அடுத்த வேலை சாப்பாட்டுக்கு என்ன பண்ண போறோம் அப்படிங்குற கவலை இனிமேல் கிடையாது. எனக்கு உடம்பும் முடியல, நடக்கவும் முடியல, உண்மையிலேயே இந்தப் பணம் என் கஷ்டத்தைப் போக்கும். என் கஷ்டத்தைத் தீர்த்த, அந்த மகராசிக்குக் காலமெல்லாம் நான் நன்றி சொல்வேன்".

**விழுப்புரம் மாவட்டம், திருப்புச்சாவடிமேடு, மாரியாத்தா கோயில் தெருவைச் சேர்ந்த திருமதி புஷ்பாவதி (வயது 70) கூறுகையில்**



"எனக்கு வயசாயிடுச்சு, பென்சன் இனிமே 1,000 ரூபாயா கிடைக்கும் என்ற சந்தோஷம் மனசு பூரா நிக்குது. என் மகள் வயித்துப் பேத்தி என்கூட இருக்குறா. அவ பேரு சந்தானலட்சுமி. 8ஆம் கிளாஸ் படிக்கிறாள். அந்த மகராசி எனக்கு 1,000 ரூபா கொடுத்ததோடு 20 கிலோ அரிசி இலவசமா



கொடுக்கறேனு சொல்லிட்டாங்க. எனக்கு அதிலேயும் பணம் மிச்சம் ஆவுது. இதனால என் பேரப்பிள்ளைக்கு ஆசப்பட்டத வாங்கிக்கொடுக்க முடியுது. எனக்குக் கிடைக்கிற பணத்துல நல்ல கொழம்பு வச்சி வயிறாற சாப்பிட முடியும். வெத்தல, பாக்கு போட முடியும். காலமெல்லாம் நான் சந்தோஷமாக இருப்பேன். எங்களை வாழ வைத்த அந்தப் புண்ணியவதி எப்பவுமே முதலமைச்சராவே இருக்கணும் அப்படின்னு ஆண்டவன வேண்டிக்கிறேன்''.

* * *

# மீன்பிடித் தடைக்கால நிவாரணம் 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணை

## கனிவுடன் மீனவர்களைக் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைமிகு அரசு!



தமிழக மக்கள் வாழ்வு வளம்பெற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் மகத்தான ஏழு திட்டங்களுக்கான கோப்புகளில் கையொப்பமிட்டார்கள். அதில் முக்கியமாக, தரையில் பிறந்து, தண்ணீரால் வாழ்ந்திடும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்

நோக்கத்தில் மீனவர்களுக்கு மீன்பிடித் தடைக் காலத்தில் வழங்கப்படும் உதவித்தொகையை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். இந்த ஆணை, மீனவ சமுதாய நலனுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதை பறைசாற்றுவதாக அமைகின்றது.

மீன்களின் இனப்பெருக்கக் காலத்தையொட்டி தமிழகத்தில் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை 45 நாட்கள் விசைப்படகுகள் மூலம் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்படுகிறது. இந்த நாட்களில் விசைப்படகு மீனவர்கள் கடல்மிசை செல்லாது கரையில் இருந்தபடி தங்கள் படகுகளை சீரமைத்தல், வண்ணம் பூசுதல், வலைகளை சீரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு 45 நாள் தடைக்காலத்தில் வேலையின்றித் தவிக்கும் மீனவர்களுக்கு உதவும் வகையில் தமிழக அரசு சார்பில் மீன்பிடித் தடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ரூ.1,000 ஆக வழங்கப்பட்ட இத்தொகையை, ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இதனால் மீனவர்கள் இதுவரை அடையாத எல்லையில்லா மகிழ்ச்சியினையும், பயனையும் அடைந்துள்ளனர்.

ஆண்டுதோறும் இந்த நிவாரணத் தொகை ஜூன் அல்லது ஜூலை மாதத்தில்தான் கிடைக்கும். தேவையான நேரத்தில் உதவித்தொகை கிடைக்காததால் மீனவர்களுக்கு பயன் இல்லாத நிலை இருந்தது. தொலைநோக்குச்

சிந்தனையுடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தற்போது தடைக்கால நிவாரணத் தொகை மே மாதத்திலேயே வழங்கியது மீனவ மக்களிடையே புதிய நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியுள்ளது.

**இதுவரை ரூ.1000 ஆகப் பெற்று வந்த மீன்பிடி தடைக்கால நிவாரண உதவியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டபடி, ரூ.2000 ஆகப் பெற்ற மீனவப் பெருங்குடி மக்கள் தெரிவித்த மகிழ்ச்சி கலந்த நன்றிக் குரல் வருமாறு:**

**கடலூர் மாவட்டம் சொத்திக்குப்பத்தைச் சேர்ந்த திரு தமிழரசனின் மனைவியான திருமதி அலமேலு அவர்கள் தெரிவிக்கையில்**


அலமேலு

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா ஆட்சிக்கு வந்தவுடனே யாருமே நினைத்துக்கூட பார்க்க முடியாத வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்கள் மீனவ மக்கள் மீது வைத்திருக்கிற அன்பையும் அக்கறையையும் காட்டற மாதிரி உதவித்தொகை 1000 ரூபாயை இரண்டு மடங்காக்கி 2000

ரூபாய்ன்னு தேர்தலப்ப சொன்ன மாதிரியே உத்தரவு போட்டாங்க. அதோட, அந்தப் பணத்த சரியான நேரத்தில எங்கள தேடிவந்து கொடுத்தது ரொம்ப சந்தோசங்க. அம்மா ஆட்சியில இருக்கும்போது, எங்க வாழ்க்கையில கவலையே இருக்காது" என மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

**கடலூர் மாவட்டம் சலங்கைக்கார கிராமத்தைச் சேர்ந்த மீனவர் திரு பாவாடை என்பவரது மகன் திரு ராஜா**

"மாவட்டம் முழுவதும் விசைப்படகு மீனவர்கள் அனைவருக்கும் நிவாரண உதவித் தொகை 2000 கிடைக்க ஆணையிட்ட அம்மாவின் அரசுக்கு நாங்கள் எப்பவும் நன்றியோட இருப்போம். மீன்பிடிக்கத் தடை இருந்த


ராஜா

காலத்தில வருமானத்துக்கு வழி இல்லாதப்ப பணம் கொடுத்ததால எங்க செலவுக்கு ரொம்ப உதவியா இருந்துச்சு. அந்தப் பணம் கிடைச்சதால, நான் கடலுக்குப் போகலங்கற பாதிப்பே இல்லாம குடும்பம் நடத்த முடிஞ்சுது" என்றார் ராஜா.

**சென்னை, மாவட்டம் இராயபுரம் 4–ஆவது தெருவைச் சேர்ந்த திரு அபிசேகர் மனைவி திருமதி சூர்யகலா தெரிவித்ததாவது:–**

"எங்க வீட்டுக்காரர் பெயர் அபிசேகர். நாங்கள் புதுகாமராஜர் நகரிலே குடியிருந்து வருகிறோம். முதலமைச்சர் அம்மா, மீன்பிடித் தடைக்காலத்தில் தொழில் பண்ண முடியாத மீனவர்களுக்கு ரூ.2,000/–

கொடுக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுடைய கஷ்டத்தை அறிஞ்சு, இந்த திட்டத்தை அறிவிச்சதிலே மகிழ்ச்சியாக இருக்கிறோம். இது தகுந்த நேரத்திலே செய்த உதவியாக நினைக்கிறோம். மீன்பிடி தடைக்காலத்தில் பிள்ளைகளுக்கு ஸ்கூல் பீசு கட்ட வட்டிக்கு வாங்கிக் கொடுப்போம். அம்மா ஆட்சிக்கு வந்ததால் அந்தக் கஷ்டம் போச்சு. இந்தத் திட்டம் ஏழை மீனவர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கு, கடலும் – புரட்சித் தலைவி அம்மா அவர்களும்தான் எங்களுக்குத் துணை'' என்று மகிழ்ச்சி பொங்க நன்றி கூறினார்.


அபிசேகர் – சூர்யகலா

**சென்னை இராயபுரம் பவர்குப்பம் 10–வது பிளாக்கைச் சேர்ந்த ராஜா–மணிமேகலை மீனவர் தம்பதிகளை மீன்பிடி தடைக்கால நிவாரண உதவி குறித்து கேட்டபோது,**

"அம்மா ஆட்சிக்கு வந்ததும், மீனவ மக்களுக்கு, மீன் பிடிக்கக் கடலுக்குப் போகாத காலத்திற்கு உதவித் தொகையாக ரூ.2,000/–ம் கொடுக்கச்சொல்லி ஆணையிட்டு, அந்தப் பணம் குடும்ப அட்டையுள்ள ஒவ்வொரு மீனவக் குடும்பத்துக்கும் கிடைச்சது. அம்மாதான் எங்க கஷ்டத்தை அறிஞ்சு


து. ராஜா–மணிமேகலை

இந்தத் தொகையை வழங்கியிருக்காங்க, அம்மா கொடுத்த ரெண்டாயிரத்திலே, உளுந்து வாங்கி, இலவச அரிசியோடு சேர்த்து மீனவக் குப்பத்திலே இட்டிலி செய்து வித்தேன், எங்க குடும்பத்து சாப்பாடு போக நாள்தோறும் ரூ.150 கிடைச்சுச்சு. எங்களுக்குக் கஷ்டம் தெரியலே. ஏழை மீனவக் குடும்பங்களின் கஷ்டத்தைப் புரிஞ்சு இந்தத் திட்டத்தை செயல்படுத்தற அம்மாவை, கடல் அன்னையாக இருந்து எங்களைக் காக்கும் தெய்வமாக நினைக்கிறோம்.' என்று தனது நன்றியை வார்த்தைகளாய் வெளிப்படுத்தினார்.

**புதுக்கோட்டைமாவட்டத்தைச் சேர்ந்த திரு சின்னையாவேல் கூறுகையில்**



சின்னையாவேல்

"பிறப்பிலேயே மீனவர்களாகியஎங்களுக்கு மீன்பிடித்தொழிலைத் தவிர வேறு எதுவும் தெரியாது. மீன் பிடித் தடைக்கால நிவாரண உதவித் தொகை ரூ.1000/–மாக இருந்ததை மீனவர் நலன்காக்கும் மாண்புமிகு தமிழக முதல்வரின் பொற்கால ஆட்சியில் ரூ.2000/–மாக உயர்த்தி மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளார்கள். அவ்வாறு உயர்த்திய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீனவ சமுதாய மக்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்".

**புதுக்கோட்டை புதுக்குடியைச் சேர்ந்த திரு.ப.குப்பவேலு கூறுகையில்**

"மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் நாங்கள் அதில் கிடைக்கும் வருமானத்தை நம்பித்தான் குடும்பம் நடத்தி வருகிறோம். மீன்பிடித் தடைக்கால உதவித்தொகை முன்பு

ரூ.1000/– வழங்கி வந்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மீன்பிடித் தடைக்கால உதவித் தொகையினை ரூ.2000/–மாக உயர்த்தி எங்களைப் போன்ற மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்வில் ஒளியேற்றி உள்ளார்கள். மாண்புமிகு அம்மாவின் உயர்ந்த உள்ளத்தை நினைத்துப் பெருமிதம் கொள்கிறோம். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு மீனவ சமுதாயம் என்றுமே நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்போம். பாசமிகு தாயின் ஆட்சியில் இனி நாங்கள் மகிழ்ச்சியாக இருப்போம்".


ப. குப்பவேலு

**புதுக்கோட்டை புதுக்குடியைச் சேர்ந்த திருமதி அ.விக்டோரியா கூறுகையில்**

"மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்து வரும் எங்களைப் போன்றவர்களுக்கு மீன் இனப்பெருக்கத்திற்காக ஏப்ரல் 15 முதல் மே 29 வரை 45 தினங்கள் மீன்பிடித் தடைக்காலமாக அரசு உத்தரவிட்டுள்ளது. மீன்பிடித் தடைக்காலங்களில் நாங்கள் கடலுக்குள் செல்ல அனுமதிப்பது கிடையாது. தொழிலுக்குச் செல்ல முடியாத அந்த காலகட்டத்தில் உணவுக்கு சிரமப்படும் நிலை. முன்பு வழங்கப்பட்ட உதவித் தொகையினை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள்


அ.விக்டோரியா

நாங்கள் எதிர்பாராத அளவிற்கு ரூ.2000/–மாக உயர்த்தி பதவியேற்ற அன்றே மீனவ சமுதாயமே வியக்கும் வகையில் நிறைவேற்றியுள்ளார். அவருக்கு மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களாகிய நாங்கள் எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்".

**புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திரு ஆர். முனியசாமி தெரிவிக்கையில்**


ஆர். முனியசாமி

"பிறப்பிலேயே மீனவர்களான எங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கருணை தெய்வம், மீனவர்களின் துயர் துடைக்கும் அம்மா அவர்கள், தான் பதவி ஏற்ற அன்றே எங்களின் வாழ்வில் ஒளியேற்றி மீன்பிடி தடைக்கால நிவாரண உதவித் தொகையினை ரூ.2000/–ஆக உயர்த்தி வழங்கி எங்கள் மனங்களில் தெய்வமாக வீற்றிருக்கிறார்".

**புதுக்கோட்டை மாவட்டம் ஆர். புதுப்பட்டினத்தைச் சார்ந்த திரு முனியப்பன், கூறுகையில்**


முனியப்பன்

"மாண்புமிகு அம்மாவின் கடந்த கால ஆட்சியில் ஆர்.புதுப்பட்டினம் கிராமத்தில் 3000 மீனவர்கள் பயன்பெறும் வகையில் மீன்பிடி படகுகள் இறங்குதளம் (Fish Landing Centre) அமைக்க ரூ.4½ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,

பணிகள் தற்சமயம் நிறைவடையும் நிலையில் உள்ளது. எங்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் நிலையில் மீண்டும் அம்மாவின் பொற்கால ஆட்சி பொறுப்பேற்று இதய தெய்வம் அம்மா அவர்கள் எங்கள் மீனவ சமுதாயத்தின் சிரமம் அறிந்து தடைக்கால நிவாரண உதவித் தொகையினை உயர்த்தி வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மீனவர்களின் நலனில் அக்கறை காட்டும் அம்மாவின் அரசு ஆட்சி பொறுப்பேற்றதில் எங்கள் மீனவ சமுதாயமே மகிழ்ச்சியடைகிறது. மீன்பிடித் தடைக்காலத்தில் உணவுக்கே சிரமப்பட்டோம். ஒரு தாய்க்குத்தான் தெரியும் தனது குழந்தைகளின் பசியைப் பற்றி மீனவர் உதவித் தொகையினை ரூ.2,000/– ஆக உயர்த்தி வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தாயன்பை உயிர் உள்ள வரை மறக்க மாட்டோம்".



★ ★ ★

# தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர் புதுவாழ்வுபெற ஏற்றமிகு திட்டங்கள்

## இலங்கைத் தமிழர் நலன்காக்கும் மாண்புமிகு அம்மாவின் மனிதநேய நல்லாணை!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அரசு வெளியிட்ட அரசாணை 480: இலங்கையில் தப்பித்து உயிர் பிழைத்துப் படகேறித் தமிழகம் வந்த இலங்கைத் தமிழர்களை வரவேற்று, அவர்களின் கண்ணீரைத் துடைத்து, தங்குவதற்கு தனியிடம் கொடுத்தது, திக்கற்றுத் திரியும் – திகைப்புடன் அலையும் அவர்களின் மனதிற்கு மாமருந்தாய் அமைந்தது. இந்த அரசாணையின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகமானது, ஈழத்தமிழர்களின்

நெஞ்சங்களில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாணை தமிழகத்தில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் ஆணை மட்டுமல்ல. அவர்கள் வேறு எவரும் அல்ல; எங்களுள் ஒருவரே என்று மனிதாபிமானத்திற்கு பக்கபலமாக வெளிவந்துள்ள வரலாற்றுச் சிறப்புடைய அரசாணையுமாகும்.

தமிழக அரசு 3.06.2011 அன்று ஆளுநர் உரையில் “இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப் பட்டு அவர்கள் தமிழகத்திலேயே கௌரவமாக வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அவர்கள் தங்கியுள்ள முகாம்களில் தரமான இருப்பிடம், குடிநீர் வசதி, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து தரப்படும். இலங்கைத் தமிழ் வாழ் மக்களின் குழந்தைகள் கல்வி பயிலத் தேவையான உதவி வழங்குவதுடன் அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு சிறப்பு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், தமிழ்நாட்டில் செயல் படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்படும்” என்று அறிவித்தது.

காலத்தால் ஏற்பட்ட மாற்றம் இலங்கை முகாம் வாழ் தமிழர்களின் வாழ்க்கையையும் மாற்றி அமைத்தது. அதன்படி தமிழகத்தில் உள்ள 114 அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் பயனடையும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இலங்கைத் தமிழர்களில் 65 வயதுக்கு

மேற்பட்ட முதியோர் 2,580 பேரும், 2,518 விதவைகளும், 182 ஆதரவற்ற பெண்களும், 264 மாற்றுத் திறனாளிகளுக்கும் அவர்தம் தகுதி அடிப்படையில் மாதந்தோறும் ரூ.1000/– வீதம் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், பெண்குழந்தை பாதுகாப்புத்திட்டம் செயல்படுத்தப்படும் முகாம்களில் 3,778 பேர் தையல் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுக்கு ரூ.1.13 கோடி செலவில் தையல் இயந்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டம் பட்டம் பெற்ற பெண்களுக்கு தலா ரூ.50,000/–மும், 4 கிராம் தங்கம், இதர பெண்களுக்கு தலா ரூ.25,000/–மும், 4 கிராம் தங்கம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலவச அரிசித் திட்டம் இலங்கை முகாம் தமிழர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளில் மானிய விலையில் சர்க்கரை, கோதுமை மாவு, பாமாயில், பருப்பு மற்றும் ரவை வழங்கப்படும். இதற்கான இழப்பீடு ஆண்டிற்கு ரூ.5.80 கோடியாகும்.

தமிழகத்திலுள்ள பட்டதாரியில்லா குடும்பங்களில் ஒற்றை சாளர முறையில் தேர்ந்தெடுத்து தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கல்விக்கட்டணத்தில் சலுகை வழங்கப்படும் திட்டம் முகாம் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

## முகாம் வாழ் இலங்கைத் தமிழர் தங்கள் எண்ண ஓட்டங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள் இங்கே

**விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் இலங்கை அகதிகள் முகாம் திரு பி.மோகன் கூறுகையில்**


பி.மோகன்

"நாங்க இலங்கையிலிருந்து வந்து இங்கு (தமிழ்நாட்டில்) 20 வருடமா தங்கியுள்ளோம். இம்முறை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் தமிழக மக்களுக்குச் செய்துள்ளதைப் போல எல்லா திட்டங்களும் ஈழத்தமிழர்களாகிய எங்களுக்கும் கிடைக்கச் செய்துள்ளார்கள். குறிப்பாக, இலவச அரிசி, முதியோர் ஓய்வூதியத்தொகை, பெண் குழந்தைகளுக்கு வைப்பீட்டுத் தொகை, திருமண நிதியுதவி, திருமாங்கல்யத்திற்கான தங்கம், தொழில் கல்லூரியில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்குக் கல்விக்கட்டணச் வழங்குதல் உள்ளிட்டவைகளை வழங்குவதாக அறிவித்துள்ளார்கள்.

இதுதவிர ரேஷன் கடையில் பாமாயில், பருப்பு உள்ளிட்டவைகளும் குறைந்த விலையில் மளிகை பொருட்களையும் அறிவித்து வழங்கி வருகிறார்கள். மேலும், எங்களுக்கு பாய், தலையணை, சமையல் பாத்திரங்கள் உள்ளிட்டவைகளையும் தமிழ்நாட்டிலுள்ள 114 அகதி முகாம்களிலுள்ள இலங்கை அகதிகளும் பயனடையும் வகையில் முதல்வர் திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.

குறிப்பாக, படிக்கும் பிள்ளைகளுக்குச் சலுகை, தையல் இயந்திரம் வழங்குதல், பெண்குழந்தை பாதுகாப்புத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இதற்காக சின்னசேலம் அகதிகள் முகாம் தமிழர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆதரவாலும் மற்றும் தமிழக மக்களின் அன்பாலும்தான் இங்கே இருக்கோம். உங்கள் ஆதரவு இல்லையென்றால் நாங்கள் உயிரோடு இருந்திருக்க மாட்டோம். எனவே, அம்மாவுக்கும் தமிழக மக்களுக்கும் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்போம்''.

**விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம், இலங்கை அகதிகள் முகாம் வாழ் செல்வி விஜிதா (வயது 21)**




நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓரளவு சுமாராப் படிப்பேன். நாங்க அகதிகளாக இருப்பதால் எங்க கஷ்டத்தின் காரணமாக மேற்கொண்டு படிக்க முடியல. நான் மேற்கொண்டு படிக்க ஆசைப்படுகிறேன். நான் பி.எஸ்சி., மைக்ரோ பயாலஜி படிக்க விரும்புகிறேன். ஒரு குடும்பத்தில் முதல் தலைமுறையா படிக்கறவங்களுக்குக் கல்விக் கட்டணத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். நான் இந்தத் திட்டத்தின் கீழ் மேல்படிப்புப் படிக்க ஆசைப்பட்டேன். மாண்புமிகு அம்மா அவர்கள் விதிதளர்த்தி எங்களுக்குத் திட்டம் அறிவித்ததால் என் கனவு நனவாகியுள்ளது. எனக்கு இந்த உதவியை அம்மா அவர்கள் செய்ததற்கு நன்றி. நான் படித்து அம்மாவின்

ஆசியோடு நல்ல நிலைக்குவந்து இங்குள்ள மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டத்தை என்னைப் போன்றவர்களுக்கு அறிவித்துள்ள அம்மா அவர்களுக்கு நான் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம், இலங்கை அகதிகள் முகாம் வாழ் செல்வி நளினி (வயது 25)**



நளினி

"இந்த முகாமில் நாங்கள் வந்த நாட்களாக சிரமப்பட்டுதான் இருக்கிறோம். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த சலுகைத் திட்டத்தில் ரேஷன் பொருட்கள் மட்டும் அல்லாது குழந்தைகள் படிப்பு, முதியோர்களுக்கு உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள், கணவனை இழந்தோர் போன்றவர்களுக்கு மாதம் ரூ.1000/– வழங்குவது எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஈழத்தின் முள்வேலிக்குள் முடங்கிக் கிடக்கும் ஈழத்தமிழர்களின் துயர்துடைக்கவும் அவர்களுக்கு நல்வாழ்வு அளித்திட உலகத் தலைவர்களிடம் பிரச்சனைகளை எடுத்துச் செல்வது மட்டுமல்லாமல் தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத்தமிழர் களையும் தமிழ்நாட்டு மக்களைப் போல விதிகளைத் தளர்த்தி திட்டங்களில் பயன்பெறவும் வழி வகுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறோம்.

* * *

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரைவு பட்டா மாறுதல் திட்டம்

## நில உரிமையாளருக்கு நிம்மதி தந்து மக்கள் மனதில் மகிழ்ச்சி தரும் மனிதாபிமான அரசு!




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் பல்வேறு திட்டங்களுக்கான ஆணைகளை வழங்கி, அனைத்துத் திட்டங்களையும் விரைவுபடுத்தி செயல்படுத்தி வருகின்றார்கள். இதன்படி 10.6.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்த சிறப்புமிகு திட்டம் தான் விரைவு பட்டா மாறுதல் திட்டமாகும்.

ஏழை, எளிய மக்கள் தங்களின் வாரிசுகளுக்கு வழங்கிய நிலமானாலும், பாகப்பிரிவினை செய்த நிலங்களானாலும், நில உரிமைப் பதிவேட்டில் பெயர்

பதியப்பட்டால் மட்டுமே நில உரிமையாளர்கள் தங்களது உரிமையை நிலைநாட்ட முடியும். பழைய விதிமுறையின்படி பட்டா பெயர் மாறுதலுக்கான விண்ணப்பத்தினை வட்டாட்சியர் அலுவலகத்தில், வட்டாட்சியர் அல்லது மண்டலத் துணை வட்டாட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும். நிலங்கள் உட்பிரிவு செய்து வழங்கிட 30 நாட்களிலும், உட்பிரிவு தேவையற்ற இனங்களில் 15 நாட்களிலும் பெயர் மாற்றம் செய்து வழங்கிட வேண்டும் என்ற விதி இருந்தபோதிலும் பல்வேறு காரணங்களால் காலதாமதம் ஆகிறது. பொதுமக்களும் பலமுறை வட்டாட்சியர் அலுவலகம் வந்து செல்ல நேரிடுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இவ்வாறு பொதுமக்கள் எத்தகைய அவதியும் படாமல் எவ்வித அலைச்சலுமின்றி பட்டா பெயர் மாற்றம் செய்து பெற்றிட கொண்டுவந்த திட்டம்தான் விரைவு பட்டா மாறுதல் திட்டம். இத்திட்டத்தின்படி, உட்பிரிவு அல்லாத இனங்களில் ஒவ்வொரு திங்கள்கிழமையும் பட்டா மாறுதல் கோரி நேரடியாகப் பொதுமக்கள் கொடுக்கும் மனுக்களை அப்பகுதி கிராம நிருவாக அலுவலர்கள் பெற்றுக் கொண்டு ஒப்புகைச் சீட்டு வழங்கிட வேண்டும். இதற்குப் பொதுமக்கள் எவ்விதக் கட்டணமும் செலுத்த வேண்டியது இல்லை. மூல ஆவணங்களின் நகல் எடுத்து இணைத்து வழங்கிட வேண்டும். திங்கட்கிழமை பெறும் மனுக்களை கிராம நிருவாக அலுவலர் சரிபார்த்து தனது அறிக்கையுடன் வெள்ளிக்கிழமை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அந்த அறிக்கை வட்டாட்சியர் அலுவலகத்தில் கணினியில் பதிவு செய்யப்படும். ஆவணங்களின் நகல் பிரதிகளைக் கொண்டு மண்டலத் துணை வட்டாட்சியரும்,

குறு வட்ட வருவாய் ஆய்வாளரும் பரிசீலனை செய்து 2ஆவது வெள்ளிக்கிழமையன்று மனுதாரர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரும்போது மூல ஆவணங்களைப் பார்வையிட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டா மாறுதல் ஆணை மற்றும் சிட்டா நகல்களை வழங்க வேண்டும்.

உட்பிரிவுக்குட்பட்ட இனங்களில் கிராம நிருவாக அலுவலர் திங்கட்கிழமை பெறும் மனுக்களின் மீது உரிய முறையில் சரிபார்த்து வெள்ளிக்கிழமை வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்குவார். அங்கு உடனடியாகக் கணினியில் பதிவு செய்யப்பட்டு நில அளவை துணை ஆய்வாளரிடம் வழங்கப்படும். அவர் இத்திட்டத்தில் பெறப்படும் மனுக்களுக்கென தனிப்பதிவேடு பராமரித்து புலப்படச் சுவடியிலிருந்து தொடர்புடைய புல எண்ணின் நகல் இணைத்து குறு வட்ட நில அளவரிடம் இரண்டு நாட்களில் வழங்க வேண்டும். குறு வட்ட நில அளவர் புலத் தணிக்கை செய்து மூல ஆவணங்களைப் பார்வையிட்டு உட்பிரிவு செய்து தேவையான ஆவணங்களுடன் 10 தினங்களுக்குள் இப்பணிகளை முடித்து நில அளவை துணை ஆய்வாளரிடம் வழங்க வேண்டும். அவர் அவற்றைச் சரிபார்த்து நான்கு தினங்களுக்குள் வட்டாட்சியரின் ஒப்புதல் பெற சமர்ப்பிக்க வேண்டும். மனுதாரர் விண்ணப்பித்து 4ஆவது வெள்ளிக்கிழமை அன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து மூல ஆவணங்களைக் காண்பித்து பட்டா மாறுதல் உத்தரவு, புலப்பட நகல், சிட்டா நகல் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் திட்டம்தான் விரைவு பட்டா மாறுதல் திட்டமாகும்.

ஒவ்வொரு அலுவலரும் தங்களின் பணியை எத்தனை நாட்களில் முடிக்க வேண்டும்? – மனுதாரருக்கு எத்தனை

தினங்களில் உத்தரவு வழங்க வேண்டும் ? என 8.7.2011 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.210இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுகொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? இல்லையா ? எனக் காத்திருந்த காலம் மாறி தற்போது விரைவு பட்டா மாறுதல் திட்டத்தில் உட்பிரிவு அற்ற இனங்களுக்கு இரண்டு வாரங்களிலும், உட்பிரிவு உள்ள இனங்களுக்கு 4 வாரங்களிலும் தீர்வு வழங்க வேண்டும் என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டுவந்து மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார்கள்.

## இத்திட்டத்தால் பயன்பெற்று பட்டா பெற்ற பயனாளிகளின் அனுபவங்கள் இதோ

**கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் ஒன்றியத்தைச் சேர்ந்த திருமதி துளசிமணி கூறுகையில்**

“எனது பெயர் துளசிமணி (வயது 44). என் கணவர் பெயர் ரங்கசாமி, கோவை அன்னூர் ஒன்றியம் ஏ.டி. காலனியில் குடியிருக்கிறோம். ஆடுமேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். எனது அப்பா எனக்குத் தானமாக 1 ஏக்கர் நிலத்தை ஒரு ஆண்டுக்கு முன்பு கொடுத்தார். நான் பட்டா பெயர் மாறுதல் செய்ய வேண்டும் என 8.8.2011 அன்று கிராம


துளசிமணி

வி.ஏ.ஒ–விடம் மனு கொடுத்தேன். மனு கொடுத்த 10 நாளிலேயே எந்த அலுவலகத்திற்கும் செல்லாமலேயே எந்த அலைச்சலும் இன்றி பெயர் மாறுதல் செய்து கொடுத்துள்ளார்கள். விரைவாக பட்டா கிடைக்க நல்ல திட்டத்தைக் கொண்டுவந்து என்போல படிக்காத பாமரர்களுக்கும் உதவிய அம்மா அவர்களை எப்போதும் மறக்கமாட்டேன்''.

**கோயம்புத்தூர் மாவட்டம் எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திரு. பெருமாள்,**

"எனது பெயர் பெருமாள் (வயது 50) தந்தை பெயர் அரசன். நான் தனியார் ஒர்க்ஷாப்பில் மெக்கானிக்காக வேலை பார்த்து வருகின்றேன். கோவை மாவட்டம், எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியம் எஸ். குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு சகோதரர்கள் 3 பேர் உள்ளனர். எனது தந்தையின் சொத்தை நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டோம். எனது பாகமாக மானாவரி பூமி 35 சென்ட் கிடைத்தது. அந்த நிலத்தை எனது பெயருக்குப் பட்டா மாறுதல் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டுவந்த துரித பட்டா மாறுதல் திட்டத்தின் கீழ் கிராம நிருவாக அலுவலரிடம் மனு கொடுத்தேன். இரண்டு வாரத்தில் பட்டா பெயர் மாறுதல் செய்து வழங்கியுள்ளார்கள். நாங்கள் படும் சிரமங்களைக் குறைக்க முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டத்தைப் பாராட்டுகிறேன்.



பெருமாள்

இப்போதெல்லாம் வி.ஏ.ஒ. ஆபீசில் எந்த வேலைக்குச் சென்றாலும் உடனடியாக நடக்கிறது. தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

**கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் குமாரபாளையத்தைச் சேர்ந்த திரு.கே.எம்.வேலுச்சாமி தெரிவித்ததாவது**


கே.எம்.வேலுச்சாமி

" எனது பெயர் கே.எம்.வேலுச்சாமி. வயது 61. எனது சொந்த ஊர் கோவை மாவட்டம் அன்னூர் குமார பாளையம். எனது மனைவியின் பெயர் கமலம். எனது மனைவிக்குச் சொந்தமான பூமி, அவரது தந்தை வழியாக என் மனைவிக்கு வந்தது. இதை அவரது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக இரண்டு ஆண்டுகளாக முயற்சி செய்து வந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த துரித பட்டா மாறுதல் திட்டத்தைத் தெரிந்து கொண்டு 8.8.2011 அன்று மனுவை எங்கள் ஊரிலேயே கிராம நிருவாக அலுவலர் அவர்களிடம் கொடுத்தோம். 15 தினங்களுக்குள்ளாகவே பட்டா பெயர் மாறுதல் செய்யப்பட்டு கிடைத்தது. இந்தத் திட்டத்தால் எங்களுக்கு எவ்வித அலைச்சலும் இல்லை. இதுபோன்று பட்டா பெயர் மாறுதல் செய்ய படித்தவர்களே சிரமப்படும்போது படிக்காத ஏழை எளிய மக்கள் என்ன செய்வார்கள்? ஆனால், அவர்கள் படும் கஷ்டத்தைப் புரிந்துகொண்டு, அந்த சிரமத்தை போக்கும் வகையில்

இதுபோன்ற திட்டத்தைக் கொண்டுவந்த முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோயம்புத்தூர் மாவட்டம், ஓய்வு பெற்ற பள்ளித் தலைமையாசிரியை திருமதி இந்திராணி தெரிவித்ததாவது**




"எனது பெயர் இந்திராணி (வயது 60) கணவர் பெயர் சண்முகம். நான் அரசுப் பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். கோவை தெற்கு வட்டம் கீரநத்தம் பஞ்சாயத்தில் உள்ள இன்டஸ்டிரியல் ஏரியாவில் 2006ஆம் ஆண்டு 59 சென்ட் நிலம் வாங்கினேன். பதிவு அலுவலகத்தில் பட்டா பெயர் மாறுதலுக்கு பத்திரப்பதிவின் போதே பணம் கட்டினேன். ஏனோ மாற்றம் செய்யப்பட வில்லை. பட்டா பெயர் மாறுதலுக்காக முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டுவந்த சிறப்புத் திட்டத்தை செய்தித்தாள் மூலம் தெரிந்து கொண்டு கிராம நிருவாக அலுவலரிடம் மனு கொடுத்தேன். தற்போது 15 தினங்களில் பட்டா பெயர் மாறுதல் செய்யப்பட்டு விட்டதாகவும், உடனே வந்து பட்டாவைப் பெற்றுக் கொள்ளும்படியாக கூறினார்கள். எவ்விதமான அலைச்சலும் இன்றி பட்டா மாறுதல் செய்து வழங்கியது மிகவும் சந்தோஷமாக உள்ளது. சாதாரண ஜனங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக துரித பட்டா மாறுதல் திட்டத்தைக் கொண்டுவந்த அம்மா அவர்களுக்கு நன்றி.

**கோயம்புத்தூர் மாவட்டம் திரு. எஸ்.முத்துசாமி கூறுகையில்**


எஸ்.முத்துசாமி

"எனது பெயர் எஸ்.முத்துச்சாமி வயது 59. எனது மனைவி பர்வதம் பெயரில் உள்ள 2.35 ஏக்கர் விவசாய நிலத்தை எனது பெயருக்கு செட்டில்மெண்ட் கிரையம் செய்துவிட்டேன். பட்டாவில் பெயர் மாறுதல் செய்யாததால் எனது பெயரில் சிட்டா கிடைக்கவில்லை, எனவே விவசாயக் கடன், ஆழ்துளைக் கிணறு அமைப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன. முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த புதிய திட்டம் குறித்து கேள்விப்பட்டு வி.ஏ.ஒ. அவர்களிடம் மனு கொடுத்தேன். யாரையும் பார்க்காமல், எந்த அலைச்சலும் இல்லாமல் 15 தினத்தில் பெயர் மாறுதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விரைவுத் திட்டத்தைக் கொண்டுவந்த முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோயம்புத்தூர் மாவட்டம் திருமதி வித்யா கூறுகையில்**

"எனது பெயர் வித்யா. வயது 40. எனது கணவர் பெயர் பார்த்திபன். பெரியநாயக்கன்பாளையம் கூடலூர் எனது சொந்த ஊராகும். 2000 ஆம் ஆண்டு பிரித்தா மேனன் என்பவரிடமிருந்து இடம் வாங்கினோம். பத்திரம் பதிவு செய்யும்போது பெயர் அதுவே மாறிவிடும் என்று

கூறினார்கள். ஏனோ தெரியவில்லை பெயர் மாறவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த புதிய துரித பட்டா மாறுதல் திட்டத்தைச் செய்தித்தாள்கள் மூலம் தெரிந்து கொண்டு எங்கள் ஊரிலேயே கிராம நிருவாக அலுவலரிடம் விண்ணப்பித்தோம். எவ்வித அலைச்சலும் இல்லாமல் பெயர் மாறுதல் செய்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நாங்கள் நினைக்க முடியாத அளவு வேகமாகக் கிடைத்ததற்குத் திட்டத்தைக் கொண்டுவந்த முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்".


வித்யா

**விரைவு பட்டா மாறுதல் திட்ட முகாமில் உடனடி பட்டா மாறுதல் பெற்றுப் பயனடைந்த ஈரோடு, தாண்டாம் பாளையம், கொள்ளங்கோயிலைச் சேர்ந்த கேசவராஜ் என்பவரின் மனைவி திருமதி.புவனேஸ்வரி தெரிவித்ததாவது**

"எனக்குப் பரம்பரை சொத்து இருக்கிறது. என்னுடைய நிலம் குடும்பப் பரம்பரை சொத்தாக இருந்து வந்ததால் அதைப் பிரித்து பட்டா மாறுதல் செய்திட பலமுறை முயற்சித்தும் கிடைக்கவில்லை. பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்தால் அது ஆய்வு செய்து அம்மனு மீது உரிய நடவடிக்கை எடுத்திட பரிந்துரை செய்வதற்கே பல மாதங்கள் ஆகின்றன. அதனால் எனக்கு பட்டா மாறுதல்

கிடைக்கவில்லை. தற்போது முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள விரைவு பட்டா மாறுதல் திட்டம் குறித்து விவரம் அறிந்தேன். இத்திட்டத்தின் கீழ் பட்டா மாறுதல் வேண்டி எங்கள் பகுதியின் கிராம நிர்வாக அலுவலரிடம் விண்ணப்பம் செய்தேன். நான் விண்ணப்பித்த 15 தினங்களுக்குள்ளாக எனக்கு இப்பட்டா மாறுதல் உத்தரவு




கிடைத்திருக்கிறது. இது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறது. பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்துக் காத்திருந்த காலம் மாறி பட்டா மாறுதல் விண்ணப்பம் அளித்த 15 நாட்களுக்குள் எனக்கு பட்டா மாறுதல் உத்தரவினை அவர்களே நேரில் அழைத்து உடனடியாக எனக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த விரைவு பட்டா மாறுதல் திட்டத்தினை அறிவித்து எங்களை போன்று பல ஆண்டுகாலம் பட்டா மாறுதல் கிடைத்திடாத ஏழை களுக்கு உடனடியாகப் பட்டா கிடைத்திட உத்தரவிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**ஈரோடு மாவட்டம், எலவமலையில் வசித்துவரும் செங்கோடக்கவுண்டர் மகன் திரு.எஸ்.சிவசுப்பிரமணியன் தெரிவித்ததாவது**

"இத்திட்டம் வருவதற்கு முன்னர் பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பத்தினை அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் வழங்க வேண்டும். அவ்வட்டாட்சியரின்

பரிந்துரையைப் பெற்று கிராம நிருவாக அலுவலரிடம் வழங்கிய பின்னர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்திட ஏறக்குறைய இரண்டு, மூன்று மாதங்களுக்கு மேல் காலதாமதமாகும். இதனால் எங்களுக்கு மிகுந்த சிரமமும், மன வேதனையும் ஏற்படும். உரிய காலத்திற்குள் விவசாயக்கடன் அல்லது வேறு உதவிகளைப் பெற



எஸ்.சிவசுப்பிரமணியன்

முடியாத சூழ்நிலை ஏற்படும். இதையெல்லாம் நன்கு அறிந்துள்ள ஏழைகளின் கஷ்டத்தை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உடனடி பட்டா மாறுதல் என்ற சிறப்புமிக்க திட்டத்தினை அறிவித்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் மூலம் பட்டா மாறுதல் வேண்டிய விண்ணப்பத்தினை உரிய படிவங்களுடனும், இணைப்பு களுடனும் பூர்த்தி செய்து எங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரிடம் நேரில் அளித்தேன். மனு அளித்த 15 தினங்களுக்குள் எவ்வித அலைச்சலும், சிரமமுமின்றி பட்டா மாறுதல் இன்று கிடைத்திருக்கிறது. பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்து நாங்கள் அலைந்து, காத்திருந்த காலம் மாறி இன்று அவர்களே உங்களது விண்ணப்பத்தினை பரிசிலித்து அதற்குரிய பட்டா மாறுதல் தயாராகிவிட்டது , உடன் வந்து வாங்கி செல்லுங்கள் என்று தகவல் அளித்தார்கள். இப்படி ஏழை, எளியோர்கள், விவசாயிகள் அனைவருக்கும் பேருதவியாக இருக்கின்ற விரைவு பட்டா

மாறுதல் திட்டத்தினை அறிவித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

**ஈரோடு மாவட்டம், சூரியம்பாளையம் ஓய்யாங்காடு பகுதியில் வசித்துவரும் தனக்கொடி (லேட்) என்பவரது மனைவி திருமதி.ஜெயலட்சுமி தெரிவித்ததாவது :**




“எனது கணவர் மறைந்துவிட்டார். எங்களது குடும்பச் சொத்தான விவசாய நிலத்திற்குப் பட்டா மாறுதல் வேண்டி பலமுறை விண்ணப்பம் அளித்தும் எனக்கு இதுவரை கிடைக்காமல் இருந்தது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் புதிதாக அறிவித்த விரைவு பட்டா மாறுதல் திட்டத்தின் கீழ் பட்டா மாறுதலுக்கான விண்ணப்பத்தினை கிராம நிருவாக அலுவலரிடம் கடந்த 15 தினங்களுக்கு முன்னர் வழங்கினேன். அதற்குரிய ரசீதும் அவர் அப்போதே வழங்கினார். எவ்வித சிரமமும், அலைச்சலும் இன்றி பட்டா மாறுதல் உத்தரவு தயார் செய்து எனக்கு வழங்கி உள்ளார்கள். என்னைப் போல கணவனை இழந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் எத்தனையோ பெண்கள் சொத்துகளின் உரிய ஆவணங்களைப் பெற்றுப் பாதுகாத்திட வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த வேளையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா

அவர்கள் விரைவு பட்டா மாறுதல் திட்டம் என்ற திட்டத்தினை அறிவித்து எங்களுக்கு உடனடியாக பட்டா மாறுதல் உத்தரவு கிடைத்திட வழிவகுத்துள்ளார்கள். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது காலம் உள்ளவரை நன்றிக் கடன்பட்டவளாக இருப்பேன். இதற்காக எனது மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**இத்திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்து பட்டா பெற்றுப் பயனடைந்த மயிலாப்பூரைச் சேர்ந்த திருமதி சித்ரா (வயது 69) என்பவரது கணவர் திரு கே.ஆர். கிருஷ்ணசாமி (வயது 77) கூறுகையில்**



கே.ஆர். கிருஷ்ணசாமி

"2003–ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டம் பேரம் பாக்கத்தில் எனது மனைவி பெயரில் நிலம் வாங்கி பத்திரப் பதிவு செய்தேன். அதன்பின் பட்டா வாங்க முடியவில்லை. 8 ஆண்டுகளாகப் பலமுறை அரசு அலுவலர்களிடம் மனு செய்தும் அங்கே இங்கே என்று அலைந்து பல காரணங்களைக் கூறி பட்டா வழங்கவில்லை. எளிய வழியில் பட்டா பெறுவது குறித்து மாண்புமிகு முதல்வர் அறிவித்த திட்டத்தைப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். அதன்படி ஆகஸ்ட் 1 ஆம் தேதி மாம்பேடு கிராம நிருவாக அலுவலரிடம் விண்ணப்பித்தேன். அதற்கு அவர் உரிய ரசீது கொடுத்தார். இதில் ஆச்சரியம் என்னவென்றால் உட்பிரிவு செய்து பட்டா பெறுவதற்கு மனு

செய்தபிறகு நான்காவது வெள்ளி அன்றுதான் வழங்கப்படும் என அரசாணையில் உள்ளது. ஆனால், நான் மனு கொடுத்ததுமே வருவாய்த் துறையினர் எனது நில விவரங்கள் தொடர்பாக உட்பிரிவு செய்து பட்டா வழங்குவதற்காக முழு ஆய்வு மேற்கொண்டுள்ளனர். சரியாக இருக்கவே எனக்கு இரண்டாவது வெள்ளிக்கிழமை அன்றே நிலஉரிமைக் கணக்குகளை சரிபார்க்க அழைப்பு விடுத்தனர். திருவள்ளூர் வட்டாட்சியரிடம் 12.08.2011 அன்று அதற்குரிய பத்திரச் சான்றினைக் காண்பித்தேன். உரிய பத்திரங்களைச் சரிபார்த்து வருவாய்த் துறையினர் உடனே எனக்கு உட்பிரிவு செய்து பட்டா வழங்கி உள்ளனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருவாய்த் துறையினருக்கு நெறிமுறை வகுத்து அரசாணை பிறப்பித்ததால்தான் நீண்டகாலமாக இழுபறியாக இருந்த பட்டா பெறும் முறை எளிதாகியுள்ளது. இது ஒரு அற்புதமான வியக்கத்தக்க திட்டமாகும். வயதான காலத்தில் அலைந்து திரிந்த எனக்கு மனு செய்த 12ஆவது நாளில் எந்தவித செலவும் இன்றி உட்பிரிவு செய்து பட்டா கிடைத்தது எனது வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவமாகக் கருதுகிறேன். அந்த அளவிற்குச் சிந்தித்து திட்டங்களைச் செயல்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். அவரை மனதார வாழ்த்துகிறேன்'' என்றார்.

**திருவள்ளூர் வட்டம் ஆயில்சேரி கிராமத்தைச் சார்ந்த திரு பாஸ்கர் மனைவி திருமதி கஸ்தூரி கூறுகையில்**

''எங்களைப் போன்றோர் கிரயம் வாங்கிய நிலத்திற்கு பட்டா கேட்டு நெடுங்காலமாக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நடையாய் நடந்து சோர்ந்திருந்த நேரத்தில்

நல்லது செய்ய அம்மா முதல்வராக வர வேண்டும் என்ற எனது எண்ணப்படி அம்மா அவர்கள் முதல்வராக வந்தார்கள். பட்டா மாறுதல் செய்து பட்டா பெற கிராம நிருவாக அலுவலகத்தில் மனு செய்தால் போதும், எங்கும் அலையத் தேவையில்லை என அம்மா அறிவித்தார். அறிவிப்பினை அறிந்தவுடன் முதல் வேலையாக ஆகஸ்ட் 1ஆம் தேதி திங்கட்கிழமை வாணியன் சத்திரம் கிராம நிர்வாக அலுவலரிடம் பத்திர நகல்களுடன் விண்ணப்பித்தேன். அதன்பிறகு 12.08.2011 அன்று வட்டாட்சியர் அலுவலகத்தில் கிரயப்பத்திரத்துடன் வந்தேன்.


கஸ்தூரி

அவர்கள் சரிபார்த்தனர். சரியாக இருக்கவே உடனடியாக உரிய மாறுதல் செய்து பட்டாவினை எனக்கு வழங்கினார்கள். முதியோர் உதவித் தொகையை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தரமான இலவச அரிசி வழங்கினார்கள். முதியோர் உதவித் தொகையை ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கினார்கள். அதேபோல பலகாலம் அலைந்து திரிந்தாலும் கிடைக்காத பட்டா இன்று கேட்டவுடன் 12 நாட்களில் கிடைத்தது. எந்தவிதச் செலவுமின்றி பட்டா கிடைக்கச்செய்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை என் உயிர் மூச்சு உள்ளவரை மறக்க மாட்டேன்" என உணர்ச்சி பொங்கக் கூறினார்.

★ ★ ★

# பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டை மூலம் ஓய்வூதியம் வழங்கிடும் முன்னோடித் திட்டம்

## ஏழை மக்கள் வீட்டிற்கே சென்று ஓய்வூதியத் தொகையை வழங்கும் ஏற்றமிகு திட்டம்!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **2.9.2011** அன்று தலைமைச் செயலகத்தில், பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்தி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வங்கி மூலமாக வழங்கிடும் முன்னோடித் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தமிழகத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஏழை எளிய முதியோர், ஆதரவற்றோருக்கு மாதாந்திர ஒய்வூதியத் தொகையினை, அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே, வங்கிச் சேவையாளர் வாயிலாகச் சிரமமின்றி வழங்கிடுவதான "பயோ மெட்ரிக் ஸ்மார்ட் கார்டு முன்னோடித் திட்டத்தை" மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் **2.9.2011** அன்று தமிழகத்தில் மூன்று வட்டங்களில் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் முதியோர் உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி தொழிலாளர் உதவித்தொகை, ஆதரவற்ற விதவைகள் உதவித்தொகை, ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்டோருக்கான உதவித்தொகை, ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை, **50** வயதைக் கடந்த திருமணமாகாத ஏழைமகளிர் உதவித் தொகை போன்ற ஓய்வூதியத்திட்டப் பயனாளிகளுக்குத் தபால் நிலையங்கள் வாயிலாக மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது.

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை தபால் நிலையங்கள் வாயிலாக வழங்கப்படுவதில் உள்ள சிரமங்களை களைந்திடும் வகையில் செயல்படுத்தப்படும் பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டு திட்டத்தின் வாயிலாகப் பயனாளிகளின் பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பயனாளிகளுக்கு வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, அவர்களின் முகவரி மற்றும் அடையாளத்துடன் ஸ்மார்ட்

கார்டு வழங்கப்படுகிறது. இதில் பயனாளிகளின் கைரேகையும் பதிவு செய்யப்பட்டிருக்கும். இதற்கென வங்கி சிறப்புப் பணியாளர்கள், கிராம நிருவாக அலுவலர் மற்றும் அரசு அலுவலருடன் இணைந்து சம்மந்தப்பட்ட கிராமங்களில் பயோ மெட்ரிக் இயந்திரத்துடன் சென்று, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஸ்மார்ட் கார்டை, பயோ மெட்ரிக் இயந்திரத்தில் உரசி கணக்கினைச் சரிபார்த்து, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித்தொகையினை வழங்குவர். பயனாளிகள் தங்களின் தேவைக்கேற்ப உதவித் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

எவ்வளவு தொகையைப் பெறுகிறார்களோ, அந்தத் தொகை விவரம் இயந்திரத்தின் வாயிலாகவும் பதிவாகி வரும். பணம் பெற்றதற்கான தனி இரசீது (பற்றுச்சீட்டு) வழங்கப்படும். சிறப்புப் பணியாளர்களின் வருகை விவரங்கள் பயனாளிகளுக்கு வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஊராட்சி அலுவலகங்கள் மூலமாகத் தெரிவிக்கப்படும். பயனாளிகள், சிறப்புப் பணியாளர்களின் மொபைல் (அலைபேசி) எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.

உதவித்தொகை பெறும் பயனாளிகள், குறித்த நேரத்திலும், அலைச்சல் இல்லாமலும், எந்தவிதமான செலவும் இல்லாமலும் பயன்பெற வேண்டும் என்ற தாயுள்ளத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## இத்திட்டத்தின் வாயிலாகப் பயன் பெற்றுள்ள கிராம மக்கள் தங்கள் மனதிலிருப்பதை மகிழ்வோடு சொன்னதாவது

**கன்னியாகுமரி மாவட்டம் திடல் ஊராட்சிப் பயனாளி திருமதி சி. சார்லெட் அவர்கள்**

"எனக்கு வயது 70 ஆகிறது. எனது கணவர் பெயர் கிறிஸ்துதாஸ். எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகி விட்டது. எனது சொந்த ஊர் திடல் ஊராட்சியில் இரத்தினபுரம் கிராமம் ஆகும். உடல்நலம் சரியில்லாததால் நான் வேலைக்குச் செல்வதில்லை. இந்த ஓய்வூதியத்தொகைதான் எனக்கு உதவியாக உள்ளது.

அம்மா அவர்கள் தற்பொழுது ரூ.1000/–ஆக உயர்த்தி வழங்கியது, எனக்குப் பெரும் உதவியாக உள்ளது. அந்தப் பணத்தை அம்மா அவர்கள் ஸ்மார்ட் கார்டு திட்டத்தின் மூலம் வழங்குவதால் தேவைப்படும் பணத்தை மட்டும் எடுத்துக் கொள்ள உதவியாக உள்ளது. வங்கிக்குச் சென்று


சார்லெட்

கணக்குத் துவங்கும் அளவிற்கு எங்களுக்குப் படிப்போ, ஆட்கள் துணையோ இல்லை. ஆனால், தற்பொழுது அரசே முன்வந்து என்னிடம் ஆவணங்களும், போட்டோக்களும் (புகைப்படம்) மட்டும் வாங்கிக்கொண்டு எந்தவிதமான அலைச்சலும் இல்லாமல் வங்கியில் கணக்கைத் துவக்கி, இப்பொழுது பணத்தையும் எங்கள் ஊரிலேயே வந்து நேரடியாகக் கொடுப்பது பெரும் வியப்பாக உள்ளது. தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என்றென்றும் நன்றியுடன் இருப்பேன்", என்றார்.

**கன்னியாகுமரி மாவட்டம், கடுக்கரை ஊராட்சிப் பயனாளி திருமதி. மு. சரஸ்வதி (62)**

"எனது கணவர் பெயர் முத்துசாமி. எனக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளனர். கடுக்கரை, கடம்படி விளாகத்தில் நானும் எனது கணவரும் வசித்து வருகிறோம். எங்களுக்கு வேறு வருமானம் எதுவும் இல்லாமல் அரசு வழங்கும் முதியோர் உதவித்தொகையை நம்பியே வாழ்கிறோம். தற்பொழுது தமிழக முதல்வர் அம்மா அவர்கள் உதவித்தொகையை ரூ.1000/– ஆக உயர்த்தி வழங்கியதன் மூலம் நாங்கள் மகிழ்ச்சியுடன் உள்ளோம்.


மு. சரஸ்வதி

தற்பொழுது எங்கள் கிராமத்தில் கார்டு மூலமாகப் பணம் தருகிறார்கள். பணம் எடுக்கும் முறை மிகவும் எளிமையாகவும், விரைவாகவும் இருக்கிறது. செலவின்றி பணம் கிடைக்க வழி செய்த அம்மா அவர்களை வாழ்த்துகிறோம்".

**கன்னியாகுமரி மாவட்டம், திட்டுவிளையைச் சார்ந்த பயனாளி திருமதி. நபுசதாபி (49)**




"எனது கணவர் பெயர் சம்சுதீன். அவர் இப்போது உயிருடன் இல்லை. நான் கடந்த 13 வருடங்களாக விதவைகள் உதவித்தொகை பெற்று, திட்டுவிளையில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் உள்ளனர். நான் கூலி வேலைபார்த்து எனது குழந்தைகளைக் காப்பாற்றி வருகிறேன்.

நான் சேமித்த பணத்தை எனக்காகவும் எனது குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் வங்கியில் சேமித்து வைக்க முடியாதநிலை இருந்து வந்தது. வங்கிக்குச் சென்று காத்திருக்கும் அளவுக்கு எனக்கு நேரம் இல்லை. வீட்டில் எனது குழந்தைகளை என்னைத் தவிர வேறு யாரும் கவனிக்க ஆளில்லாமையால் என்னால் வங்கிக்கோ, வேறு எங்குமே செல்ல முடியவில்லை. ஆனால் தற்பொழுது நம் முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு நடைமுறைப் படுத்தி இருக்கும் ஸ்மார்ட் கார்டு திட்டமானது என்னைப் போன்ற ஏழைப் பெண்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும், வயதானவர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையிலான இத்திட்டம் எங்கள் தேவைகளை எளிதாகப் பெற உதவுகிறது" என்றார்.

✶ ✶ ✶

# குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டிவியின் ஒளிபரப்பு

## தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி நிறைவான சேவை தரும் நல்லரசு




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பதவியேற்ற நாள் முதல் தமது தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்த அனைத்து வாக்குறுதிகளையும், திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்கள்.

அரசு கேபிள் டிவி மூலம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் தரமான கேபிள் டிவி

இணைப்பு வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் தெரிவித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் **30.8.2011** அன்று தமிழக சட்டமன்றத்தில் "சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் ரூபாய் **70** கட்டணத்தில் **90** சேனல்கள் ஒளிபரப்பப்படும் என்றும், இலவச சேனல்களைத் தொடர்ந்து விரைவில் கட்டணச் சேனல்களும் ஒளிபரப்பப்படும்" என்றும் அறிவித்தார்கள்.



இதனைத் தொடர்ந்து **2.9.2011** அன்று தலைமைச் செயலகத்திலிருந்து, அரசு கேபிள் டிவி ஒளிபரப்புச் சேவையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். வேலூர் கேபிள் கட்டுப்பாட்டு தொடக்க மையத்திலிருந்து தமிழக அரசு கேபிள் டிவி தனது ஒளிபரப்பைத் தொடங்கியது.

உழைக்கும் மக்களின் வருவாயைக் கவனத்தில் கொண்டு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உலகத்தரத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் குறைந்த கட்டணத்தில் சேவையை வழங்கியதோடு, கேபிள் டிவி ஆப்பரேட்டர்களின் வாழ்விலும் ஒளி விளக்கேற்றியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டத்தின் மூலம் மக்கள் உடனடியாக பயனடையும் வண்ணம், அனைவர் உள்ளங்களும் பெருமகிழ்வு கொள்ளச் செய்துள்ளார்கள்.

## அரசு கேபிள் டி.வி.யில் பயன்பெற்ற பல்வேறு மக்களின் மனந்திறந்த பாராட்டுகளில் சில

**அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் இணைந்துள்ள இதயம் நெட்ஒர்க் நிறுவனர் திரு கே. சுந்தரம் அளித்த பேட்டியில்**

“நான் கடந்த 15 வருடமாகக் கேபிள் டிவி ஆப்பரேட்டராக இருக்கிறேன். தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டு அம்மா அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன அரசு கேபிள் டிவியை கோட்டையில் துவங்கி வைத்திருக்கிறார்கள். அன்றைய தினமே பெரம்பலூர் மாவட்டத்தில் 70 கிராமங்களில் 20 ஆயிரம் வீடுகளில் அரசு கேபிள் டிவி ஒளிபரப்பைத் துவங்கிவிட்டோம். தற்போது 55 சேனல்களை 70 ரூபாய் குறைந்த கட்டணத்தில் அரசு ஒளிபரப்புகிறது. விரைவில் கட்டணச் சேனல்களையும் சேர்த்து 90 சேனல்கள் ஒளிபரப்ப இருக்கிறது.

மாதாமாதம் ரூ.150, ரூ.175 எனப் பல்வேறு வகைகளில் கட்டணம் செலுத்தி வந்த மக்களுக்கு இன்று முதல் பெரிய விடுதலை. கேபிள் டிவி ஆப்பரேட்டர்களான எங்களுக்கும் விடுதலை. அரசு பதவியேற்ற சில நாட்களுக்குள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி அரசு கேபிள் டிவியை நடைமுறைப்படுத்திய அம்மா அவர்களுக்கு மக்கள் சார்பாகவும், ஆப்பரேட்டர்கள் சார்பாகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்".

**அரசு கேபிள் டிவி ஒளிபரப்பு குறித்து அரசு கேபிள் இணைப்புப் பெற்ற பெரம்பலூர் ஔவையார் தெரு க.துரைசாமி கூறியதாவது**

“என் பெயர் க.துரைசாமி, தேர்தல் வாக்குறுதியில் சொன்ன மாதிரியே குறைந்த விலையில் கேபிள் டிவி பார்க்கிற வாய்ப்பை அம்மா ஏற்படுத்தி கொடுத்திருக்காங்க. இதுக்கு முன்பு மாதாமாதம் ரூ.130 மாத வாடகை கட்டி கேபிள் டிவி பார்த்து வந்தோம். 10 நாள் தாமதம் ஆனால் 20 ரூபாய் தண்டம் கட்ட வேண்டியிருந்துச்சி. இனி அந்தக் கவலை இல்லை. இனி மாதம் 70 ரூபாய் கட்டினால் போதும் என்று அம்மா அறிவிச்சிருக்காங்க. தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்தி குறைந்த விலையில் கேபிள் டிவி கொடுத்த அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி”.

**பெரம்பலூர் துறைமங்கலம் எம்.கலா கூறியதாவது**

“என் பெயர் எம்.கலா, கேபிள் டிவி கட்டணம் அம்மா ஆசிர்வாதத்தில் மாதா மாதம் 70 ரூபாய் கட்டினால் போதும் என்று சொல்லிருக்காங்க. அம்மா புண்ணியத்துல மாசம் 100 ரூபாய் இனி மிச்சமாகும். இதுமட்டுமில்லாம அம்மா ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஏழைப் பிள்ளைங்க திருமணத்திற்கு 25 ஆயிரமும், காலேஜ் படிச்ச பிள்ளைங் களுக்கு 50 ஆயிரமும், 4 கிராம் தாலிக்குத் தங்கமும் தந்திருக்காங்க. உதவித்தொகையை ரூ.500லிருந்து ரூ.1,000மாக ஆக்கியிருக்காங்க. ரேசன் கார்டுக்கு 35 கிலோ அரிசி இலவசமா தாராங்க. ஆடு, மாடு தரப் போறாங்க. ஏழைங்களுக்கு கிரைண்டரும், மிக்சியும் தரப்

போறாங்க. இன்னும் டேபிள் ஃபேன் தரப் போறாங்க. இப்படி அறிவிச்சதெல்லாம் நடமுறைப்படுத்தி ஏழை பாழைங்க வயித்துல பால்வார்க்கிற அம்மாவுக்குக் கோடான கோடி நன்றி''.

**ஈரோடு மாவட்டம், கொல்லம்பாளையம், குப்புசாமி காலனி, 161, காந்திஜி வீதியைச் சேர்ந்த திரு.பி.சுரேஷ்குமார் என்பவரின் மனைவி திருமதி ஈ.பிரபா என்பவர் தெரிவித்ததாவது**



"எனது கணவர் கார் ஓட்டுநராகப் பணியாற்றி வருகின்றார். நான் வீட்டு வேலைகளைச் செய்து வருகின்றேன். எனக்கு முழுப் பொழுதுபோக்கு டி.வி பார்ப்பது மட்டுமே. நாங்கள் தனியாக இருப்பதால் நேரத்தைப் போக்குவதற்கு மிகவும் சிரமமாக இருக்கும்.

இதற்கு முன்னர் நாங்கள் கேபிள் இணைப்புகள் பெற்று டி.வி பார்த்து வந்துள்ளோம். அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.175/—க்கும் மேல் கட்டணம் வசூல் செய்வார்கள். எனது கணவரின் வருமானத்தை வைத்து குடும்பச் செலவு, மருத்துவச் செலவு, இதர செலவுகளை மேற்கொள்வதற்கே

மிகவும் சிரமப்பட்டு வந்த நிலையில் கேபிள் டி.விக்கு பணம் கொடுக்க முடியாதபோது சில நாட்கள் இணைப்பைத் துண்டித்து விடுவார்கள். அப்பொழுது பொழுதுபோக்கிற்கு டி.வி பார்ப்பதற்குக் கூட வழியில்லாமல் மிகுந்த மனவேதனை அடைந்து வந்தேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தை உருவாக்கி அனைத்துச் சேனல்களையும் அரசே எடுத்து மாதம் ரூ.70/– கேபிள் சேவையினை வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதனால் எங்களுக்கு 81 சேனல்கள் ரூ.70/– கட்டணத்தில் கிடைத்து வருகிறது. முன்னர் ஒரு மாதத்திற்குச் செலுத்திய கேபிள் கட்டணத் தொகையினை தற்போது 4 மாதங்களுக்குச் செலுத்தலாம். இதனால் எங்களுக்குச் செலவு குறைவதோடு நாங்கள் விரும்பிப் பார்க்கக் கூடிய அனைத்துச் சேனல்களும் கிடைக்கிறது. இத்தகைய தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி சேவையை உருவாக்கி ரூ.70/– கட்டணத்தில் 81 சேனல்களை வழங்கிவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்களைப் போன்ற இல்லத்தரசிகளின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**ஈரோடு மாவட்டம், மூலப்பாளையம் வாய்க்கால் மேடு எல்.ஐ.சி நகரைச் சேர்ந்த சுதாகர் என்பவரின் மனைவி திருமதி சு.கௌரி**

"எனது கணவர் தனியாரிடம் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகின்றார். எனக்கு 3 வயதில் ஒரு



குழந்தை உள்ளது. எனது கணவர் வேலைக்குச் சென்றவுடன் நானும் எனது குழந்தையும் வீட்டில் தனியாக இருப்போம். அப்பொழுது எங்களுக்குப் பொழுதுபோக்கே டி.வி பார்ப்பது தான்.

முன்பெல்லாம் கேபிள் இணைப்புக் கொடுத்துவிட்டு கேபிள்காரர்கள் ரூ.175/–, ரூ.190/– என ஒவ்வொரு மாதமும் கட்டணங்களை உயர்த்திக் கொண்டே செல்வார்கள். இதனால் கட்டணத்தைச் செலுத்த நாங்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தோம். அதனால் சில மாதங்கள் கட்டணம் செலுத்த முடியாமல் கேபிள் இணைப்பைத் துண்டிச்சிட்டு போயிருவாங்க. எனக்கும், எனது குழந்தைக்கும் பொழுதுபோக்கிற்கு வழியில்லாமல் மிகவும் வேதனைப் படுவோம். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலை ஏற்படும். எனது கணவரிடம் கேட்டால், 'நான் ஆட்டோ ஓட்டுகிறேன். கிடைக்கும் கூலி குடும்பச் செலவிற்கே பற்றாக்குறையாக இருக்கு இவ்வளவு தொகை கொடுத்து கேபிள் இணைப்புப் பெறுவது நமக்குத் தேவையா ?,' எனக் கேட்பார்.

ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு கேபிள் டி.வியைத் தொடங்கி தற்போது

ரூ.70/– கட்டணத்தில் 81 சேனல்களை வழங்கி வருகிறார்கள். இதனால் மீண்டும் எங்களது வீட்டிற்கு கேபிள் இணைப்புப் பெற்றுள்ளோம். தற்போது குறைந்த செலவில் ஏராளமான டி.வி சேனல்களைப் பார்க்க முடிகிறது. எங்களுக்குப் பொழுதுபோக்கிற்கும், மனநிம்மதிக்கும் நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளார். இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**ஈரோடு மாவட்டம், வாய்க்கால் மேடு விநாயகர் கோயில் வீதி, ஓங்காலி (கட்டட வேலை) என்பவரின் மனைவி திருமதி லட்சுமி அவர்கள் தெரிவித்ததாவது**



"எனது கணவர் கட்டட வேலை செய்து வருகின்றார். நான் வீட்டு வேலை மட்டுமே செய்து வருகின்றேன். எனக்கு 3 குழந்தைகள் உள்ளனர். நான் காலையில் எனது கணவருக்கு உணவு தயாரித்து வழங்கிவிட்டு பின்னர் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவைத்து பின்னர் வீட்டில் தனியாக சிறுசிறு வீட்டு வேலைகளைச் செய்வேன்.

எல்லாநேரமும் எனக்கு வேலை இருக்காது. வேலையில்லா நேரங்களில் டி.வி பார்த்து எனது பொழுதைக் கழிப்பேன். கேபிள் டி.வி.யில் இணைப்புப் பெற்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகளைப் பார்த்து வருவேன். முன்னர் கேபிள் கட்டணமாக ரூ.170/– முதல் ரூ.190/– வரை வசூலித்து வந்தனர். கேபிள் கட்டணம் செலுத்த முடியவில்லை என்றால் கேபிள் இணைப்பைத் துண்டித்து விடுவார்கள்.

எனது கணவரின் வருமானம், குடும்பச் செலவிற்கும், குழந்தைகளின் கல்விச் செலவிற்கும், மருத்துவச் செலவிற்கும் பற்றாக்குறையாக இருந்த நிலையில் கேபிள் கட்டணத்தொகை செலுத்த முடியாமல் சிரமப்பட்டு வந்தேன்.

இந்த நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரசு கேபிள் டி.வி–யை துவக்கி ரூ.70/–க்கு கேபிள் இணைப்பு வழங்க உத்தரவிட்டுள்ளார். அம்மா அவர்களின் ஆணையின்படி தற்போது கேபிள் ஆப்பரேட்டர்கள் எங்களிடம் ரூ.70/– மட்டுமே கட்டணமாக வசூலிக்கின்றனர்.

எங்களுக்கும் 81 சேனல்கள் ஒளிபரப்பி வருகின்றனர். இதனால் எனக்கு மன நிம்மதியும் குறைந்த கட்டணத்தில் கேபிள் டி.வி ஒளிப்பரப்புச் சேவையும் கிடைக்கிறது. இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

* * *

# பள்ளி மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம்

## கல்வி பயில ஊக்கமும் ஆக்கமும் தந்து இளைஞர்களை உயர்விக்கும் அரசு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் அற்புதத் திட்டத்தை முதன்முதலாக 15.9.2001 அன்று தொடங்கி வைத்தார்கள்.

கிராமப்புறங்களில் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வரும் மக்கள் தங்கள் பிள்ளைகளை 10ஆம் வகுப்பு முடித்தபின்

தொடர்ந்து மேல்நிலைக் கல்வி பயில அனுப்பாமல் நிறுத்துவது ஏன் என்று ஆய்வு செய்து, தங்கள் கிராமங்களிலிருந்து மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு எவ்விதச் சிரமமும் இன்றி மாணவச் செல்வங்கள் சென்று வரவும், தன்னம்பிக்கையை அவர்கள் மனதில் விதைக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் மூலம் மாணவச் செல்வங்கள், குறிப்பாக பெண் குழந்தைகள் மிகுந்த ஊக்கம் பெற்று மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்குகின்ற மிதிவண்டிகளில் பள்ளி சென்று வருவதுடன் இந்த உலகில் நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் கல்வி பயின்று வெற்றி பெற்று வருகிறார்கள்.

இத்திட்டம் மேலும் சிறப்படைய தற்பொழுது 179.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6.22 இலட்சம் மாணவ – மாணவியர்களுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 29.11.2011 அன்று தொடங்கி செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**இச்சிறப்புமிகு திட்டத்தில் பயன்பெற்ற விருதுநகர் மாவட்டம், சிவகாசி இந்து நாடார் விக்டோரியா மேல்நிலைப்பள்ளி 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவர் திரு. அருண்குமார் கூறுவதாவது**

"நான் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன். தந்தை தனியார் நிறுவனத்தில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்து வருகிறார். தந்தையின் வருமானம் குடும்பத்தை வழிநடத்தி செல்வதற்கும் என்னுடைய மேல்படிப்பை தொடர்வதற்கும் உகந்த சூழ்நிலை இல்லாமல் இருந்தது. இந்நிலையில்


அருண்குமார்

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏற்கனவே 2001–06ம் ஆண்டில் ஏழை எளிய மாணவர்களுக்காக கொண்டு வரப்பட்ட இலவச மிதிவண்டித் திட்டத்தைத் தற்சமயம் தொடர்ந்து வழங்கவும், இலவசம் என்பது வறுமையில் வாடுகின்ற எங்களைப் போன்றவர்களைச் சிறுமைப்படுத்தும் விதமாக உள்ளது என்பதையும் உணர்ந்து தற்சமயம் இலவசம் என்பதற்குப் பதிலாக விலையில்லா பொருட்கள் என அறிவித்து சுமார் ரூ.3,000/–மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளை வழங்கியிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

மேலும், என்னுடைய மேல்நிலைக் கல்வியை தொடரவும் குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளிக்கு செல்வதற்கும் உதவியாக உள்ளது. மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாணவர்களுக்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக விலையில்லா மடிக்கணினியை வழங்க உத்தரவிட்டிருப்பதால் என்னைப் போன்ற மாணவர்கள் வசதிபடைத்த மாணவர்கள் பெறுகின்ற கல்வியைப் பெற முடிகிறது என்பதை எண்ணிப் பெரும் மகிழ்ச்சி அடைகின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**இச்சிறப்புமிகு திட்டத்தில் பயன்பெற்ற, விருதுநகர் மாவட்டம் சிவகாசி இந்து நாடார் விக்டோரியா மேல்நிலைப்பள்ளி 11ஆம் வகுப்புப் பயிலும் கொங்கலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கிடசாமி என்பவரது மகள் விஜயலட்சுமி தெரிவித்ததாவது**


விஜயலட்சுமி

"என்னுடைய தந்தை முன்னாள் இராணுவ வீரர். எங்கள் குடும்பம் தந்தையின் ஓய்வூதியத்தை நம்பியே உள்ளது. என்னுடைய கிராமம் நான் பயில்கின்ற பள்ளியில் இருந்து 5 கிமீ தூரம் உள்ளதால், குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளிக்கு செல்ல முடியாத சூழ்நிலை இருந்தது.

தற்சமயம் தமிழக அரசால் 11ஆம் வகுப்பில் பயில்கின்ற மாணவர்களுக்காக விலையில்லா மிதிவண்டி வழங்கப் பட்டுள்ளதால் என்னுடைய அன்றாடச் செலவு குறைவதுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளி சென்றடைய முடிகிறது. இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்".

**சேலம் மாவட்டம், உடையாப்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி கே.வனிதா கூறியதாவது:**

"எனது பெயர் வனிதா. நான் பதினொன்றாம் வகுப்பு அறிவியல் பாடப்பிரிவில் படித்து வருகிறேன். எனது அப்பா பெயர் கிருஷ்ணசாமி. அவர் நடத்துனராக பணியாற்றி வருகிறார். நாங்கள் அயோத்தியாப்பட்டணம் அருகில் உள்ள முல்லை நகரில் வசித்து வருகிறோம். எனது வீட்டிலிருந்து பள்ளி செல்ல சுமார் 8 கி.மீ தொலைவாகும். உடையாப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் படித்து வருகிறேன். எனது அப்பா வேலைக்குப் போகாத நாட்களில் என்னை பள்ளிக்கு அழைத்து வந்து விடுவார். அவர் வேலைக்கு செல்லும் நாட்களில் காலையில் வீட்டிலிருந்து நடந்தே பள்ளிக்கு வந்து படித்துவிட்டு மாலையில் நடந்தே வீட்டிற்குச் செல்வேன். கடந்த 5 ஆண்டுகளாக இதே நிலைமைதான் இருந்தது.

தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி உள்ளார்கள். அந்த சைக்கிளில்தான் பள்ளிக்குச் சென்று வருகிறேன். இப்பொதெல்லாம் பள்ளி தொடங்குவதற்கு முன்பாகவே பள்ளிக்கு வந்து முடிந்தவுடன் வீட்டிற்குச் சீக்கிரமாக செல்கிறேன். இதனால் கூடுதலாக நேரம் கிடைப்பதால் படிக்க உதவியாக இருக்கிறது. தினமும் நடந்தே பள்ளிக்கு செல்ல வேண்டிய நிலை மாறி சைக்கிளில் வருவதால் பாதுகாப்பாகவும், பயனுள்ளதாகவும் இருக்கிறது. மேலும், படிக்கும் நேரம் கூடியுள்ளதால், முந்தைய மாதங்களைவிட கடந்த இரண்டு மூன்று மாதங்களில் அதிக மதிப்பெண்கள் வாங்கி பெற்றோர், ஆசிரியர்களின் பாராட்டினை பெற்றுள்ளேன். எனக்கு சைக்கிள் வழங்கிய முதலமைச்சர் அம்மாவுக்கு எனது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்".

**சேலம் மாவட்டம், உடையாப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி எஸ்.மேகலாவிடம் விலையில்லா மிதிவண்டி வழங்கியது குறித்துக் கேட்டபோது**


செல்வி.கே.வனிதா
செல்வி.எஸ்.மேகலா

"என்னுடைய பெயர் மேகலா. நான் பதினொன்றாம் வகுப்பு கணித பாடபிரிவில் படித்து வருகிறேன். எனது அப்பா பெயர் செல்வம். அவர் கூலி வேலைக்குச் செல்கிறார். மாசிநாயக்கன்பட்டி எனது சொந்த ஊராகும். நான் பயிலும் பள்ளி அங்கிருந்து 6 கி.மீ தொலைவில் உள்ளது. நான் 6ஆம் வகுப்பு முதல் நடந்தே பள்ளிக்கு வந்து செல்வேன்.

தற்போது முதலமைச்சர் அம்மா அவர்கள் விலையில்லா சைக்கிள் கொடுத்துருக்காங்க. இப்போது இந்த சைக்கிளில் தான் பள்ளிக்கு வந்து செல்கிறேன். இது மிகவும் பயனுள்ளதாக உள்ளது. கூடுதலாக நேரம் கிடைப்பதால் எளிதாகப் படிக்க முடிகிறது. எனக்கு முன்பு இதே பள்ளியில் என்னுடைய அண்ணன் படித்தான். அவனுக்கும் முதலமைச்சர் அம்மா அவர்கள் சைக்கிள் வழங்கினார்கள். தற்போது எனக்கும் சைக்கிள் வழங்கியிருக்கிறார். ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த எங்களுக்கு சைக்கிள் வழங்கி பள்ளிக்குச் சென்று படிக்க நல்லதோர் வாய்ப்பு வழங்கிய தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்" என்று கூறினார்.

**சேலம் மாவட்டம், உடையாப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் செல்வன் எஸ்.கௌதம்ராஜ் கூறியதாவது**



செல்வன்.எஸ்.கௌதம்ராஜ்

"எனது பெயர் கௌதம்ராஜ். எனது அப்பா பெயர் சவுந்திரன். அவர் கூலி வேலைக்குச் செல்கிறார். எனது சொந்த ஊர் வலசையூர். பள்ளியிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது. எனக்கு ஒரு அண்ணன் இரண்டு அக்கா. எங்களது குடும்பம் மிகவும் ஏழைக் குடும்பமாகும். நான் பள்ளிக்கு வரும் நேரத்திற்கு போதிய பேருந்து வசதி இல்லாததால் கடந்த 6 ஆண்டுகளாக நடந்தே பள்ளிக்கு வந்து சென்றேன். தற்போது முதலமைச்சர் அம்மா அவர்கள் சைக்கிள் வழங்கியுள்ளார்கள். இந்த சைக்கிளில் தான் தினமும் பள்ளிக்கு வந்து செல்கிறேன். சரியான நேரத்திற்கு நான் பள்ளிக்கு வர முடிகிறது.

நான் எனது அப்பாவிடம் பள்ளிக்குச் சென்று வர சைக்கிள் வேண்டும் எனக் கடந்த 4 வருடமாகக் கேட்டு வந்தேன். ஆனால், அவரால் வாங்கித்தர முடியவில்லை. இந்த நிலையில் எனக்கு முதலமைச்சர் அம்மா அவர்கள் சைக்கிள் கொடுத்தது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. சைக்கிளில் பள்ளிக்குச் சென்று வருவதால் விரைவாக வீட்டிக்கு வந்து விடுகிறேன். இதனால் வீட்டில் அதிக நேரம் கிடைப்பதால் நன்கு படிக்க முடிகிறது. முன்பெல்லாம் நடந்தே பள்ளி சென்று வந்ததால் வீட்டிற்கு வந்தவுடன் சோர்ந்து படுத்து விடுவேன். அதனால் என்னால் சரியாகப் படிக்க முடியாமல் இருந்தது. இப்போது நன்றாக படிக்கிறேன். எனது குடும்பத்தில் எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எனக்கு சைக்கிள்

வழங்கி நான் நல்ல முறையில் படிக்க வழிவகை செய்த முதலமைச்சர் அம்மாவுக்கு நன்றி கூறுகிறேன்" எனக் கூறினார்.

**சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி அனு கூறியதாவது**

"என் பெயர் அனு. நான் பதினொன்றாம் வகுப்பில் மேக்ஸ் பையாலஜி படித்து வரேன். எனது அப்பா சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். எனது அம்மா சமையல் வேலைக்குச் சென்றுதான் என்னைப் படிக்க வைக்கிறாங்க. பள்ளிக்கு வந்து செல்ல சுமார் 9 கி.மீ தொலைவாகும். இதுவரை பேருந்தில் பள்ளிக்குச் சென்று வந்தேன்.


செல்வி. அனு

தற்போது அம்மா எனக்கு விலையில்லா சைக்கிள் கொடுத்துருக்காங்க. இதனைப் பயன்படுத்தி விரைவாக பள்ளிக்கு வந்து செல்ல முடிகிறது. இதனால் நான் அதிக நேரம் படிக்க முடிகிறது. மேலும் எனக்கு சைக்கிள் ஓட்டுவது நல்ல உடற்பயிற்சியாகவும் அமைகிறது. நான் என் அம்மாவிடம் பள்ளிக்கு செல்ல சைக்கிள் கேட்டேன். ஆனால், அவர்களால் போதிய வருமானம் இல்லாததால் வாங்கித் தர முடியவில்லை. தற்போது முதலமைச்சர் அம்மா அவர்கள் சைக்கிள் கொடுத்தது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மேலும், நன்றாகப் படித்து எதிர்காலத்தில் நல்ல நிலைக்கு வர வித்திட்ட முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் கூறினார்.

★ ★ ★

# மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி – உபகரணங்கள் வழங்கும் திட்டம்

## மாற்றுத்திறனாளிகளின் வாழ்வை மலர்விக்கும் மனிதநேய அரசு



தமிழக மக்கள் அனைவரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ்ந்திடும் வண்ணம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகின்ற பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்களில் ஒன்றாக மாற்றுத் திறனாளிகளின் வாழ்வு முன்னேற்றத்திற்கான திட்டம் அமைந்து அவர்கள் வாழ்வில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தால் மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையும், சமூகப் பாதுகாப்பையும் பெற்று வாழ்ந்திட வழிவகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற மாதாந்திர உதவித்தொகை ரூ.500லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது. மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான வயது வரம்பு 45 ஆக இருந்ததை 18 ஆகக் குறைத்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக அனைத்து அலுவலகங்கள், மருத்துவமனைகள் மற்றும் பொதுக்கட்டடங்களில் சாய்வுதளப்பாதை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். மேலும், வேலைவாய்ப்பில் 3 சதவிகித தனி ஒதுக்கீடும், பேருந்துகளில் பயணம் செய்வதற்கு வசதியாக மின்தூக்கியுடன் கூடிய சிறப்புப் பேருந்து வசதியும் செய்து தரப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பேருந்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 29.11.2011 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், ‘காலிப்பர் பூட்ஸ்’, ‘ஊன்றுகோல்’, ‘மூன்று சக்கர வண்டி’, ‘சக்கர நாற்காலி’, ‘செயற்கைக் கால்’ மற்றும் மோட்டார் பொருந்திய மூன்று சக்கர வாகனம் போன்றவை விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. காதுகேளாதவர் களுக்கு ‘காதொலிக் கருவி’யும் மற்றும் சோலார் பேட்டரியும், கண்பார்வை இழந்தவர்களுக்குக் கருப்புக் கண்ணாடி, மடக்கு ஊன்றுகோல் மற்றும் பிரெய்லி கைகடிகாரம் ஆகியவை விலையில்லாமல் வழங்கப் படுவதால் அவர்களின் வாழ்வு முன்னேற்றத்திற்கான வசதிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செய்யப்பட்டுள்ளன. இதனால்

தமிழகத்தில் வாழ்கின்ற மாற்றுத் திறனாளிகள் அனைவரும் எந்த குறையும் இல்லாமல் வாழ்ந்திட அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைத்து தேவையான உதவிகளைச் செய்து வருகின்றன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது அரசு, மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் அனுபவங்களை இப்போது காண்போம்.**

**ஈரோடு மாவட்டம் கோபி, கொங்கர்பாளையத்தைச் சேர்ந்த அம்மாசிக்கவுண்டர் அங்கம்மாள் தம்பதியரின் மகள் செல்வி கர்ணாம்பாள் தெரிவித்ததாவது**

"எனக்குப் பிறந்தது முதல் இருகால்களும் ஊனம். என்னால் எழுந்து நடக்க முடியாது. தரையில் தவழ்ந்து மட்டுமே செல்ல முடியும். கடந்த 30 ஆண்டுகளாக எனது தாய், தந்தை இருவரும் என்னைக் கஷ்டப்பட்டு வளர்த்து வருகின்றனர். எங்கள் குடும்பம் விவசாயக் குடும்பம். விவசாயத்தில் வருமானம் கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

எனது தங்கை மாலதிக்கு திருமணம் முடிந்து விட்டது. இந்நிலையில் மிகவும் சிரமப்பட்டு என்னை வளர்த்து வருகின்றனர். நான் எனது பெற்றோருக்கு அதிகச் சுமையாக இருக்கின்றேனே, என்னால் எந்த வேலையும் செய்ய முடியவில்லையே, ஏதாவது வேலை செய்து குடும்பச் சுமைகளைக் குறைக்கலாம் என நினைத்தாலும் என்னால்

எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருக்கிறேனே, என்று தினம் தினம் மனம் நொந்து வாழ்ந்து வந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி என்னைப் போன்ற வயதுக் குறைவாக உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை வழங்குவதற்கானச் சிறப்பு முகாம் நடைபெறு




வதாகவும் அங்குச் சென்று மனு அளித்தால் மாவட்ட ஆட்சியர் உடனடியாக உதவித்தொகை வழங்குவார் என்றும் பலரும் என்னிடம் கூறினர். இதனை என் பெற்றோரிடத்தில் கூறி என்னை எப்படியாவது அந்தச் சிறப்பு முகாமிற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று வற்புறுத்தினேன்.

எனது தந்தையும் என்னை ஈரோடு மாவட்ட ஆட்சியரின் சிறப்பு முகாமுக்கு அழைத்து வந்தார். அங்கே எனது மனு உடனடியாக பரிசீலிக்கப்பட்டு உதவித்தொகை பெற ஆணை வழங்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளில் வயது மாறுபாடு பாராது தேவைப்படும் அனைவரும் பயன்பெறும் வகையில் வயது வரம்பைத் தளர்த்தி மாதம் ரூ.1,000/– உதவித்தொகை வழங்கிட உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார்.

**ஈரோடு மாவட்டம் கோபி, தண்ணீர்பந்தல் புதூர் சி.கே.நகரைச் சேர்ந்த லட்சுமணன் பழனியம்மாள் தம்பதியினரின் கண்பார்வையற்ற மகள் செல்வி கோகிலா (வயது 25) தெரிவித்ததாவது**




"எனக்குப் பிறவியிலேயே இரண்டு கண்களும் பார்வை இல்லாமல் போய்விட்டது. நாங்கள் மிகவும் வறுமையிலும், ஏழ்மையிலும் வாழ்ந்து வருகின்றோம். எனக்குக் கந்தசாமி என்ற சகோதரர் மட்டும் உள்ளார். எனது தந்தை பழைய இரும்பு வியாபாரம் செய்து வருகின்றார். தாயார் வீட்டு வேலை செய்து என்னைப் பராமரித்துப் பாதுகாத்து வருகின்றார்.

ஏழ்மையில் வாடிவரும் எனது பெற்றோருக்கு உதவிட நான் ஏதாவது வேலை செய்து வருமானம் ஈட்டலாம் என நினைத்தாலும் இரண்டு கண்களும் இல்லாத எனக்கு வேலை கொடுக்க யாரும் முன்வருவது இல்லை. இந்த நிலையில் கோபியில் சிறப்பு முகாம் நடக்க உள்ளதாகவும், அங்குச் சென்றால் மாதம் ரூ.1,000/– உதவித்தொகை அரசு மூலம் கிடைக்கும் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர். இதனை அறிந்து நான் சிறப்பு முகாமிற்கு தந்தையுடன் வந்து மனு கொடுத்தேன். அங்கு உடனடியாக எனக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்குவதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

கண் பார்வையில்லாமல் கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்த எனக்கு வயது குறைவாக இருந்தாலும், அதைத் தளர்த்தி மாதம் ரூ.1,000/– உதவித்தொகை வழங்கிட ஆணையிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**கோபி, கருக்காம்பாளையம், புளியங்காட்டு வலசை சேர்ந்த பிறவியிலேயே இரண்டு கால்களால் நடக்க முடியாமல் ஊன்றுகோல் உதவியுடன் நடந்து வரும் பி.வெங்கடேசன் (வயது 20) தெரிவித்ததாவது**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களைப் போன்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் கூடுதல் ஒதுக்கீடு வழங்கி ஆணையிட்டுள்ளார். அதை அறிந்த நான் மேலும் படித்து, அரசு வேலைக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதற்குப் பணவசதி இல்லாமல் தவித்து வந்தேன்.


பி.வெங்கடேசன்

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், வயது குறைவாக இருந்தாலும் சரி மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பை தளர்த்தி மாதந்தோறும் உதவித்தொகை ரூ.1,000/– வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்; விண்ணப்பித்தால் போதும்

உடனடியாக உதவித்தொகை கிடைக்கும் என நண்பர்கள் தெரிவித்தனர். அதன்படி என்னுடைய தந்தையைத் துணைக்கு அழைத்துக் கொண்டு விண்ணப்பம் அளித்தேன். உடனேயே என்னை மருத்துவர் பரிசோதித்து தற்போது ரூ.1,000/– உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எனக்கு வழங்கியுள்ளார். இது எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும், மனதுக்குப் புதிய நம்பிக்கையையும் அளித்துள்ளது. இதை வைத்து நான் விட்ட படிப்பை மேலும் தொடருவேன். நன்கு படித்து நல்ல மதிப்பெண் பெற்று நல்ல வேலைக்குச் சென்று எனது தாய், தந்தையரைக் கடைசி வரை காப்பாற்றுவேன்.

எனக்கு இத்தகைய உதவித்தொகையினை வழங்கி விடுபட்ட கல்வியைத் தொடர புதிய நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு ஆயுள் உள்ளவரை நன்றிக் கடன்பட்டிருப்பேன்'' என்றார்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம் சோழங்கநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி திரு ஆண்டிமுத்து மனம் திறந்து கூறியதாவது**

"நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது எனக்கு 30 வயதாகிறது. இரண்டு வயதில் போலியோவால் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டது. சிறு வயதில் என்னால்


ஆண்டிமுத்து

நடந்துச் சென்று பள்ளியில் படிக்க முடியவில்லை. அந்த சமயத்தில் எனது மாமன் தான் என்னை தினமும் பள்ளிக்கு அழைத்துச் செல்வார். எனக்கு வள்ளி, புஷ்பா ஆகிய இரண்டு சகோதரிகள் உள்ளனர். அவர்களுக்குத் திருமணமாகி விட்டது.

கடந்த 8 ஆண்டுகளாகத் தமிழக அரசிடமிருந்து மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை பெற்று வருகிறேன். கடந்த ஆண்டில் ரூபாய் 500 தான் பெற்று வந்தேன். 1.5.2011 முதல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு மாத உதவித் தொகையை ரூபாய் 1,000– மாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டதன் அடிப்படையில் கடந்த மே மாதம் முதல் ரூபாய் 1,000 உதவித்தொகை பெற்று வருகிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்குக் கடந்த ஆட்சியில் வெறும் 100 ரூபாய் மட்டும்தான் உயர்த்தி வழங்கினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை ரூபாய் 500 ஆக உயர்த்தி மாதந்தோறும் ரூபாய் 1,000 வழங்கி எங்களைப் போன்ற மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்துள்ளார்கள். மேலும், நியாயவிலைக் கடைகளில் 20 கிலோ அரிசி மாதந்தோறும் இலவசமாகப் பெற்று வருகிறோம்.

எங்களைப் போன்ற திக்கற்ற ஏழைகளுக்கு இந்த உதவித்தொகை பயனுள்ளதாக இருக்கிறது. ஏழைகளின் ஒளிவிளக்காகக் கடைக்கோடி மக்களையும் காப்பாற்றும் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி'' என்றும் வாழ்த்தினார்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் பாலக்கரையைச் சேர்ந்த திரு. பிலோமின்ராஜ் என்பவரது மகன் திரு. பி. ஜுலிப் தெரிவிக்கையில்**

"நான் பி.ஏ., வரை படித்துள்ளேன். உடன் பிறந்த சகோதரர்கள் இரண்டு பேர் உள்ளனர். நான் சிறு வயதில் போலியோவால் இடுப்பிற்குக் கீழ் பாதிக்கப்பட்டு, என்னுடைய இரண்டு கால்களும் நடக்க முடியவில்லை. தற்போது முடநீக்கியல் சாதனம் இரண்டு கால்களிலும் பொருத்தப்பட்டுள்ளது.


பி.ஜுலிப்

அரசு வழங்கிய பேட்டரியில் இயங்கக்கூடிய இலவச மூன்றுச் சக்கர வாகனம் வாயிலாகத்தான் என்னால் வேலைக்குச் சென்று வர முடிகிறது. எனக்குக் கணினி தொழில்நுட்பம் தெரியும். திருச்சியில் உள்ள ஸ்ரீராஜ் டி.வி.எஸ்.கம்பெனியில் எனக்கு வேலை கிடைத்தது. மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை பெற மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். மாற்றுத் திறனாளிகள் உள்ளம் குளிர மாதம் ரூபாய் 1,000 உதவித்தொகை வழங்க முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளது எங்களைப் போன்ற ஏழைகளுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது" என நன்றிப்பெருக்குடன் தெரிவித்தார்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாகமங்கலத்தைச் சேர்ந்த விஜயலெட்சுமி கூறியதாவது**




"எனது கணவர் ராஜமாணிக்கம். எனது மகள் ஆசிரியர் பயிற்சி முடித்துள்ளார். எனது இரு கண்களும் முழுவதுமாகப் பார்வையில்லை. நான் அரசு வழங்கிய இலவசப் பேருந்து பயண அட்டை வைத்துள்ளேன். எனக்கு நாற்காலி ஒயர் பின்னும் தொழில் தெரியும். ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு நாற்காலி ஒயர் பின்ன முடியும். இதன் மூலம் ரூபாய் 40 முதல் ரூபாய் 50 வரை வருமானம் கிடைக்கும். மாதத்தில் 8 நாட்கள் வேலை கிடைக்கும். சில மாதம் நாற்காலி ஒயர் பின்னும் வேலை கிடைக்காமலும் இருக்கும்.

தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதம் ரூபாய் 1,000 வழங்க ஆணையிட்டுள்ளார். இதனால் தற்போது எனக்கு மாதந்தோறும் ரூபாய் 1,000 வருவாயை மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். எங்களைப் போன்ற ஏதுமற்ற ஏழை மாற்றுத் திறனாளிகளுக்கு மாதம் ரூபாய் 1,000 வழங்கி முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏழை மக்களின் ஒளிவிளக்காகத் திகழ்கிறார்கள். முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி" என்று தெரிவித்தார்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நாகமங்கலத்தைச் சேர்ந்த மைக்கேல் அந்தோணி தெரிவித்ததாவது**




"எனக்கு 49 வயதாகிறது. எனது மனைவி பெயர் சச்சினாபேகம். நாங்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டோம். எனக்கு இரு கண்களும் பார்வையில்லை. எனக்கு ஒரு மகள் உள்ளார். நாற்காலி ஒயர் பின்னும் தொழில் தெரியும். ஒரு நாளைக்கு 2 நாற்காலிகள் ஒயர் பின்ன முடியும். ஒரு நாற்காலிக்கு ரூபாய் 40 முதல் ரூபாய் 45 வரை கிடைக்கும். மாதத்தில் 10 நாட்கள்தான் வேலை கிடைக்கும். சில மாதங்கள் வேலை இல்லாமலும் இருக்கும். எனக்கு நாற்காலி ஒயர் பின்னும் வேலையைத் தவிர வேறு வேலை ஒன்றும் தெரியாது.

கடந்த காலத்தில் அரசு வழங்கிய உதவித்தொகை குடும்பத்தைக் நடத்துவதற்குக் கஷ்டமாக இருந்தது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மாற்றுத் திறனாளி களுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கி வருகிறார். நியாயவிலைக் கடையில் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கி வருகிறார்கள். இதனால் எங்களுடைய குடும்பக் கஷ்டங்கள் தீர்ந்துள்ளது. தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அம்மா அவர்களுக்கு என்றென்றும் உறுதுணையாக இருப்போம்" என தெரிவித்தார்.

★ ★ ★

# விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் புதியதோர் திட்டம்

## இல்லத்தரசிகளின் இடர்நீக்கும் இணையில்லா அரசு



தமிழகத்தில் நகர் மற்றும் கிராமப்புறங்களில் வாழ்கின்ற இல்லத்தரசிகள், ஆட்டுக்கல்லில் மாவு மற்றும் அம்மிக்கல்லில் மிளகாய் அரைத்து, சமையல் செய்கின்ற கடினமான நிலையினை உணர்ந்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இல்லத்தரசிகளின் வேலையை எளிதாக்கி, அவர்களின் பொருளாதார வளர்ச்சி ஏற்றம் பெறும் வண்ணம், விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்குகின்ற புதியதோர் உன்னத திட்டத்தினை அறிவித்தார்கள்.

இந்த சிறப்புமிகு திட்டத்தின்படி, அரிசி பெற தகுதியுடைய அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்குகின்ற திட்டத்தினை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான **15.9.2011** அன்று திருவள்ளூர், காக்ளூரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்த சிறப்புமிகு திட்டமானது அனைத்து மாவட்டங்களிலும் வாழ்கின்ற இல்லத்தரசிகள் பயன் பெறுமாறு செயல்படுத்தப்பட்டுவருவது, தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத புதுமையாகும்.

இத்திட்டத்திற்காக **2011–12**ஆம் நிதியாண்டில் **1,250** கோடி ரூபாயில் மதிப்பீட்டில் **25** இலட்சம் இல்லத் தரசிகள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டமானது ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியில், ஊராட்சி பகுதியில் உள்ள சிற்றூருக்கு முதல் கட்டமாகவும், பேரூராட்சி பகுதியில் உள்ள சிற்றூர்கள் மற்றும் "வார்டுகளுக்கு", இரண்டாம் கட்டமாகவும், நகராட்சியில் உள்ள சிற்றூர்கள் மற்றும் "வார்டுகளுக்கு" மூன்றாம் கட்டமாகவும், ஏனைய வருவாய் வட்ட கிராமங்களில் உள்ள மாநகராட்சி "வார்டுகளுக்கு" இறுதியாகவும் வழங்கிட ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாவட்டங்களில்**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி**
**வரும் விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும்**
**கிரைண்டர் பெற்ற இல்லத்தரசிகளின்**
**மகிழ்ச்சியான பேட்டிகள் இதோ:**

**புதுக்கோட்டை மாவட்டம் கதுவாரிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திருமதி வெள்ளையம்மாள் தெரிவித்ததாவது**


வெள்ளையம்மாள்

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்கள் நலனில் கவனம் செலுத்தி நலத் திட்டங்களை அறிவித்து இல்லத்தரசிகளுக்கு வழங்கும் விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் அனைத்தும் எங்களுக்குக் கிடைத்துள்ளது.

கிராம மக்களுக்கு இந்தப் பொருட்கள் இதுவரை எட்டாக் கனியாக இருந்தது. அம்மா அவர்களின் ஆட்சியில் தான் எங்களுக்கு இப்பொருட்கள் செலவின்றி கிடைத்துள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றிக் கடன் பட்டவர்களாக இருப்போம். அம்மா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து மக்களுக்கு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றித் தருவார்கள்" என்றார்

**புதுக்கோட்டை மாவட்டம் பிலாவிடுதி கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திருமதி சுப்புலெட்சுமி மெய்யப்பன் தெரிவித்ததாவது**




"மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எங்களுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் கொடுத்துள்ளார். நாங்கள் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறோம். நாங்கள் இந்தப் பொருட்களை விலை கொடுத்து வாங்குவது என்பது இந்த ஜென்மத்தில் இயலாத காரியம்.

இது போன்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து அதன் பயன்களை என்னைப் போன்ற ஏழைகளுக்கு வழங்கி மகிழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சிறப்புடன் ஆட்சி புரிந்திட எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பான். அம்மா அவர்கள் ஆட்சியில்தான் எங்களைப் போன்ற ஏழை மக்கள் தாய்வீட்டுச் சீதனமாக மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி பெற்றுள்ளோம்".

**புதுக்கோட்டை வட்டம் இச்சடி கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திருமதி முத்துலெட்சுமி தெரிவித்ததாவது**




"மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எங்களது குடும்பத்திற்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் ஆகியவைகளை வழங்கியுள்ளார். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள எங்களைப் போன்ற ஏழை எளிய மக்கள் நேரத்தை மிச்சப்படுத்தி பொருளாதார வசதி பெற்றிட, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்னதைச் சொன்னவாறு வழங்கி வருகிறார். ஏழை எளிய நடுத்தர குடும்பங்களை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்னும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றுவார். சந்தேகமே இல்லை".

**புதுக்கோட்டை வட்டம் இச்சடி நகரைச் சேர்ந்த பயனாளி திருமதி லதா திருப்பதி தெரிவித்ததாவது**



லதா திருப்பதி

"ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட அடித்தட்டு மக்களுக்குத் தேவையான அனைத்து நலத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கி எங்களது குடும்பத்தாரை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளார். ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றி துயர் துடைக்க நல்ல பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு ஏழைகள் மனதில் நீங்காத இடம் என்றென்றும் உண்டு".

**ஈரோடு, பேரோடு நொச்சிப்பாளையம் பெருமாள் என்பவரின் மனைவி திருமதி கௌரி (வயது 34) தெரிவித்ததாவது**




"எனது கணவர் விவசாயக் கூலி வேலை செய்து வருகின்றார். எங்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இருவரும் பள்ளியில் பயின்று வருகின்றனர். நான் குடும்ப வேலைகளை மட்டுமே செய்து வருகின்றேன். எனது கணவரின் வருமானத்தை வைத்துக் கொண்டு சிரமமான சூழ்நிலையில் குடும்பம் நடத்தி வருகின்றோம். இந்த நவீன காலத்திலும் ஆட்டுக்கல்லிலும், அம்மிக்கல்லிலும் அரைத்து அவதிக்குள்ளாகி வருகின்றேன். இதற்காக எனது கணவரிடம் எனக்கு மாவு அரைக்க கிரைண்டரையும், சட்னி, மிளகாய் அரைக்க மிக்சியும் வேண்டுமென்று எத்தனை நாள் கேட்டிருப்பேன் தெரியுமா ? எனது கணவரோ, 'கிடைக்கின்ற வருமானத்தில் குடும்பச் செலவை செய்வதே மிகச் சிரமமாக உள்ளது – இதில் எங்கிருந்து நான் மிக்சி, கிரைண்டர் வாங்கித் தருவேன்,' என்று ரொம்பவும் கவலைப்படுவார்.

நானும் மிக்சி, கிரைண்டர் என்று கிடைக்குமோ அன்றுதான் எனது குடும்ப வேலைகளும் சுலபமாக இருக்கும் என்று நாள்தோறும் ஏங்கிக் கொண்டே இருந்தேன். எங்களைப் போன்ற இல்லத்தரசிகளின் கஷ்டத்தை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் எனக்கு மிக்சி, கிரைண்டர் வழங்கியதோடு மின்விசிறியினையும் சேர்த்து வழங்கி யுள்ளார். இதன் மூலம் என்னுடைய சமையல் வேலைகளைச் சுலபமாகவும் விரைவாகவும் செய்து முடிக்க முடிகின்றது. இதனால் குழந்தைகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளிக்கு அனுப்ப முடிகிறது. எனது கணவரும் சரியான நேரத்திற்கு வேலைக்குச் செல்ல முடிகிறது. எனக்கும் வீட்டு வேலைகள் சுலபமாக முடிந்து விடுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இல்லத்தரசிகளின் இன்னல்களைக் குறைக்க எங்களுக்கு மிக்சி, கிரைண்டர் வழங்கியதுடன் இளைப்பாறுவதற்கு மின் விசிறியினையும் வழங்கியுள்ளார். நாங்களே இதுவரையில் வாங்க முடியாமல் இருந்த இப்பொருட்களை மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கு இலவசமாக வழங்கி இருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கிறது.

என்போன்ற இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன்பட்டவளாக இருப்பேன்" என மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

**ஈரோடு, நொச்சிப்பாளையம் செல்லமுத்துவின் மனைவி திருமதி காஞ்சனா (வயது 40) தெரிவித்ததாவது**




"நான் விவசாயக் கூலித் தொழில் செய்து வருகின்றேன். எனது கணவரும் விவசாயக் கூலி வேலை செய்து வருகின்றார். எனக்கு இரண்டு மகள்கள். அவர்கள் பள்ளியில் பயின்று வருகின்றனர். நான் கூலி வேலைக்குச் செல்வதற்கு முன் காலையில் வீட்டு வேலைகளைச் செய்து உணவு சமைத்து குழந்தைகளுக்கு வழங்கி அவர்களைப் பள்ளிக்கு அனுப்பி விட்டு எனது கணவருக்கும் உணவு கொடுத்து வேலைக்கு அனுப்பிவிட்டு அவசர அவசரமாக நானும் கூலி வேலைக்கு சிரமப்பட்டுச் சென்று வந்தேன். வாரத்திற்கு ஒரு நாளோ அல்லது மாதத்திற்கு ஒரு நாளோ எனக்குக் கூலி வேலை கிடைக்காத நாட்களில் ஆட்டுக்கல்லில் மாவு அரைத்து எனது குழந்தைகளுக்கு இட்லி, தோசை செய்து கொடுப்பேன். எனது குழந்தைகளோ, பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்குத் தினந்தோறும் அவங்க அம்மா இட்லி, தோசை செய்து கொடுக்கிறாங்க. நீங்க மட்டும் ஏம்மா

எங்களுக்கு அப்படி செய்து கொடுக்க மாட்டேங்கிறீங்க, என்று கேட்கும்பொழுது நானும் உள்ளத்தில் அழுது கொண்டே, 'அவர்கள் வீட்டில் மிக்சி, கிரைண்டர் இருக்கும்மா. அதுதான் அவங்க ஈசியா இட்லி, தோசை செய்து கொடுக்கறாங்க. நம்ம வீட்டில் மிக்சி, கிரைண்டர் இல்லையே அதனால்தான் முடியவில்லை', என்று ஆதங்கத்தோடு அவர்களிடம் கூறுவேன்.

2011 சட்டமன்றத் தேர்தலின்போது பெரியவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்ட எனது குழந்தைகள் 'நம்ப ஜெயலலிதா அம்மா எல்லோருக்கும் மிக்சி, கிரைண்டர் கொடுக்கப்போறேன்னு சொல்லி இருக்காங்களாமே, அது நமக்குக் கிடைத்தால் தினமும் எங்களுக்கு இட்லி, தோசை செய்து கொடுப்பீர்களா ?' எனக் கேட்டார்கள். நானும் நம்மை போன்ற ஏழைகளுக்கெல்லாம் இலவசமாக மிக்சி, கிரைண்டர், மின்விசிறி கொடுப்பதாக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்காங்க, நிச்சயம் நமக்கும் அது கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தேன்.

எங்க ஆசைப்படியே ஜெயலலிதா அம்மா ஜெயிச்சு வந்து முதலமைச்சர் ஆகி சொன்னது சொன்னபடியே விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் குடுத்திருக்காங்க.

இப்போதெல்லாம் நான் காலையில் கூலி வேலைக்குச் சென்றுவிட்டு மாலையில் வந்து மாவு அரைத்து என் குழந்தைகளுக்குத் தினந்தோறும் இட்லி, தோசை செய்து கொடுக்கிறேன். இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும் எனது குழந்தைகள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**இதே திட்டத்தில் பயன்பெற்ற பேரோடு, கம்புளியம்பட்டியைச் சேர்ந்த வேலுச்சாமி என்பவரது மனைவி திருமதி அம்சவேணி (வயது 35) தெரிவித்ததாவது**


அம்சவேணி

"எனக்குத் திருமணமாகி 10 வருடங்களுக்கு மேலாகிறது. எனது கணவர் தனியார் டையிங் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். நான் வீட்டு வேலைச் செய்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள். இருவரும் அரசுப் பள்ளியில் படித்து வருகின்றனர். எனது கணவருக்கு நாளொன்றுக்கு ரூ.100/—லிருந்து ரூ.150/— வரை வேலையைப் பொறுத்து கூலி கிடைக்கும். அதை வைத்து குடும்பச்செலவு, குழந்தைகளின் செலவு, மருத்துவச் செலவு என அடிப்படை செலவுகளைச் செய்வதே மிகவும் சிரமமாக இருந்து வந்தது.

தினந்தோறும் மாவு அரைப்பது, சட்னி அரைப்பது போன்ற வேலைகளைச் செய்வது எனக்கு மிகவும் சிரமம். அதேபோல் ஓய்வு நேரத்தில் சற்றுக் இளைப்பாற, ஒரு ஃபேன் கூட வாங்க முடியாத சூழ்நிலை. ஒவ்வொரு நாளும் எனது கணவரிடம், 'ஒரு கிரைண்டரோ, மிக்சியோ வாங்கிக் கொடுங்கள், ஓய்வெடுக்க ஒரு சிறிய ஃபேன் வாங்குங்கள்', என்று கேட்டுக்கொண்டே இருப்பேன். அவரும், எனக்கு கிடைக்கும் கூலியை வைத்து குடும்பம் நடத்தவே கஷ்டப் பட்டு வரும் நிலையில் உனக்கு, மிக்சி, கிரைண்டர், ஃபேன் எப்படி வாங்கித் தர முடியும், கவலைப்படாதே நம்மைப் போன்ற ஏழைகளுக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் இலவசமாக மிக்சி, கிரைண்டர், மின்விசிறி

கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைக் கட்டாயமாகச் செய்து கொடுப்பார்கள். நமக்கும் கிடைக்கும்,' என்று ஆறுதல் கூறினார்.

அதேபோல மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும் உடனடியாக எங்களைப் போன்ற ஏழை, எளியவர்களுக்கு இலவசமாக மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்க உத்தரவிட்டு அதன்படி இன்று எனக்கு இம்மூன்று பொருட்களும் இலவசமாகக் கிடைத்திருக்கின்றன.

இப்படி என்னைப் போன்ற எத்தனையோ இல்லத் தரசிகளின் கஷ்டங்களைத் தீர்க்க கனிவோடு மிக்சி, கிரைண்டர், மின்விசிறிகளை இலவசமாக வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருப்பேன்" என்று இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்தார்.

**திருப்பூர் தாலுகா, நாச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் தங்கவேல் (52) மனைவி ரத்தினம் (42). மகன் சுபாஷ் (25). மருமகள் கலைவாணி (20). நால்வரும் கூலி வேலைக்குச் செல்பவர்கள். கலைவாணி தற்போது 7 மாதக் கர்ப்பிணி. தினமும் கூலி வேலைக்குச் செல்லும் கலைவாணிக்குச் சமைக்கத் தாமதமானது. விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி பெற்ற இக்குடும்பத் தலைவி ரத்தினம் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்**

"எங்கள் குடும்பத்தில் அனைவரும் கூலி வேலைக்குச் செல்வதால் ஆட்டுக்கல், அம்மிக்கல்லைப் பயன்படுத்தி சட்னி, மசாலா அரைப்பது, மாவு அரைப்பது போன்றவை




செய்ய மிகவும் கஷ்டமாக இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறியை எங்களுக்கு வழங்கியது எல்லையில்லா மகிழ்ச்சியைத் தந்துள்ளது. கர்ப்பிணியாக இருக்கும் எனது மருமகள் எந்தவித சிரமமும் இன்றி மிக்சி, கிரைண்டரைப் பயன்படுத்தி உணவு தயாரித்து வருகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**திருப்பூர் மாவட்டம், நாச்சிப்பாளையத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளி ரவி(40). இவருடைய மனைவி அந்தோனிஅம்மாள் (38) கூறியதாவது**

எங்கள் வீட்டில் மிக்சி, கிரைண்டர், மின்விசிறி இல்லை. இதனால் மாவு அரைக்க, சட்னி, மசாலா போன்றவை அரைத்துக் கொடுக்குமாறு அருகில் உள்ள வீடுகளுக்குச் சென்று தயங்கித் தயங்கி கேட்டு வந்தேன். சில நேரங்களில் மிகவும் கஷ்டமாக இருக்கும்.




நாமும் இதேபோல் மிக்சி, கிரைண்டரைச் சொந்தமாக வாங்கி உபயோகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றினாலும் குடும்ப வறுமையின் காரணமாக அதை வாங்க முடியாமல் தினம் தினம் வருந்தி வந்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய விலையில்லா தரமான மிக்சி, கிரைண்டர், மின்விசிறி எங்களுக்குக் கிடைத்து விட்டது. இனி பக்கத்து வீட்டுக்குச் சென்று கையேந்த வேண்டிய நிலை இல்லை. என்னைப்போன்ற ஏழைப் பெண்களின் ஏக்கத்தை நிவர்த்தி செய்த அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்", என்றார்.

**நாச்சிப்பாளையத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளி ரூபன் (32). இவருடைய மனைவி பெயர் கிரேஸ்மேரி (29). இவர்களுக்கு ஆசிலின் (5) ஜெஸ்லின் (3) என்ற 2 மகள்கள் உள்ளனர். விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி பெற்ற மகிழ்ச்சி குறித்து கிரேஸ்மேரி கூறியதாவது**

“எங்கள் வீட்டில் மின்விசிறி வாங்க வசதியில்லை. இதனால் இரவு நேரங்களில் கொசுக் கடியால் குழந்தைகள்

தூங்க முடியாமல் தவித்து வந்தனர். மேலும், வெயில் காலங்களிலும் நாங்கள் மிகவும் சிரமப்பட்டோம். தற்போது அம்மா அவர்கள் வழங்கிய விலையில்லா மின்விசிறியால் இரவு நேரங்களில் நிம்மதியாகத் தூங்குகிறோம். இரவில் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கவும் பேருதவியாக இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்", என்றார்.

**நாச்சிப்பாளையத்தைச் சேர்ந்தவர் சுந்தரராஜன் (70).**
**ஆடு மேய்த்து பிழைப்பு நடத்தி வருகிறார்.**
**இவருடைய மனைவி சந்தோஷம் (65)**


சந்தோஷம்

இவர்களுடைய பிள்ளைகளுக்குத் திருமணம் முடிந்து தனியாகச் சென்று விட்டனர். இதனால் சிறிய குடிசையில் கணவன்–மனைவி மட்டும் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். திருமதி சந்தோஷம் மிக்க சந்தோஷத்துடன் கூறியதாவது: "வயதான காலத்தில் நாங்கள் இருவரும் வாழ்க்கையை ஓட்டுவதே சிரமமாக இருந்தது. மகராசி அம்மா அவர்கள் எங்களைப் போன்ற ஏழைகளுக்கு விலையில்லா மிக்சி,



கிரைண்டர், மின்விசிறி வழங்கி உள்ளார். மேற்கண்ட பொருட்களை எங்கள் வாழ்நாளில் வாங்கிப் பயன்படுத்துவோமா? என்ற ஏக்கத்தில் இருந்தோம். இப்போது இந்தப் பொருட்களைப் பெற்றுப் பயன்படுத்தி வருகிறோம்.

இதனால் தோசை, இட்லி போன்ற உணவுப் பொருட்களைத் தயாரித்து சாப்பிடுகிறோம். இரவில் மின்விசிறியில் காற்று வாங்கியபடி படுத்துத் தூங்குகிறோம். தாயுள்ளத்தோடு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்நாள் உள்ளவரை மறக்க மாட்டேன்", என்றார்.

★ ★ ★

# விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம்

## கிராம மக்களுக்குப் பொருளாதார உயர்வு தரும் உன்னத அரசு



"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார். "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் பேரறிஞர் அண்ணா. "அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு, வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை இது நான்கு மறை

தீர்ப்பு'' என்றார் புரட்சித்தலைவர் டாக்டர் எம் ஜி ஆர். இந்த மகத்தான தலைவர்களின் அடிச்சுவட்டில் நடைபோடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3–ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, பல நல்ல திட்டங்களைத் தீட்டி, ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' என்பது தான் அம்மாவின் பெருநோக்கமாகும்.

தமிழகத்தில் "இரண்டாவது வெண்மைப் புரட்சி" உருவாக்க விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தையும், ஏழை எளிய மக்களுக்குப் பொருளாதாரப் பயனளிக்கும் ஆடுகள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் –15 ஆம் நாள் திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் தொடங்கப் பெற்றுப் பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள்.

2011–2012ஆம் ஆண்டில் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 12 ஆயிரம் பயனாளிகளுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2011 – 2012 ஆம் ஆண்டில், 1,00,000 பயனாளிகளுக்கு மொத்தம் 4,00,000 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கி ஏழை மக்களின் வாழ்வில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒளிவிளக்கேற்றி உள்ளார்.

**ஆடுகள் வழங்கும் திட்டம்**

கிராமப்புறங்களில் ஏழ்மையில் வாழும் பெண்களுக்கு என்ன செய்வது? – அவர்களின் வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு உயர்த்துவது? – அவர்களுக்கு என்ன தொழில் தெரியும்? – சுலபமாகவும், அவர்களுக்கு உகந்ததாகவும் எது அமையும்? – என இடையறாது சிந்தித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்ததுதான் ஏழ்மையிலும் ஏழ்மையான குடும்பங்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்.

ஏழ்மையாக உள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளராக உள்ள பெண்கள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியானவர்கள். அவர்கள் அந்தந்தக் கிராம ஊராட்சியில் நிரந்தரமாகக் குடியிருக்க வேண்டும். பயனாளியின் குடும்பத்தில் எவரேனும் ஒருவர் 18லிருந்து 60 வயது உடையவராக இருக்க வேண்டும். பயனாளியின் குடும்பத்தினரோ இரத்த சம்பந்தமான உறவுமுறையிலோ, மத்திய, மாநில அரசுப்பணியில் இருக்கவோ, கூட்டுறவு உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. கணவனை இழந்தவர், கணவனால் கைவிடப்பட்டவர், மாற்றுத் திறனாளி, திருநங்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வாங்க ஒரு ஆட்டுக்கு ரூ.2,500 வீதம் நான்கு ஆடுகள் வாங்க ரூ.10 ஆயிரம் வழங்குவதோடு ஆடுகளுக்குத் தீவனம் வாங்கவும் இருப்பிடக் கொட்டகை போடுவதற்கும் கூடுதலாக ரூ.2,000மும் வழங்கப்படுகிறது. மேலும், சந்தையிலிருந்து பயனாளிகள் ஆடுகளைத் தங்கள் கிராமங்களுக்குக் கொண்டு செல்ல வண்டி வாடகை

ரூ.150ம், நோய்வாய்ப்பட்டு ஆடுகள் இறந்து போனால் பயனாளிகள் அந்த ஆடுகளுக்குரிய இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு ஏதுவாக 4 ஆடுகளுக்கும் காப்பீடு செய்து அதற்குரிய தொகை ரூ.300–ஐயும் அரசே செலுத்திவிடுகிறது.

ஒரு பயனாளிக்கு 6 மாத வயதுடைய 4 ஆடுகள் (3 பெட்டை 1 ஆண்) வீதம் வழங்கப்படும். பயனாளியின் விருப்பப்படி செம்மறி ஆடு அல்லது வெள்ளாடு வாங்கிக் கொள்ளலாம். ஆடுகள் கொள்முதலில் ஆடுகளை விலைபேசி முடிவு செய்வதை பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும். ஆடுகள் ஆரோக்கியமாக இருப்பதைக் கால்நடை மருத்துவக் குழு அங்கீகரித்த பின் காப்பீடு செய்து, விற்பனையாளருக்குத் தொகை வழங்கப்படும். ஒவ்வொரு பெட்டை ஆடும் இரண்டு ஆண்டுகளில் மூன்று முறை குட்டிகள் ஈனும். ஒரு ஆடு 2–3 குட்டிகளை ஒவ்வொரு முறையும் ஈனும். இரண்டு ஆண்டுகளில் ஒரு ஆடு 6லிருந்து 9 குட்டிகளைப் போடும். ஒரு பயனாளிக்கு இரண்டு ஆண்டுகளில் 12 லிருந்து 18 குட்டிகள் வரை கிடைக்கும். 6மாத வயதுடைய ஒரு குட்டியை ரூ.2500–க்கு விற்பனை செய்வது என்றாலும் மொத்தம் ரூ.30,000/– வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில், தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநரின் ஆலோசனையின்படி கால்நடை மருத்துவர்கள் அடங்கிய பணியாளர் குழுக்கள் வாரந்தோறும் ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கி, தடுப்பூசிகள் போட்டு மற்றும் நோயுற்ற ஆடுகளுக்கு அனைத்து

சிகிச்சைகளையும் அளித்து ஆரோக்கியத்தை வழங்கி ஏழை மக்களின் வாழ்வாதாரத்தைக் காத்து வருகிறார்கள்.

**கறவை மாடுகள் வழங்கும் திட்டம்**

தமிழகத்தில் உள்ள ஏழைப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் 5 ஆண்டுகளில் 60,000 கறவை மாடுகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக 2011–2012ஆம் ஆண்டில் கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு 12,000 கறவை மாடுகள் வழங்குவதற்கு ரூ.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்வு செய்ய கிராம அளவில் குழு அமைக்கப்படுகிறது. இக்குழுவின் மூலம் தான் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் கிராம சபை ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளில் கூட்டுறவுத் துறையின் மூலம் முதலில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு அதில் உறுப்பினர்களாகக் கறவை மாடுகளைப் பெறும் பெண்கள் சேர்க்கப்படுகின்றனர். ரூ.29,000 முதல் ரூ.30,000 மதிப்பிலான விலையுயர்ந்த கலப்பின பசுக்களை பயனாளிகளே ஆந்திரா, கர்நாடக மாநில சந்தைக்குச் சென்று தேர்வு செய்கின்றனர். மேலும், அரசின் சார்பில் கறவை மாடுகளுக்குக் காப்பீடும் செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைப்படி, கால்நடை மருத்துவர்கள் வாரம் ஒரு முறை கறவை மாடுகள் பெற்றவர்களை நேரில் சந்தித்துக் கறவை மாடுகளின் உடல்நலம் குறித்து சோதனை செய்கிறார்கள். மேலும், தடுப்பூசி மற்றும் சினை ஊசிகளைப் போட்டு வருகிறார்கள்.

கறவை மாடுகளைச் சிறப்பாக வளர்ப்பது குறித்து ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள். கால்நடை மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் இத்திட்டம் செயல்படுவதால் கறவை மாடுகள் ஆரோக்கியத்துடன் அதிக அளவில் பால் கறக்கிறது.

ஏழைகள் சுயதொழில் புரிவதன் மூலமாகத் தங்களது தேவைகளை நிறைவு செய்வதற்காக வீட்டின் பொருளா தாரத்தை மட்டுமின்றி நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையிலான இந்தச் சீரிய திட்டத்தை நாட்டிற்கே முன்னோடியாகத் தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறைப் படுத்தியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி
அம்மா அவர்களின் இந்தச் சிறப்புத்
திட்டத்தின் மூலம் ஆடுகள் மற்றும் கறவை மாடு
பெற்றுப் பயன் அடைந்து வரும் ஏழை எளிய
மக்களின் இதயங்கள் பேசுகிறது இங்கே.

**ஆடுகள் பெற்று பயன்பெற்று வரும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், பிரம்மதேசத்தைச் சார்ந்த பார்வதி பெரியசாமி, கூறியதாவது**


பார்வதி பெரியசாமி

"நாங்கள் கூலி வேலைக்குப் போகிறோமே, இந்த ஆடுகளை எப்படி வளர்ப்பது, மிகவும் சிரமமாக இருக்குமே என்றுதான் முதலில் நினைத்தோம். ஆனால், இப்போது கூலி வேலைக்குப் போற இடத்திலேயே ஆடுகளை மேயவிட்டு கூலி வேலைகளையும் பார்த்து வருகிறோம். இதில்

எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது. குட்டி ஈன்றதால் எங்களின் வருமானமும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த வருமானத்தில் எங்கள் குழந்தைகளைப் படிக்க வைத்துவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இன்னும் 2 வருடத்தில் 15 குட்டிகள் போடும் என்று எதிர்பார்க்கிறேன். இதன் மூலம் எங்கள் பொருளாதார நிலை வெகுவாக மேம்படும் என்ற புது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது". எங்களின் வாழ்க்கையில் இந்த மாற்றத்தை உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் நன்றி என்றைக்கும் உரித்தாகும்.

**ஆடுகள் பெற்று பயனடைந்து வரும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், பிரம்மதேசத்தைச் சார்ந்த பஞ்சவர்ணம், க/பெ. ராமசாமி கூறியதாவது**


பஞ்சவர்ணம்

"நான் பரம ஏழை. நான் கூலி வேலை செய்து குடும்பம் நடத்தி வருகிறேன். அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு எனது ஜீவனம் நடந்து கொண்டிருக்கிறது. முதல்வர் அம்மா அவர்கள் திட்டம் அறிவித்த முதல் கட்டத்திலேயே எங்கள் ஊருக்கு ஆடுகள் வழங்கி குறிப்பாக, எனக்கு மூன்று பெட்டை ஆடுகளும், ஒரு கெடா ஆடு வழங்கியவுடன் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தேன். இதையறிந்த அக்கம் பக்கம் உள்ள கிராம மக்கள் தங்களுக்கு எப்போது கிடைக்கும் என்று கேட்கின்றனர். 'சிறுகக் கட்டி பெருக வாழ்' என்பார்கள். இந்தச் சிறிய

ஆடுகளைக் கொண்டு ஆடுகளின் இனவிருத்தி வாயிலாக ஒரு ஆட்டு மந்தையையே என்னால் உருவாக்க முடியும் என்று நிச்சயமாக நம்புகிறேன். அதன் மூலம் பல ஆயிரக் கணக்கான ரூபாய் வருவாயை என்னால் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இதனால் என் எதிர்காலம் பற்றி எந்த பயமுமில்லை. இத்தகைய நம்பிக்கைக்குக் காரணமான மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கன்னியாகுமரி மாவட்டம், இரவிபுதூர் வண்ணார் காலனியைச் சார்ந்த பயனாளி திருமதி பகவதியம்மாள் (வயது 37) க/பெ. சேகர் தெரிவிக்கையில்**

"நானும் எனது கணவரும் சலவைத் தொழில் செய்து வருகிறோம். எங்களுக்குக் குழந்தைகள் கிடையாது. எனது கணவருக்கு 50 வயது ஆகிறது. அதனால் குடும்பத்திலுள்ள பொறுப்பு எனக்குதான் அதிகமாக உள்ளது. கூலிவேலையை மட்டுமே இதுநாள்வரை நம்பி வாழ்ந்தோம். ஆனால், தற்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆடுகள் வழங்கும் திட்டத்தால் எங்களது வருமானத்தை அதிகப்படுத்தியது மட்டுமல்லாமல் எங்களுக்குக் குழந்தைகள் இல்லாத கவலையை ஆடுகளை வளர்ப்பதன் மூலம் மறக்கிறோம். அம்மா அவர்களுக்கு எங்கள் நன்றி".

**வெள்ளமடத்தைச் சார்ந்த பயனாளி திருமதி புனிதா (வயது 37) க/பெ முருகன் தெரிவித்ததாவது**

எங்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். மூத்த பெண் நர்சிங் படித்து வருகிறாள். இரண்டாவது மகள்

12ஆம் வகுப்பு படித்து வருகிறாள். நானும் எனது கணவரும் கூலி வேலை செய்து வருகிறோம். எந்த வேலையையும் சுறுசுறுப்பாகவும் உடனுக்குடனும் செய்யும் திறன் என்னிடம் உள்ளது. ஆனால், பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் முதலீடு தேவைப்படும் எந்தத் தொழிலும் எங்களால் செய்ய முடியவில்லை. அதனால், தினமும் கூலி வேலைக்குத்தான் சென்று வருகிறோம். எங்களுக்கு நிலையான வருமானம் எதுவும் இல்லை. ஆனால், தற்பொழுது எங்களது வாழ்வில் ஒளிவீசும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் குறிப்பாக, பெண்களைக் மையமாக வைத்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் பொருளாதாரத்தில் நிலையான ஒரு வருமானத்தைப் பெறும் முயற்சியாக ஆடு வழங்கும் திட்டத்தை எங்களுக்காக அறிமுகம் செய்து வைத்துள்ளார்கள். இத்திட்டத்தைப் பெற நிறைய செலவாகுமோ என எண்ணி நமக்கு ஆடுகள் கிடைக்க வாய்ப்பு இல்லை என நினைத்தோம்.

ஆனால், எந்தவிதச் செலவும் இல்லாமல் ஆடுகள் எங்களுக்குக் கிடைக்கப் பெற்றதை நினைக்கும்போது மிகவும் சந்தோசமாக உள்ளது. எங்களுக்கு ஆடு வளர்க்கும் முறையில் ஒரு பிடிமானத்தை இத்திட்டம் தந்துள்ளது. நல்ல முறையில் அரசு கூறிய வழிமுறைகளில் ஆடுகளை வளர்த்து எங்களது பொருளாதார நிலை உயர வேண்டும்; வாழ்வில் நாங்கள் முன்னேற வேண்டும் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தை ஈடேற்றுவோம்".

**நாமக்கல் மாவட்டம் புள்ளாகவுண்டம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கறவை மாடுகள் பெற்ற ஆராயி தெரிவிக்கையில்**


ஆராயி

"எனது பெயர் ஆராயி. கணவர் பெயர் ராமன். நாங்கள் இருவரும் தினக்கூலி வேலைதான் செய்து வருகிறோம். தினக்கூலி தொடர்ந்து கிடைக்காது. மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தோம். இந்நிலையில் முதல்வர் அம்மா அவர்களின் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் நான் தேர்வு செய்யப்பட்டேன். இத்திட்டத்தின்கீழ் நானே ரூ.29,000 மதிப்பிலான கறவை மாட்டினைத் தேர்வு செய்தேன்.

தற்போது கூலி வேலை கிடைக்காத நிலையில் அம்மா வழங்கிய கறவை மாட்டின் மூலம் பால் கறந்து எங்கள் வாழ்க்கையைச் சிறப்பானதாக ஆக்கிக்கொண்டோம். கறவை மாடு மூலம் தினசரி 8 லிருந்து 10 லிட்டர் வரை பால் கிடைக்கிறது. இதை சொசைட்டியில் ஊற்றி விடுகிறேன். தினசரி நானே மாட்டினை மேய்ச்சலுக்கு கொண்டு செல்கிறேன். மேய்ச்சலின் மூலம் மாட்டிற்குப் பசுந்தீவனம் கிடைக்கிறது. அத்துடன் குறைந்த அளவு கலப்புத் தீவனத்தை மாட்டிற்கு வழங்கி வருகிறேன். தீவனம் மற்றும் பராமரிப்புச் செலவு குறைவாக உள்ளது. இதனால் எதிர்பார்ப்புக்கு மேல் வருவாய் கிடைக்கிறது. இதன்மூலம் என்னுடைய குடும்ப வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. கோமாதா வழங்கிய எங்கள் குலமாதா முதல்வர் அம்மா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவேண்டும்".

**நாமக்கல் மாவட்டம் புள்ளாகவுண்டம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கறவை மாடு பெற்ற சாந்தி தெரிவிக்கையில்,**


சாந்தி

"எனது பெயர் சாந்தி. எனது வீட்டுக்காரர் பெயர் இராஜேந்திரன். நாங்கள் இருவரும் கூலி வேலை செய்து வருகிறோம். எங்களுக்கு ஒரு மகன், இரண்டு மகள்கள் உள்ளனர். கல்லூரியில் படித்து வருகிறார்கள். இவர்களைப் படிக்க வைக்க கடன் வாங்கி இருந்தேன். கடனைக் கட்டுவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில் முதல்வர் அம்மா அவர்கள் விலையில்லா கறவை மாட்டினை எனக்குத் தந்துள்ளார்கள்.

கறவை மாடு மூலம் எங்கள் குடும்பத்திற்குத் தொடர்ந்து வருவாய் கிடைத்து வருகிறது. கறவை மாட்டை வளர்ப்பது குறித்தும் அதிக அளவில் பால் கறப்பது குறித்தும் அரசு கால்நடை மருத்துவர்கள் ஆலோசனை வழங்கி ஊசியெல்லாம் போடுறாங்க.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ள கறவை மாடு மூலம் கிடைக்கும் வருமானம் எங்கள் மகள், மகன் ஆகியோரின் கல்விச் செலவிற்கு பெரும் பயனுள்ளதாக உள்ளது. ஏழையாகிய எங்களின் பிள்ளைகள் வாழ்வில் ஒளிவிளக்கேற்றி கடனில்லா வாழ்க்கைக்கு உறுதுணை புரிந்த அம்மா அவர்களுக்குக் கோடான கோடி நன்றி".

**விலையில்லா ஆடுகள் பெற்ற கோவை மாவட்டம், ஏ. நாகூரைச் சேர்ந்த ரத்தினம் கூறுகையில்**




"ஏழையான தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த எனக்கு அம்மா அவர்கள் கருணையோடு 4 ஆடுகள் வாங்கிக் கொடுத்தார்கள். என்னிடம் சொத்து ஏதும் இல்லாத சூழ்நிலையிலும் ரூ.9,200/– மதிப்புள்ள ஆடுகள் தரப்பட்டன. ஒரு ஆடு தற்போது மூன்று குட்டிகளையும், ஒரு ஆடு ஒரு குட்டியையும் ஈன்றுள்ளதால் மொத்தம் நான்கு குட்டிகள் தற்பொழுது என்னிடம் உள்ளது. இதனால் எனக்கு தன்னம்பிக்கை ஏற்பட்டதோடு என் சொத்தாக ஆடுகள் உள்ளதால் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஆறு மாதத்திற்குப் பிறகு இதிலிருந்து சுமார் 15,000/– வருமானம் கிடைப்பது கண்கூடாக இப்போதே தெரிகிறது. இதை வைத்தே எனது வாழ்க்கையை ஓட்டும் அளவிற்கு இருக்கப்போவது உண்மை. இந்த வாய்ப்பை வைத்து சிறிய அளவிலான ஆட்டுப்பண்ணை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவேன். இந்த வாய்ப்பை வழங்கிய தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோவை மாவட்டம், கருமாபுரம் அய்யம்பாளையத்தைச் சேர்ந்த ஈஸ்வரி கூறுகையில்,**




"வறுமைக்கோட்டிற்கு கீழ் இருந்த எனக்குத் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் நான்கு வெள்ளாடுகள் வழங்கினார்கள்.

கொட்டகை அமைத்து நல்ல முறையில் பராமரித்ததனால் எனது ஒரு ஆடு மூன்று குட்டிகளை ஈன்றுள்ளது. எந்தவிதச் சொத்தும் இல்லாதிருந்த நான், தற்பொழுது சுமார் 15,000/– மதிப்பிலான சொத்துக்குச் சொந்தக்காரியாகி உள்ளேன்.

இந்தக் குட்டிகளை வளர்த்து விற்பனை செய்து அதன் மூலம் வருமானம் ஈட்ட ஆசைப்படுகிறேன். எனக்கு அனைத்து உதவிகளையும் செய்தவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் வாழ வழிகாட்டிய முதல்வர் அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோவை மாவட்டம், ஏ.நாகூரைச் சேர்ந்த பாப்பாத்தி கூறுகையில்**




"விவசாயக் கூலி வேலைக்குப் போய்வந்த எனக்கு விலையில்லா ஆடுகள் வழங்குவதாகத் தெரிவித்தார்கள். மனுக் கொடுத்தேன். இத்திட்டத்தில் தேர்வு செஞ்சாங்க. எனக்கு மூன்று பொட்டை ஆடு, ஒரு கிடாவை குண்டடம் சந்தையில் வாங்கிக் கொடுத்தார்கள். கொட்டகை அமைத்து நன்றாக பராமரித்து வருகிறேன். எனது ஒரு ஆடு ஒரு குட்டி போட்டுள்ளது. ஆடு வளர்ப்பதற்காகப் பயிற்சி கொடுத்தாங்க.

ஆட்டுக்குத் தேவையான வைத்தியத்தை டாக்டருங்க வாரா வாரம் எங்க வீட்டுக்கே வந்து செஞ்சாங்க. கூலி வேலைக்குப் போன எனக்கு இப்போது 13,000/– மதிப்பிலான சொத்து உள்ளது. இது எனக்கு சந்தோஷமாக இருக்குது. இதவச்சு பெரிய ஆட்டுப்பண்ணையா அமைப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. எனது வாழ்க்கையில் ஒளியேற்றி வச்ச முதலமைச்சர் அம்மாவுக்கு எனது நன்றி".

**கோவை மாவட்டம் கரப்பாடியைச் சேர்ந்த அய்யம்மாள் கூறுகையில்**




"8.8.2011 அன்று கரப்பாடி கிராமத்தில் கிராம சபைக் கூட்டம் நடை பெற்றது. அக்கூட்டத்தில் முதல்வர் அம்மா அவர்கள் கொண்டுவந்த இலவசமாக ஆடுகள் வழங்கும் திட்டம் பற்றிச் சொன்னார்கள். நான் கூலி வேலை செய்வதால நானும் இத்திட்டத்தில் சேர மனு கொடுத்தேன். எனவே, என்னையும் தேர்வு செய்தனர்.

தேர்வு செய்யப்பட்டதால் 4 ஆடுகள் வாங்கிக் கொடுத்தனர். அந்த ஆடுகளை நான் பராமரித்து வருகிறேன். தற்போது 4 ஆடுகளுக்குச் சொந்தகாரியாக உள்ளேன். இதனால் என் மனதுக்கு சந்தோசமாக உள்ளது. தற்போது ஒரு ஆடு ஒரு குட்டியும் போட்டுள்ளது. அந்தக் குட்டியும் நன்றாக உள்ளது. எனவே, வருங்காலத்தில் வழங்கப்பட்ட ஆடுகளை நன்குப் பராமரித்து பல ஆடுகளுக்குச் சொந்தகாரியாக இருப்பேன். இதனால் எங்க வாழ்க்கையும் உயருங்க. இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த அம்மாவுக்கு நன்றிங்க".

**கோவை மாவட்டம் கரப்பாடியைச் சேர்ந்த லட்சுமி கூறுகையில்**




"8.8.2011 அன்று கரப்பாடி கிராமத்தில் கிராம சபைக் கூட்டத்தில் அரசாங்கம் மூலமாக இலவச ஆடுகள் வழங்குவதைப் பற்றி விவரமாகச் சொன்னாங்க. நான் கூலி வேலை செய்து வருவதால இலவச ஆடுகள் வாங்க மனு கொடுத்தேங்க. என்னையும் இத்திட்டத்தில் தேர்வு செஞ்சாங்க.

எனக்கு 4 ஆடுகள் இலவசமாக வாங்கிக் கொடுத்தாங்க. எனக்கு வழங்கப்பட்ட ஆடுகளை நல்லமுறையில் கவனித்து வருகிறேனுங்க. எனக்கு சொந்தமாக ஆடுகள் இருக்குது என்பதை நினைக்கும் போதே என் மனசு நிறைஞ்சுடுதுங்க. இந்த இலவச ஆடுகள் மூலம் என் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வேன் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்குங்க. என்னைப் போன்றவர்களின் மனம் குளிருகின்ற வகையில் திட்டத்தைக் கொண்டு வந்த முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றிங்க".

**இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம் இடையன்குளம் கிராமத்தைச் சேர்ந்த விலையில்லா கறவை மாடு பெற்ற பயனாளி திருமதி மூ.சரோஜா இத்திட்டத்தினால் ஏற்பட்ட பயனைக் கூறுகையில்**




"நான் எனது சொந்த ஊரான இடையன் குளத்தில் எனது கணவருடன் கட்டடத் தொழில் மற்றும் விவசாயக்கூலி வேலைகளைச் செய்து வருகிறேன். எனது வருமானம் குடும்பத்திற்குப் போதுமானதாக இல்லை. மேலும், எனது குழந்தைகளை ஆரம்பக்கல்வியில் சேர்ப்பதற்குக்கூட மிகவும் கடினமாக இருந்த சூழ்நிலையில், தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏழைகளாகிய எங்களின் பொருளாதாரம் முன்னேற்றம் பெறும் வகையில் உயர்ரக கறவை மாடு ஒன்றை வழங்கி இருக்கிறார்கள்.

இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.200/– கிடைப்பதில், மாட்டின் தீவனத்திற்காக ரூ.50/– செலவு போக மீதி ரூ.150/– கிடைக்கிறது. மாடு என்றால் செல்வம். செல்வத்திற் குரியவள் லெட்சுமி என்றும் பெரியவர்கள் சொல்வார்கள். ஆகவே, எங்களது வீட்டிற்கு அம்மாவின் கருணையால் லெட்சுமி பசு மாட்டின் வடிவில் வந்ததாகக் கருதுகின்றேன். மேலும், என்னுடைய குழந்தைகளுக்குத் தேவையான பால் கிடைப்பதால் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். எனவே, விலையில்லா கறவை மாடு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம், அனுக்கூர் குடிகாடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பாண்டியன் மனைவி இந்தியா கூறியதாவது**




என்னோட பேரு இந்தியா, வீட்டுகாரர் பேரு பாண்டியன். நாங்கள் அ.குடிகாடு கிராமத்தில் வசித்து வருகின்றோம். ரெண்டு பேருமே விவசாயக் கூலி வேலைக்குதான் போறோம். நிரந்தர வருமானம் ஏதும் இல்லை. ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். மகன் 6ஆம் வகுப்பு படிக்கிறான், மகள் 12ஆம் வகுப்பு படிக்கிறாள். என் கணவர் மனநிலை சரியில்லாதவர். கடந்த சில வருஷங்களா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் எந்தவொரு வேலைக்கும் செல்ல இயலாது. அவருடைய சிகிச்சை செலவு மற்றும் பிள்ளைகளின் படிப்புச் செலவு ஆகியவற்றை எல்லாம் சமாளிப்பது என்னுடைய வருமானத்தை வைத்துதான். நிரந்தர வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தோம். இந்தச் சூழ்நிலையில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலவசமாக ஆடு கொடுக்கிற திட்டத்தில என்னோட குடும்பத்துக்கு 4 வெள்ளாடுகள் வழங்கியுள்ளார்கள்.

இந்த ஆடுகளை நான் நல்லமுறையில் பராமரித்து வருகிறேன். தற்போது ஒரு ஆடு ஒரு குட்டி போட்டுள்ளது. அதனை நல்லமுறையில் வளர்த்து 6 மாதத்தில் அதனை குறைந்தது மூவாயிரத்திற்கு விற்பேன். மற்ற ஆடுகளும் குட்டி போடும்போது வருடத்திற்கு 10 குட்டிகள் என்று வைத்தால்கூட அதிலிருந்து வருடத்திற்கு ரூ.30ஆயிரம் என் குடும்பத்திற்கு வருமானம் கிடைக்கும். இதை வைத்து என் பிள்ளைகளை படிக்கவைக்கவும், குடும்பத்தின் அன்றாடச்

செலவுகளை ஈடுசெய்யவும் முடியும். எங்கள் குடும்பத்திற்கு நிரந்தர வருமானம் கிடைப்பதற்கு வழிவகை செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

**பெரம்பலூர் மாவட்டம், அகரம் கிராமம் சோலைமுத்து மனைவி அங்கம்மாள் கூறியதாவது**




நான் மாற்றுத் திறனாளி யாவேன். எனது கணவர் ஓட்டலில் தினக்கூலியாக வேலை செய்து வந்தார். தற்சமயம் அவரும் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வேலைக்குச் செல்ல இயலாத நிலையில் உள்ளார். எனது ஒரு மகன் 10ஆம் வகுப்பு படித்து வருகின்றான். சொந்த நிலமோ வீடோ இல்லாத நாங்கள் குடும்பம் நடத்த போதிய வருமானம் இன்றி மனம் நொந்து இருந்த போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் ஆடு வழங்கத் தேர்வு செய்யப்பட்டேன். சிறுவாச்சூர் ஆட்டுச் சந்தையில் நான்கு ஆடுகளை வாங்கி வந்து டாக்டர்கள் சொன்னபடி நன்குப் பராமரித்து வருகிறேன். தற்போது ஒரு ஆடு குட்டி போட்டுள்ளது. இந்த ஆடுகளை வைத்து எனது மகனை நல்லமுறையில் படிக்க வைக்கலாம் என்ற நம்பிக்கையும், சமுதாயத்தில் நாமும் நல்ல முறையில் வாழலாம் என்ற மன தைரியமும் ஏற்பட்டுள்ளது. எனக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமாற கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெரம்பலூர் மாவட்டம், அந்தூர் கிராமம் பிச்சைபிள்ளை மனைவி கொளஞ்சியம்மாள் கூறியதாவது**



கொளஞ்சியம்மாள்

"எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளன. எனது கணவர் உதடு அன்னபிளவு குறையுடையவர். அவர் வெளியில் சென்று வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத நிலையில் நான் கூலி வேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றேன். எனது இரண்டு பெண் பிள்ளைகளில் ஒருவர் ஏழாம் வகுப்பிலும், மற்றவர் ஒன்பதாம் வகுப்பிலும் படித்து வருகிறார்கள். அவர்கள் படிப்புச் செலவு மற்றும் குடும்பச் செலவு ஆகியவற்றிற்கு எனது வருமானம் மட்டும் போதுமானதாக இல்லை.

விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் கிராமப் பஞ்சாயத்தில் ஆடு வழங்க வேண்டி மனு கொடுத்தி ருந்தேன். தற்போது சிறுவாச்சூர் ஆட்டுச் சந்தையில் நான்கு ஆடுகளை வாங்கி வந்து டாக்டர்கள் சொன்னபடி நன்கு பராமரித்து வருகிறேன். தற்போது ஒரு ஆடு குட்டி போட்டுள்ளது. இந்த ஆடுகளை வைத்து எனது இரண்டு மகள்களையும் நல்லமுறையில் படிக்க வைக்கலாம் என்ற நம்பிக்கை உள்ளது. எனக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம் பெரிய சிட்டுலொட்டி கிராமத்தில் வசிக்கும் திருமதி ஜெயலட்சுமி என்பவர் கூறும்பொழுது**



ஜெயலட்சுமி

“எனக்கு 50 வயசாகுதுங்க, எனது கணவர் பெயர் முத்தப்பன், நாங்க அன்றாடம் கூலி வேலை செஞ்சுதான் பொழைக்குறோம். வேற எந்தத் தொழிலும் எங்களுக்கு தெரியாது. ஆனா, ஆடு மாடு மேய்க்குறது கிராமத்துல உள்ளவங்களுக்குப் பழக்கப்பட்ட ஒரு விஷயம். அதைப் புரிஞ்சுக்கிட்டு முதல்வர் அம்மா அவர்கள் என்னைப்போல உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு 4 ஆடுகள் கொடுக்குறாங்க. அதிலும் 3 பெட்டை ஆடுகளும், 1 கிடா ஆடும் கொடுக்குறாங்க. அவற்றை வளர்ப்பதற்குத் தேவையான கொட்டகை அமைத்து அவைகளுக்குத் தேவையான தீவனச் செலவுக்காகவும், காப்பீடு செய்வதற்கும் பணம் கொடுக்குறாங்க. இத்தன உதவிகள செஞ்ச நம்ம முதல்வர் அம்மா அவங்க நீடூழி வாழணும்னு வாழ்த்துறோம். எங்க குடும்பமே வாழ்நாள் எல்லாம் அம்மா அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கும்” என்றார்.

**கறவைமாடு பெற்ற சிவகங்கை மாவட்டம் கண்ணமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த திருமதி பூமாதேவி கூறுகையில்**




"நான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவள். தற்போது காலனி வீட்டில் வசித்து வருகிறேன். கணவரை இழந்து ஆறு வருடங்கள் ஆகிறது. மிகவும் கஷ்டத்துடன் வாழ்ந்து வருகிறேன். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி எனக்குக் கறவை மாடு வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் தினமும் 10 லிட்டர் பால் கறந்து ஆவின் சொசைட்டியில் ஊற்றி வருகிறேன்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாய் எனது குடும்ப வறுமையை போக்க உதவுகிறது. இந்தப் பேருதவியை எனக்குச் செய்த முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**சிவகங்கை மாவட்டம், மருதங்கநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த திருமதி. வெள்ளை நாச்சியார் கூறுகையில்**




"எனக்கு விவசாய நிலம் ஏதும் இல்லை. விவசாயக் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகின்றேன். எனக்கு நான்கு பெண் பிள்ளைகள். இவர்களை எப்படிக் கரையேற்றுவது என்று நினைத்திருந்த நேரத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கறவைமாடு வழங்கும் திட்டத்தில் எனக்கு ஒரு மாடு கொடுத்தார்கள்.

அதை நன்குப் பராமரித்து வருகின்றேன். நாள் ஒன்றுக்கு எட்டு லிட்டர் பால் கொடுக்கின்றது. எனக்கு வாழ்வளித்த முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மிக்க நன்றி கூறுகிறேன்" என்று தெரிவித்தார்.

**ஆடுகள் பெற்ற சிவகங்கை மாவட்டம், கண்ணங்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த திருமதி சி. பாக்கியலெட்சுமி கூறுகையில்**

"எனது கணவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இடிதாக்கி இறந்து விட்டார். இரண்டு குழந்தைகளை வளர்க்க கூலி வேலை செய்து வருகிறேன். மாண்புமிகு




தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் கருணையால் ஆடுகள் வழங்கும் திட்டத்தில் என்னை கிராமசபைக் கூட்டத்தில் தேர்வு செய்தார்கள். நான் 29.08.11 அன்று திருவாடானை சந்தைக்குச் சென்று நான்கு ஆடுகள் 6 மாத குட்டியில் வாங்கினேன். பராமரிப்பு மற்றும் போக்குவரத்துச் செலவினமான ரூ.2,150 கொடுத்தார்கள். பின்பு ஆடுகளுக்கு தடுப்பூசி, பூச்சி மருந்து என டாக்டர்கள் குழு இலவசமாகச் செய்தார்கள். எனக்கு ஒரு சொந்தத் தொழில் செய்வதுபோல மனநிறைவுடன் வாழ்கிறேன். அம்மாவுக்கு எனது மனமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தனது நன்றிப் பெருக்கை வெளிப்படுத்தினார்.

**சிவகங்கை மாவட்டம், செல்லப்பனேந்தல் ஊராட்சியைச் சேர்ந்த திருமதி கற்பகம் கூறுகையில்**

"நிலமற்ற விவசாயக் கூலி வேலை செய்யும் எனக்குச் சொந்தமாக கால்நடைகள் ஏதுமில்லை. மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வரும் எனக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நான்கு வெள்ளாடுகள் மற்றும் அதற்குக் கொட்டகை அமைக்க பணமும் அளித்தனர். இந்த வெள்ளாடு வளர்ப்பு என் போன்ற




ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு வாழ்வாதாரத்திற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் மிகவும் உதவியாக உள்ளது. இத்திட்டத்தினை அளித்த தமிழக அரசுக்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்", என்று தனது உளமார்ந்த உணர்வை வெளிப்படுத்தினார்.

கிராமங்களில் வாழும் ஏழை எளிய குடும்பங்களை உயர்த்தும் உன்னதத் திட்டங்களே கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டங்களாகும். கால்நடைகள் எப்படி குடும்பத்திற்குப் பயன்தருகிறதோ அதுபோல் நிலத்திற்கும் அவைகளின் எரு பயன்படுகிறது. முன்பு கிராமங்களில் கால்நடைகள் அதிக அளவில் இருந்த காலங்களில் செயற்கை உரப் பயன்பாடு மிகவும் குறைவாக இருந்தது. தற்போது விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டங்களினால் கிராமங்களில் பயன்பெறும் பயனாளிகள் மட்டுமின்றி அதைப்பார்க்கும் மற்றவர்களும் கால்நடைகளை வளர்க்க வேண்டும் என்று விரும்புவார்கள். அந்த வகையில் கால்நடை வளமும் மண்ணின் வளமும் பெருகுவதோடு அதன் மூலம் கிராம மக்கள் குடும்ப வளமும் பெருகும் என்பது நிச்சயம்.

★ ★ ★

# பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் தலையாய பெருந்திட்டம்

## மாணவர்களின் தொழில்நுட்ப பேரறிவை மேம்படுத்தும் மேன்மைமிகு அரசு



மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ‘‘ஈதல் இசைபட வாழ்தல்’’ என்ற வள்ளுவர் வாக்குக்கேற்ப ஏழை மக்களின் மனம் மகிழ பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார்கள். குறிப்பாகக் கல்வித்துறையில் வரும் புதிய திட்டங்கள் தமிழகக் கல்வி

வரலாற்றில் ஒரு புதிய பாதையை வகுத்துப் பயணம் செய்ய வழிகாட்டியுள்ளது.

தமிழக மாணவர்களை அறிவாளிகளாகவும், திறமைசாலிகளாகவும் மாற்ற வேண்டும்; குறிப்பாக நகரங்கள் மற்றும் கிராமங்களில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் உலகத்தரம் வாய்ந்த கல்வியைக் கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் அவர்களுக்கு மடிக்கணினி (லேப்டாப்) வழங்கும் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான **15.9.2011** அன்று திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைத்து, மாணவ சமுதாயத்தின் ஒட்டுமொத்தப் பாராட்டினையும் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கும் மடிக்கணினி, மாணவ சமுதாயத்தின் திறமையை மேலும் வளர்ப்பதுடன் அவர்களது புத்தகச் சுமையைக் குறைத்து நகரங்களிலுள்ள மாணவர்களுக்கு இணையாகக் கிராமப்புற மாணவர்களும் தங்களின் தொழில்நுட்ப அறிவினை விரிவு செய்து கொள்ள உதவிடும் அற்புதக் கருவியாகத் திகழ்கிறது. உலகளாவிய முறையில் அறிவுசார்ந்தவர் களுடன் தங்களை இணைத்துக்கொள்ள மாணவர்களுக்கு இத்திட்டம் பெரிதும் பயன்படுகிறது.

இதனடிப்படையில் அறிவுசார்ந்த மனிதவளத்தினை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக நமது அன்றாட வாழ்வில் நீக்கமற நிறைந்துவிட்ட கணினி அறிவை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் திட்டம் இந்திய திருநாட்டிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முதல்முறையாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.




மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் 15.9.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த தலையாய பெருந்திட்டத்தின் கீழ் 14.05.2012 வரை 2.31 இலட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு 1.91 இலட்சம் மடிக்கணினிகள் தகுதியுடைய தொழில் நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் கலை/அறிவியல் கல்லூரிகளில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். தற்போது 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மடிக்கணினிகள் பராமரிக்கத் தேவையான சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் நலன் பெறும் நலத்திட்ட உதவிகள் நாள்தோறும் வழங்கப்படுகின்றன.

## மாவட்டங்களில் விலையில்லா மடிக்கணினி பெற்றுக் கொண்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் மகிழ்ச்சிப் பொங்க தெரிவித்ததாவது

**கரூர் மாவட்டம், வாங்கல் அரசு மேல்நிலைப்பள்ளி, 12–ஆம் வகுப்பு மாணவன் இரா. மணிகண்டன்**


இரா. மணிகண்டன்

விலையில்லா மடிக்கணினி வழங்கிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. இது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. நான் கணினி அறிவியல் பிரிவு படிப்பதால் எனக்கு மிக மிகப் பயனுள்ளதாய் உள்ளது. மாணவர்களின் அறிவுத்திறனை வளர்க்கிறது. எங்கள் மேற்படிப்பிற்கு மடிக்கணினி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கிராமப்புற மாணவர்கள் கனவில் மட்டுமே நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த மடிக்கணினியை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**12– ஆம் வகுப்பு மாணவி க. ஸம்ரா ஹசீனா**




மடிக்கணினி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முதலில் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மடிக் கணினியைக் கிராமப்புற மாணவர்கள் வாங்குவது கனவாகத்தான் இருந்தது. தமிழக முதல்வர் அம்மா அவர்கள் எங்கள் கனவை நனவாக்கி யுள்ளார். இந்த மடிக்கணினி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அதனால் நாங்கள் பாடப்புத்தகம் கொண்டு செல்லும் சுமையும் வெகுவாகக் குறைகிறது.

**கரூர் மாவட்டம், வாங்கல், அரசு மேல்நிலைப்பள்ளி**
**12– ஆம் வகுப்பில் பயின்று வரும் மாணவி ந. கோகிலா**
**மற்றும் மாணவி சா. ரிஸ்வானா பர்வீன் கூறியதாவது**

விலையில்லா மடிக்கணினி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாணவ மாணவியர் அனைவரின் சார்பாக எங்கள் மனமார்ந்த நன்றி. எங்களுக்கு இந்த மடிக்கணினி மிகவும் பயனுடையதாய் உள்ளது.நாங்கள்



ந. கோகிலா



சா. ரிஸ்வானா பர்வின்

பனிரெண்டாம் வகுப்பு படிப்பதால் செய்முறைத் தேர்வு செய்யவும் பயன்படுகிறது. எங்களைப் போன்ற ஏழை வீட்டுப்பிள்ளைகளுக்கு மடிக்கணினி வாங்குவது அவ்வளவு எளிதல்ல. எங்களுக்கு அரசு இந்த மடிக்கணினி வழங்கியதால் எங்களது பிற்கால வாழ்விற்கும் பயன்படும். உலகில் நடைபெறும் செய்திகளை இணைய தளம் மூலம் தெரிந்து கொள்கிறோம். நாங்களும் சொந்தமாக மடிக்கணினி வைத்திருக்கிறோம் என்று நினைத்துப்பார்த்து மகிழ்கின்ற வகையில் எங்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கிய முதல்வர் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என் சார்பாகவும் என்னுடன் பயிலும் மாணவர், மாணவிகள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விழுப்புரம் மாவட்டம், கண்டமானடி வட்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவி ஜெ. லீனா**



ஜெ. லீனா

"மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அளித்துள்ள மடிக்கணினி இப்பொழுது என் கையில் உள்ளது. மடிக்கணினி வாங்குவது குறித்து நான் என் குடும்பச் சூழ்நிலையில் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது. என் பெற்றோர்களுக்கு அது என்னவென்றே தெரியாது. அதனை விலைகொடுத்து வாங்குவது என்பது எங்களுக்குக் கானல் நீரைப் போன்றது. இந்த நிலையில் முதல்வர் அம்மா அவர்கள் மடிக்கணினியை இலவசமாக வழங்கியது மட்டில்லா மகிழ்ச்சியை அளிக்கிறது. சொல்வதற்கு வார்த்தைகள் வரவில்லை. மடிக்கணினி அறிவியலில் நன்றாகப் பயின்று சாதனைபுரிய வேண்டுமென்று தோன்றுகிறது. அந்த எண்ணத்திற்கு முதல்வர் அம்மா அவர்கள் வித்திட்டுள்ளார்கள். இதை என் வாழ்நாளில் எப்பொழுதும் மறக்க மாட்டேன். முதல்வர் அம்மா நீடூழி வாழ ஆண்டவனை வேண்டுகிறேன்".

**விழுப்புரம் மாவட்டம், கண்டமானடி வட்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவச் செல்வங்கள் கே. சிவராமன் இ. வெண்ணிலா ஆகியோர் கூறியதாவது**







"எங்களுக்கு மடிக்கணினி கிடைத்துள்ளதை எண்ணும்போது நாங்கள் காண்பது கனவா அல்லது நனவா என்றே தெரியவில்லை. இந்த மடிக்கணினியின் விலை என்ன என்று கூட எங்களுக்குத் தெரியாது. ஆனால், இது எங்களைப் போன்ற கிராமப்புற மாணவர்களால் வாங்க இயலாது என்பது மட்டும் தெரியும். அந்த அளவிற்கு விலைமதிப்புள்ள ஒரு பொக்கிஷத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் இலவசமாக வழங்கியுள்ளார்கள். உலகமே என் கையில் வந்துவிட்டதைப் போல உணருகிறேன். இதை வைத்து கல்வியில் முன்னேறி சாதனை புரிவேன். அம்மா அவர்களுக்கு மனதார நன்றியினைக் கூறிக் கொள்கிறோம்".

**சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் கட்டிக்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவன் வா. மகேந்திரன் தெரிவித்ததாவது**




“எனது ஊர் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை. எனது அம்மா கூலி வேலை செய்கின்றார். நான் அரசு மாணவர் விடுதியில் தங்கி படித்து வருகிறேன். எனக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்ட விலையில்லா மடிக்கணினி மிகவும் பயனுள்ளதாக உள்ளது. நான் பன்னிரெண்டாம் வகுப்பில் கணிப்பொறி பாடப் பிரிவில் படித்து வருகிறேன். ஆதலால், எனக்கு இந்த மடிக்கணினி மிகவும் பயனுள்ளதாக உள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் செயல்பாடுகளை ஏட்டளவில் தெரிந்துகொள்வது மட்டுமின்றி இதனை செய்முறையாகவும் (Practicals) வீட்டில் இருந்தபடியே தெரிந்துகொள்ளவும் முடிகிறது. இந்த மடிக்கணினி ஒரு மாணவனின் கல்வியை மேம்படுத்துவது மட்டுமின்றி பலரிடையேயும் இதனைப் பற்றிய விழிப்புணர்வு வரத் தூண்டுதலாகவும், கருவியாகவும் செயல்படுகின்றது என்பது உண்மை. இம்மடிக்கணினி பயன்பாட்டினால் நான், தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெறுவது மட்டுமின்றி வேலை வாய்ப்புகளையும் பெற ஓர் ஊன்றுகோலாய் அமைகின்றது. இந்த விலையில்லா மடிக்கணினித் திட்டம்

எங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்த மடிக்கணினியை விலையில்லாமல் வழங்கியதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் கட்டிக்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவி பா. ரேவதி தெரிவித்ததாவது**




நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். விலையில்லா மடிக்கணினி வழங்கியது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் கணிப்பொறி அறிவியல் பாடப்பகுதியை எடுத்து படிக்கிறேன். எனக்கு இம்மடிக்கணினி உற்ற தோழியாக உள்ளது. இம்மடிக்கணினியை உபயோகிப்பதனால் மாணவ–மாணவியரிடையே எந்தச் செயலைச் செய்வதிலும் சுறுசுறுப்பும், உற்சாகமும் உடனிருந்து அவர்களுக்குள் ஓர் உத்வேகத்தை உண்டாக்குகிறது. உதாரணமாக ஒரு கேள்விக்கான பதிலைத் தெரிந்துகொள்வதிலும் அதனைத் தேடுவதிலும் ஏற்படும் ஆர்வம் பிற்காலத்தில் அவர்களுக்கான வேலைவாய்ப்புகளைப் பெறுவதிலும்,

செய்யும் வேலைகளை உடனடியாக முடிப்பதிலும் உறுதுணையாக இருக்கும் என்பது புலப்படுகிறது. நாங்கள் வீட்டில் இருக்கும் பொழுது ஏற்படும் சந்தேகங்களை உடனடியாக மடிக்கணினி மூலமாக ஆசிரியரிடம் அணுகி சங்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள முடிகிறது. மேலும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரஸ்பர முறையில் கலந்துரையாட ஓர் நல்ல சூழ்நிலையை இம்மடிக்கணினி உண்டாக்கித் தருகிறது. மடிக்கணினியின் மூலம் பாடங்களைக் கற்றுக்கொள்வதனால், மாணவ–மாணவியர்கள் கற்றல், கேட்டல், கலந்துரையாடல், பதில் அளித்தல் என்ற நிலையோடு மட்டும் நின்றுவிடாமல் “பகுப்பாய்வு” செய்தல் என்ற அடுத்த நிலைக்கும் மாணவர்களை அழைத்துச்செல்லும் ஓர் தூண்டுகோலாக உள்ளது. கிராமப் பகுதியில் பார்ப்பதற்கே மிக அரிதானதான இம்மடிக்கணினியை எனக்கு இலவசமாக வழங்கிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எம் மாணவ–மாணவியர் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சித்தோடு, அரசுமேல்நிலைப்பள்ளியில் 12–ஆம் வகுப்புப் படித்து வரும் திருமதி சுப்புலட்சுமியின் மகள்களான ஜி.நந்தினி மற்றும் ஜி.பிரியா ஆகியோர் தெரிவித்ததாவது**

எங்கள் குடும்பம் ஏழ்மையும் வறுமையும் நிறைந்தது. எனது தந்தைக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படுவதால் அவரால் எந்தவிதக் கூலி வேலைக்கும் செல்ல முடியாது. தாயார் ஊறுகாய் வியாபாரம் செய்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்து எங்கள் இருவரையும் படிக்க வைத்து வருகின்றார். நாங்கள் இருவரும் நன்கு படிப்போம். அறிவியலைப் பற்றி ஏராளமாகத் தெரிந்து கொள்ள எங்களுக்குக் கணினி ஒன்று இருந்தால் வசதியாக



இருக்கும் என நினைத்தோம். அம்மாவிடம் கேட்டபோது அவர் எங்களின் குடும்பச் சூழ்நிலையை விளக்கிக் கூறி வாங்கித்தர இயலாது எனக் கூறிவிட்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களைப் போன்ற ஏழை எளிய மாணவர்களுக்கு மட்டுமல்ல, 12–ஆம் வகுப்புப் பயிலும் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் இலவசமாக மடிக்கணினிகளை வழங்கியுள்ளார். இதனால் பாடங்களை எளிதில் படிக்க முடிகிறது. புத்தகங்களை வைத்து படிக்கும்பொழுது ஏராளமான சிரமங்கள் இருக்கும். ஆனால், அதையே மடிக்கணினியில் படிக்கும்போது மிகுந்த ஆர்வமாக இருக்கும். எளிதில் மனதில் பதியும். அத்தோடு பொது அறிவையும் நன்கு வளர்த்துக் கொள்ள முடியும். கணினியைக் காணமுடியாத எங்களுக்கு மடிக் கணினிகளை இலவசமாக வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்,” என்றனர்.

**ஈரோடு, சித்தோடு சமத்துவபுரம் எல்.ஐ.சி.நகரைச் சேர்ந்த எம்.ராஜா என்பவரின் மகன் ஆர்.ரமேஷ் (வயது 19) தெரிவித்ததாவது**



ஆர்.ரமேஷ்

"எனது தந்தை ராஜா என் தாயை விட்டுப் பிரிந்து சென்று வேறு திருமணம் செய்து கொண்டார். எனக்கு ஆர்.பிரசாத் என்ற அண்ணனும் ஆர்.தவமணி என்ற தம்பியும் உள்ளனர். எனது தாயார் கூலித் தொழில் செய்து வருகின்றார். எனது அண்ணன் பிரசாந்த் வாகனம் ஓட்டும் வேலை செய்து வருகின்றார். எனது தம்பி 11–ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கின்றார். எனது தந்தை எங்களை விட்டுச் சென்றபின்னர் எனது தாய் எல்லாச் சுமைகளையும் சுமந்து கொண்டு கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து குடும்பச் செலவு, படிப்புச் செலவு, வீட்டு வாடகை, மருத்துவச் செலவு என அனைத்தையும் செய்து குடும்பத்தையும், எங்களையும் காத்து வருகின்றார். எனது வயதான பாட்டியும் அவரது அரவணைப்பிலேயே வாழ்ந்து வருகின்றார்.

நான் சித்தோடு அரசு மேல்நிலைப்பள்ளியில் 12–ஆம் வகுப்புக் கணினி அறிவியல் பாடப்பிரிவில் பயின்று வருகின்றேன். வசதி படைத்த மாணவர்கள் வீட்டில் கணினி வாங்கி வைத்து அன்றாடம் புதுப்புது விவரங்களைச் சேகரித்து பள்ளிக்குக் கொண்டு வருவார்கள். ஆசிரியர்களும் அவர்களைப் பாராட்டி, அவர்களைப் போல் நீங்களும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்குவார்கள். நானும் ஏக்கத்தோடு கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பேன்.

எனது ஏக்கத்தைப் போக்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இலவசமாக மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிவித்து 12–ஆம் வகுப்புப் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இலவசமாக மடிக்கணினிகளை வழங்கிட ஆணையிட்டதை அறிந்து நானும் மிகுந்த சந்தோஷப்பட்டேன். அதேபோல எனக்கு மடிக்கணினியும் இலவசமாகக் கிடைத்துள்ளது. இதைப் பயன்படுத்தி கணினியில் சிறந்து விளங்கி எல்லாவற்றிலும் முதன்மையாகத் திகழ்வேன்.

நான் மேன்மேலும் கல்வியறிவு பெற்று வகுப்பில் நடத்தப்படும் பாடங்களையும், செய்முறைத் தேர்வுகளையும் ஏராளமாக அறிந்து கொள்ள எனக்குப் பேருதவியாக இம்மடிக்கணினி உள்ளது. எனக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றார்.

* * *

# மடிக்கணினி பெற்று மனம் மகிழும்
# மாணவச் செல்வங்கள் சிலர்



கி. திவ்யா



ஆர். ராஜ்குமார்



இ. கலைச்செல்வன்

# முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

## உயர் சிகிச்சைக்கு வழி வகுத்து மக்கள் நலன் பேணும் மகத்தான அரசு



“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது பழமொழி. உயர் வகுப்பினரும், செல்வந்தர்களும் பெற்று வந்த உயர்தர சிகிச்சையினை ஏழை எளிய மக்களும் பெறவேண்டும் என்ற நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் "முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, தமிழகத்தில் உள்ள மக்கள்

உடல்நலத்திற்கு உத்தரவாதம் அளித்துள்ளார்கள். முந்தைய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு நான்கு ஆண்டுகளுக்கு அதிகபட்ச மருத்துவச் செலவு ஒரு இலட்சம் மட்டுமே ஏற்கப்படும். இந்தப் புதிய திட்டத்தின் கீழ் ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயும் மற்றும் குறிப்பிட்ட சில நோய்களுக்கு 1.50 இலட்சம் ரூபாய் வரையிலும் அனுமதிக்கப்பட்டு நான்கு வருடங்களில் ஒரு குடும்பம் அதிகபட்சமாக 4 இலட்சம் ரூபாய்க்கான மருத்துவச் செலவினைப் பெற இயலும்.

முந்தைய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப் பட்டிருந்த 642 வகையான சிகிச்சை முறைகள் மாற்றி அமைக்கப்பட்டு, தற்போது மருத்துவ மேலாண்மை மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கான சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 1016 சிகிச்சை முறைகளும், 113 தொடர் சிகிச்சை வழிமுறைகளும், 23 அறிதல் கண்டுபிடிப்பு முறைகளும் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து வயதினரும் இத்திட்டத்தில் பயன்பெறலாம். இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இதய அறுவை சிகிச்சை, புற்றுநோய் மருத்துவம், சிறுநீரக நோய்கள், மூளை மற்றும் நரம்பு மண்டலம், கண் நோய் சிகிச்சை, இரைப்பை மற்றும் குடல் நோய்கள், ஒட்டுறுப்பு (பிளாஸ்டிக்) அறுவை சிகிச்சை , காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்கள், கருப்பை நோய்கள் மற்றும் இரத்த நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், நோயாளிகள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதற்கு முதல்நாள் மற்றும் சிகிச்சை முடிந்து வீட்டிற்குத் திரும்பிய நாளிலிருந்து ஐந்து நாட்களுக்கு செய்யப்படும் பரிசோதனைக்கான கட்டணமும், இதர

செலவினங்களுக்கான தொகையும் இத்திட்டத்தில் வழங்கப்படும். தமிழகத்தில் உள்ள ஒரு கோடியே 34 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 11.01.2012 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார்கள்.

## மாவட்டங்களில் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் கூறியதாவது

**சேலம் மாவட்டம், எடப்பாடி வல்லாண்டிவலசு கிராமத்தைச் சேர்ந்த செயற்கை இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட திரு. மணி கூறியதாவது**



மணி

"நான் எனது கிராமத்தில் தையல் வேலை செய்து வருகிறேன். கடந்த 6 மாத காலமாகக் கடுமையான இடுப்பு வலியினால் அவதிப்பட்டு, திரும்பிப் படுக்கக்கூட இயலாத நிலையில் நரகவேதனையை அனுபவித்து வந்தேன். என்னால் தனியார் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவ சிகிச்சைபெற வசதி இல்லை. என்னுடைய உழைப்பை

நம்பியே எனது குடும்பம் உள்ளது. எவ்வாறு நான் பிழைப்பேன் எனது குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுவேன் என்ற நம்பிக்கையை நான் இழந்திருந்த சமயத்தில் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பைக் கேள்விப்பட்டேன். எனக்கு இதுபோன்ற உயர்தர சிகிச்சை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாமல் இருந்தேன். தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றால் குறைந்தபட்சம் ரூ.2 இலட்சம் தேவைப்படும் என தெரிவித்தார்கள். நம்பிக்கை இழந்து நிர்க்கதியாய் நின்ற எனக்கு அம்மா அவர்களின் அறிவிப்பு பெரும் நிம்மதியைக் கொடுத்தது.

உடனடியாக, அரசு மருத்துவ அலுவலர்களை அணுகி விசாரித்து முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெறுவதற்காக பரிந்துரைக்கப்பட்டு, சேலம் குறிஞ்சி மருத்துவமனையில் சேர்ந்து கொண்டேன். மருத்துவமனையில் என்னிடம் யாரும் ஒரு பைசா கூட வாங்கவில்லை. உணவு மற்றும் போக்குவரத்துவரை அனைத்து செலவுகளையும் இத்திட்டத்திலேயே மேற்கொள்வோம் என டாக்டர்களும், அதிகாரிகளும் தெரிவித்தபோது இது கனவா அல்லது நனவா என எண்ணினேன். மருத்துவமனையில் சேர்ந்த 3ஆம் நாள் அறுவை சிகிச்சை நடந்து முடிந்தது. அன்று மருத்துவர்கள் என்னை எழுந்து நின்று நடைபயிற்சி செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்கள். அந்தசமயத்தில் நான் எதிர்பார்க்காத வகையில் மாவட்ட கலெக்டர், எம்.பி., எம்.எல்.ஏ., உட்பட அனைவரும் என்னை நேரில் பார்க்க வருகை தந்து என்னிடம் நலம் விசாரித்த போது என்னையே என்னால் நம்ப முடியவில்லை. உண்மையிலேயே நடப்பதற்கு

பயந்துகொண்டிருந்த நான், இவர்கள் அனைவரும் அளித்த ஆறுதல் மற்றும் அரவணைப்பின் பேரில் மிகுந்த மகிழ்ச்சியுற்று, தைரியமாக எனது நடைபயிற்சியினை மேற்கொண்டேன். இத்திட்டத்தின் வாயிலாக இந்த அறுவை சிகிச்சைக்கு ரூ.64 ஆயிரத்தை முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒதுக்கியதோடு, ஒரு பைசா செலவின்றி நான் இன்னும் ஓரிரு தினங்களில் வீடு திரும்ப உள்ளேன் என்பதை எண்ணும்போது நான் மிகுந்த சந்தோஷம் அடைகிறேன்.

நான் நல்லபடியாக நடப்பேனா ? என் குடும்பத்தை நான் உழைத்துக் காப்பாற்ற முடியுமா ? என நினைத்த காலம் மாறி இன்று நலமாக வீடு திரும்ப உள்ளேன். எனக்கு வாழ்வளித்த தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களை நானும், எனது குடும்பமும் காலம் உள்ளவரை மறக்கமாட்டோம்" எனக் கண்ணீர்மல்கத் தெரிவித்தார்.

**சேலம் மாவட்டம் ஆணையம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்ட ரங்கசாமி கூறியதாவது**

"நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 20 ஆடுகள் உள்ளன. மாடுகளும் உள்ளன. அவைகளை மேய்ப்பதே என் வேலையாகும். கடந்த சில மாதங்களாக என்னால் அறவே நடக்க முடியவில்லை. கால் வில்போல் வளைந்துவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். பின்னர் எங்கள் ஊரைச் சார்ந்த பலர் முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தில் இலவசமாக சிகிச்சை பெறலாம் என்று தெரிவித்தார்கள். இலவசமாகவே அறுவைச் சிகிச்சை செஞ்சிட்டாங்க. சாப்பாடும் அவங்களே கொடுத்துட்டாங்க. போகும்போது போக்குவரத்துச் செலவும்



ரங்கசாமி

கொடுத்திடுவோமுனு சொல்லிட்டாங்க. அதுமட்டுமல்லாம 5 நாளைக்கு மருந்து மாத்திரையும் இலவசமாக கொடுக்குறாங்க. எனது அறுவை சிகிச்சைக்காக ரூ.64,000/– அம்மா அவர்கள் வழங்கியுள்ளதை எண்ணும் போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்னையிலிருந்து நான் நடக்க ஆரம்பிச்சுட்டேன். எனக்கு 70 வயசுக்கு மேலே ஆனாலும் உழைச்சு சாப்பிடனுங்கற ஆசை உண்டு. அந்த ஆசையை நிறைவேத்திட்ட தமிழக முதலமைச்சர் அம்மா ஜெயலலிதா அவர்களுக்கு நான் நன்றி தெரிவிப்பதோடு, எங்களை போன்ற ஏழைகளை வாழவைக்க, அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென உங்ககிட்ட தெரிவிச்சிக்கிறேன்'' என்று தெரிவித்தார்.

**தர்மபுரி மாவட்டம், பொம்முடி பி.மல்லாபுரம் கிராமத்தைச் சேர்ந்த இருதய அறுவை செய்து கொண்ட ஆறுமுகம் என்பவர் கூறியதாவது**



ஆறுமுகம்

‘‘எனக்கு 60 வயதாகிறது. தருமபுரி மாவட்டம் பொம்மிடி அருகே உள்ள பி.மல்லாபுரம் கிராமம் எனது ஊராகும். 9.02.2012 அன்று நெஞ்சுவலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். எனக்கு 11.02.2012 அன்று ஆஞ்சியோ பிளாஸ்டிக் எனும் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக ரூ.48,000/– அரசால் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளதாக டாக்டர் தெரிவித்தார். நான் இதற்காக எவ்விதச் செலவும் செய்யவில்லை. நான் திருக்கோயிலில் பூஜை செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறேன். இதுபோன்ற மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு எனக்கு வசதி இல்லை. பூஜை செய்வதால் கிடைக்கும் சிறு வருமானத்தை வைத்தே எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன். நான் இவ்வளவு காலமாகப் பூஜை செய்த கடவுள், தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை அனுப்பி

எனக்கு வாழ்வளித்து என் உயிரைக் காப்பாற்றி உள்ளார். சில நாட்களில் சிகிச்சை முடிந்து நான் வீடு திரும்பி விடுவேன். முதலமைச்சர் அம்மா அவர்களை கடவுளாக நினைத்து வணங்கி நன்றி பாராட்டுகிறேன்" என்று அவர் கூறினார்.

**மதுரை மாவட்டம் திருமங்கலம் தெற்குத் தெருவைச் சேர்ந்த திரு ராஜா என்பவர் தெரிவித்ததாவது**



ராஜா

"நான் தனியார் பேருந்தில் நடத்துனராக வேலை பார்த்து வருகிறேன். எனது மனைவியின் பெயர் சண்முகவள்ளி. எனக்கு காயத்ரி என்ற 7 வயது மகள் உள்ளார். நான் அன்றாடம் பேருந்தில் பயணம் செய்து வரும்பொழுது நிறைய விபத்துகளைப் பார்க்க நேரிடும். பல நேரங்களில் இது போன்ற நிகழ்வு நமக்கும் நேர்ந்தால் நமது குடும்பத்தின் நிலை என்னவாகும் என நினைத்துக் கலங்கியதுண்டு. மேலும், எனது குடும்ப உறுப்பினர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போகும் பட்சத்தில் எனக்கு வரும் வருமானத்தைக் கொண்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வழியில்லாத நிலை உள்ளது. ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்தக் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் என்னைப் போன்ற பலரது வாழ்க்கை பயனுள்ளதாக

மாறியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்," என்றார்.

**மதுரை மாவட்டம், திருமங்கலத்தை சேர்ந்த திருமதி.சங்கரி என்பவர் தெரிவித்ததாவது**



சங்கரி

"நான் திருமங்கலம் முத்தாலம்மன் கோயில் தெருவில் வசித்து வருகிறேன். எனது கணவர் இறந்து விட்டார். எனக்குப் பத்து வயது மகன் உள்ளார். கணவனை இழந்து அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் சிரமப்படும் நிலையில் உள்ளேன். கூலித்தொழில் செய்து நானும் என் மகனும் வாழ்க்கை நடத்தி வருகிறோம். இந்த நிலையில் மருத்துவச் செலவுக்கென்று எங்களால் பணம் ஒதுக்குவது என்பது இயலாத காரியம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் இந்த காப்பீட்டுத்திட்டத்தைக் குறித்து அறிந்தபொழுது மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். என்னைப் போன்று வாழ்க்கையில் மிகவும் வறுமைக்கு உள்ளாகும் பெண்களுக்கு இந்தத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக

இருக்கும். ஏழை எளிய மக்களின் வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு நல்ல பல திட்டங்களை வகுக்கும் அம்மா அவர்கள் நூறாண்டு காலம் நல்லாயிருக்கணும்,'' என்றார்.

**மதுரை மாவட்டம் திருமங்கலத்தை சேர்ந்த திரு பாபுசாமி என்பவர் தெரிவித்ததாவது**


பாபுசாமி

"எனக்கு 47 வயதாகிறது. திருமங்கலத்தில் டீக் கடை வைத்து பிழைப்பு நடத்தி வருகிறேன். அன்றாட வருமானத்தின் மூலம் எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன். என்னைப் போன்றவர்களுக்கு உயர் சிகிச்சை என்பது எட்டாக்கனியாகத்தான் இருந்து வருகிறது. ஆனால், தற்பொழுது நமது தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்துள்ள காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் என்னைப்போன்ற ஏழை, எளிய மக்களும் பயன்பெற முடியும் என்றும், எளிதில் உயர் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வந்துள்ளது. முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவிக்கின்ற ஒவ்வொரு திட்டங்களுமே அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. என்னுடைய சார்பிலும் எனது குடும்பத்திலும் சார்பிலும் வாழ்நாள் முழுவதும் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்".

**திருமங்கலத்தைச் சேர்ந்த திரு ஆழ்வார் அவர்கள் தெரிவித்ததாவது**




"நான் திருமங்கலம் ஆனந்தன் தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு வயது 64 சலவைத்தொழில் செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன். துணிகளிலுள்ள அழுக்குகளை நாங்கள் நீக்குவது போல எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையிலுள்ள துயரங்களை நீக்குகின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதில் இந்த காப்பீட்டுத் திட்டம் எங்களுக்குக் கிடைத்த வரமாகும். ஒவ்வொரு குடும்பத்திலும் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள அனைவரும் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. இதுபோன்ற திட்டங்களை எங்களுக்கு வழங்குகின்ற அம்மா அவர்களுக்குக் கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்'' என்றார்.

**நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை சுண்டக்காடு பகுதியில் வசித்து வரும் மலைவாழ் இனத்தைச் சார்ந்த திருமதி சவுந்தரம் மகிழ்ச்சி பொங்கக் கூறியதாவது**



சவுந்தரம்

"நான் கொல்லிமலை பகுதியில் உள்ள சுண்டக்காடு பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு வயது 45. நான் விவசாயக் கூலிவேலை செய்து வாழ்க்கை நடத்தி வருகிறேன். எனக்கு ஒரு மகளும், 2 மகன்களும் உள்ளார்கள். அவர்களுக்குத் திருமணம் முடித்துவிட்டேன். கடந்த 3 வருடமாக எனக்குத் தீராத வயிற்று வலி ஏற்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளானேன். அப்போது தனியார் மருத்துவமனை மருத்துவரிடம் சென்றபோது எனக்குக் கர்ப்பப்பை சம்பந்தமான நோய் இருப்பதால் அறுவை சிகிச்சை செய்திடவேண்டும். அதற்கு ரூ.35,000 செலவாகும் எனத் தெரிவித்தார்கள். ரூ.35,000 செலவு செய்து அறுவை சிகிச்சை செய்ய என் குடும்பச் சூழ்நிலை இடந்தருமா?

இருப்பினும் தீராத வயிற்றுவலியைப் போக்குவதற்காக அவ்வப்பொழுது அரசு மருத்துவமனைக்குச் சென்று மருந்து மாத்திரைகளை வாங்கிச் சாப்பிட்டு வந்தேன். ஆனாலும் எனக்குத் தொடர்ந்து வயிற்றுவலி இருந்து வந்தது.

இந்த நிலையில், கடந்த வாரம் (10.2.2012) கொல்லிமலையில் அரசின் சார்பில் சிறப்பு மருத்துவமுகாம் நடைபெற்றது.

இந்த முகாமிற்குச் சென்று டாக்டரிடம் என்னுடைய உடல்நிலை குறித்துக் கூறினேன். அவரும் என்னைப் பரிசோதித்து நிரந்தரமாக இது குணமடைய வேண்டும் என்றால் அறுவைச் சிகிச்சை செய்து கர்ப்பப்பையை எடுத்திடவேண்டும் எனத் தெரிவித்தார்கள். அதற்கான பண வசதி என்னிடம் இல்லை எனத் தெரிவித்தேன். அதற்கு மருத்துவர்கள் நீங்கள் எந்தச் செலவும் செய்யதேவையில்லை. இதற்குத் தமிழக முதலமைச்சர் அவர்கள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள்.

அந்தத் திட்டத்தில் சேர்ந்து சிகிச்சை செய்து கொள்ளலாம் என தெரிவித்தார்கள். உடனடியாக நாமக்கல்லில் உள்ள எம்.எம்.தனியார் மருத்துவமனைக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை செய்து பின்னர், அறுவை சிகிச்சை செய்து, எனது கர்ப்பப்பை அகற்றப்பட்டது, நல்ல முறையில் குணமடைந்து வருகிறேன்.

அதிக அளவு மருத்துவ வசதி கிடைக்காத மலைப் பகுதியில் வாழ்கின்ற எங்களைப்போன்ற மக்களுக்காக இலவசமாக ரூ.35,000 செலவு செய்து மருத்துவ வசதி கிடைக்கச் செய்த தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கொல்லிமலை சுண்டக்காடு பகுதியைச் சேர்ந்த திருமதி சரசு (வயது 43) அவர்கள் கூறியதாவது**




"நான் சுண்டக்காடு பகுதியில் விவசாய கூலிவேலை செய்து வாழ்ந்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள், 2 மகள்கள் உள்ளார். வயற்றில் புண் காரணமாக எனக்கு அடிக்கடி வலி ஏற்பட்டு மிகுந்த சிரமத்திற்குள்ளானேன். கடந்த 2 வருடங்களாகவே இந்த வயிற்று வலி இருந்து வந்தது. கடந்த வாரம் கொல்லிமலை பகுதியில் மருத்துவமுகாம் நடத்தினார்கள். அந்த முகாமிற்குச் சென்றபோது மருத்துவ பரிசோதனை செய்த மருத்துவர்கள் எனது கர்ப்பப்பையை அகற்ற வேண்டும் எனக் கூறி நாமக்கல் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த மருத்துவமனையில் தமிழக முதலமைச்சர் அவர்களின் மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் எனக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்துள்ளார்கள். தற்போது நல்லமுறையில் குணமடைந்து வருகிறேன்.

எங்களைப் போன்ற ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவம் கிடைக்க வேண்டும் என்பதற்காக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி

வரும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் அவர்களுக்கு நாங்கள் நன்றிக் கடன்பட்டுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

**கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் கஞ்சப்பள்ளியைச் சேர்ந்த சுப்பிரமணியன் கூறியதாவது**

"எனது பெயர் சுப்ரமணியன், மனைவியின் பெயர் ராஜாமணி. எனக்கு கோமதி, ராணி என இருமகள்கள். இருவருக்கும் திருமணமாகிவிட்டது. கூலி வேலை செய்து வரும் எனக்கு இரண்டு கால்களிலும் இரத்தக்குழாய் வீக்கம் ஏற்பட்டு கால் நடக்கமுடியாமல் 7 ஆண்டுகளாகத் தவித்துவந்தேன். லட்சுமி மருத்துவ மனையினர் எங்கள் ஊரில் மருத்துவ முகாம் நடத்தினர். அப்போது எனது காலை பரிசோதித்து முதல்வர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பற்றியும், அதில் இலவசமாகக் காலுக்கு அறுவை சிகிச்சை செய்து இரத்தக்குழாய்களை சரி செய்து விடலாம் என்றும் கூறினார்கள். 13.2.12 அன்று நான் மருத்துவமனையில் சேர்ந்தேன். 17.2.12 அன்று எனக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. தெய்வமாக இருந்து தமிழக மக்களைக் காத்துவரும் தாய் அவர்கள் எனக்குப் புதுவாழ்வு அளித்துள்ளார்கள். அவர்களை எனது உயிர் உள்ளவரை மறக்கமாட்டேன்".


சுப்பிரமணியன்

**கோவை அன்னூரைச் சேர்ந்த திரு சின்னன் (வயது 80) கூறியதாவது**




"பனியன் தொழிற்சாலையில் தினக்கூலியாக வேலை செய்துவந்தேன். எனது மனைவியின் பெயர் ரெங்கம்மாள். எனது மகன் கோபால். மருமகள் பொன்னுமணி. எனக்குக் கடந்த 6 மாத காலமாக முதுகு தண்டுவடத்தில் கடுமையான வலி இருந்துவந்தது. எனது வலதுகாலும் இரத்த ஓட்டமின்றி மரத்துப்போய் நடந்து செல்ல முடியாமல் வேலைக்கும் போக முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போது அன்னூர் ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்குச் சென்று காண்பித்தேன். என்னை பரிசோதித்த டாக்டர்கள் எனக்கு முதுகு தண்டுவடத்தில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனவும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இலவசமாகவே அறுவை சிகிச்சை செய்யலாம் என விளக்கிக் கூறினார்கள். கோவை ஸ்ரீலட்சுமி மெடிக்கல் சென்டரில் 14..2.12 அன்று சேர்ந்த எனக்கு 17.2.12 அன்று அறுவை சிகிச்சை செய்யப் பட்டது. எனது கால் இப்போது மரத்துப்போன மாதிரி இல்லை. முதுகிலும் வலி இல்லை. எனது உயிரைக் காப்பாற்றிய இதயதெய்வம் அம்மா அவர்களை நன்றியுடன் வணங்குகிறேன்''.

**நீலகிரி – குன்னூரைச் சேர்ந்த பிரவீன் கூறியதாவது**


பிரவீன்

"கடந்த ஆறு மாதமாக சிறுநீரகக் கோளாறு காரணமாக அவதிப்பட்டு வந்தேன். மருத்துவ மனையில் பரிசோதித்த மருத்துவர்கள் எனக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினர். சிகிச்சை செய்ய போதிய வசதி என்னிடம் இல்லை. இப்படியே நான் இறந்து போய்விடுவேனோ எனக்கூட பயந்து கொண்டிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வந்ததை அறிந்த நான் இத்திட்டத்தின்கீழ் கோவை சுந்தராபுரம் ஸ்ரீஅபிராமி மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டேன்.

ஏழையான எனக்கு பணக்காரர்கள் மட்டுமே செய்துகொள்ளும் ஆப்ரேசன் இலவசமாக செய்யப் பட்டது. இதுபோன்ற பெரிய தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்றது கூட இல்லை. என்னைப் போன்ற ஏழை, எளிய மக்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் ஒரு தாய் தன் மக்களைக் காப்பதுபோல காத்துவரும் முதல்வர் அம்மா அவர்களை எனது உயிருள்ளவரை மறக்க மாட்டேன்".

**கோவை போத்தனூரைச் சேர்ந்த அறுவை சிகிச்சை செய்துகொண்டவிஜயகுமார் மனைவி சாந்தி கூறியதாவது**




"எனது பெயர் சாந்தி. வயது 43. எனது கணவர் பெயர் விஜயகுமார். வயது 63. எங்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. பெயர் ஹரிபிரியா. 5ஆம் வகுப்பு படித்து வருகிறாள். நாங்கள் கோவை போத்தனூரில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறோம். என் கணவர் கோவை தனியார் ஜவுளிக்கடையில் செக்கியூரிட்டியாக வேலை பார்த்து வந்தார்.

கடந்த நான்கு வருடங்களாகவே இடது கால் முட்டியில் கடுமையான வலியிருந்து வந்தது. நாங்கள் மருத்துவரிடம் காண்பித்தபோது முதலில் மருந்து மாத்திரையில் சரியாகிவிடும் என்று சொன்னார்கள். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு வலி மிகவும் அதிகமாகி வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே முடங்கிவிட்டார்.

தனியார் மருத்துவமனைக்குச் சென்று கேட்டபோது மூட்டு எலும்பு மிகவும் தேய்ந்து விட்டது. மூட்டு மாற்று ஆப்பரேசன் பண்ணனும். அதற்கு ரூபாய்

1 இலட்சத்திலிருந்து 1.50 இலட்சம் வரை செலவாகும் என்று சொன்னார்கள். ஏற்கனவே எனது வீட்டுக்காரர் வேலைக்கு போகாமல் வருமானம் இல்லாத நிலைமையில் இருக்கிறோம். இவ்வளவு ரூபாய் கொடுத்து ஆப்ரேசன் பண்ண எங்களால் முடியாமல் கஷ்டப்பட்டோம்.

அப்பதான் முதலமைச்சர் அம்மா அவுங்க விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தைத் தொடங்கி வைத்ததை பேப்பரில் பார்த்தோம். அதைப்பத்தி நாங்க விசாரிச்சப்ப மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சையை இத்திட்டத்தில் இலவசமாக பண்ணிக்கலாம்னு தெரிந்துகிட்டோம்.

எனது கணவரை துடியலூர் ஸ்ரீஇலட்சுமி மருத்துவ மனையில் 13.2.2012 அன்று ஆஸ்பத்திரியில் சேர்த்தாங்க. மறுநாளே அவருக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து, ஒருவாரத்தில் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அனுப்புனாங்க. 5 நாட்களுக்கு வேண்டிய மருந்து மாத்திரை கொடுத்தனுப்பினாங்க. இப்ப ஊன்றுகோலை பிடிச்சுக்கிட்டு மெள்ள நடக்கிறாறு. வலி ரொம்ப குறைந்துவிட்டதாகச் சொல்றாறு. முதல்ல பார்த்தா கால் ரொம்ப வளைந்திருக்கும். இப்ப கால் நல்லா நேராயிருக்கு.

எங்களைப்போன்ற ஏழைகளுக்கு இதுபோன்ற பெரிய ஆப்ரேசன் செய்றதுக்கு வாய்ப்பே இல்லை. இதனை இலவசமாகச் செய்து எங்கக் குடும்பத்தைக் காப்பாற்றிய முதல்வர் அம்மாதான் எங்களுக்குத் தெய்வம். எங்க குடும்பத்தோட அவுங்க கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கனும்னு ஆசையாயிருக்கு," என்று கூறினார்.

★ ★ ★

# நடமாடும் மருத்துவமனைத் திட்டம்

## மக்களைத் தேடிச் சென்று சிகிச்சை அளிக்கும் அரசின் அன்புமிகு திட்டம்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் கிராமப்புற மக்களின் உடல் நலத்தைக் காக்கவும், நோயின்றி அவர்கள் வாழ தொடர் மருத்துவப் பரிசோதனை இலவசமாகச் செய்திடவும், மருத்துவமனைகளுக்குக் கூட வந்து செல்லமுடியாத முதியவர்களுக்காகவும், மாற்றுத் திறனாளிகளுக்காகவும் கிராமத்தை நோக்கி

மருத்துவமனையே செல்லவேண்டும் என்ற சீரிய நோக்கத்தின் அடிப்படையில் நடமாடும் வாகன மருத்துவமனை என்ற திட்டத்தினை அறிவித்து 3.3.2012 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

நடமாடும் மருத்துவ வாகனத்தில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு ஆய்வகப் பரிசோதகர், ஒரு உதவியாளர், ஒரு வாகன ஓட்டுநர் என 5 பேர் அடங்கிய குழு பணியாற்றி வருகிறது. இவர்கள் ஒவ்வொரு ஊராட்சியிலும் தங்களது பயணத்தை மேற்கொண்டு அந்தந்தப் பகுதி மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் கிராம சுகாதார செவிலியர்கள், கிராம சுகாதார ஆய்வாளர் ஆகியோருடன் இணைந்து கிராமப்புற மக்களுக்கு மருத்துவச் சேவைகளை வழங்கி வருகின்றனர்.

இந்தச் சிறப்பான மருத்துவச் சேவைத் திட்டத்தின் மூலம் அனைத்து கிராமப்புறங்களிலும் முழுமையான மருத்துவச் சேவையினைக் கிராம மக்கள் எளிதில் பெற முடிகிறது. இத்திட்டம் கிராமப்புற மக்களிடம் மாபெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

**ஈரோடு, வெள்ளோடு, குமாரவலசு ஊராட்சி, தண்ணீர்பந்தல் பாளையத்தில் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தின் நடமாடும் மருத்துவ வாகனத்தின் மூலம் பயன்பெற்ற சாமியப்பன் (லேட்) அவர்களின் மனைவி திருமதி சிவகாமி (வயது 72) தெரிவித்ததாவது**

"நான் தண்ணீர் பந்தல் கிராமத்தில் வசித்து வர்ரேங்க. எனக்கு ஒரு பொண்ணு மட்டும் இருக்கிறாங்க. என் வீட்டுகாரரு செத்துட்டாருங்க. நான் கூலி வேலை செய்து குடும்பம் நடத்தி வர்றேங்க. எனக்கு கண் ஆப்பரேசன்




செஞ்சதால நான் கூலி வேலைக்குக் கூட போக முடியாம என் பொண்ணு கூட இருக்கிறேனுங்க. எனக்கு உடல்நிலை சரியில்லை ஏதேனும் காய்ச்சல், தலைவலி ஏற்பட்டால் நானாக பக்கத்தில இருக்க கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டரைப் பார்த்து மருந்து மாத்திரை வாங்கிட்டு வருவேனுங்க. இரண்டு நாள் உடம்புக்கு முடியாம ரொம்ப கஷ்டப்பட்டு வந்தேங்க. ஆஸ்பத்திரிக்கும் என்னால போக முடியலங்க.

அப்பத்தான் எங்க ஊரு நர்ஸ் அம்மா வந்து நடமாடும் மருத்துவமனை வாகனம் இந்தக் கிராமத்திற்கு வருவதாகவும், அதில் அனைத்துப் பரிசோதனைகள், மருந்து, மாத்திரைகள், டாக்டர்கள் என ஒரு ஆஸ்பத்திரியே இயங்குவதாகவும் தெரிவிச்சாங்க. அதைக் கேட்டு இங்கு வந்து நானும் டாக்டர் கிட்ட உடம்பைப் பாத்துக்குட்டேங்க. இங்கேயே எல்லா பரிசோதனைகளையும் செஞ்சு எனக்குத் தேவையான மருந்து, மாத்திரைகளைக் கொடுத்தாங்க. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த நடமாடும் மருத்துவமனை மருத்துவத் திட்டத்தின் மூலம் இப்போது சிகிச்சை பெற்று இலவச மருந்து, மாத்திரைகளை சாப்பிட்டதால் காய்ச்சல், தலைவலி எல்லாம் போயே போச்சுங்க.

எங்களை மாதிரி கிராமங்கள்ல வாழ்ந்து வர்ற ஏழைப்பட்ட வயசான பெரியவங்க, மாற்றுத்திறனாளிங்க, அப்புறம் இங்க இருக்கற எல்லாரும் பயன்பெறும் வகையில மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவங்க நடமாடும் மருத்துவமனையை எங்க கிராமத்துக்கே அனுப்பி வெச்சி, எங்களக் காப்பாத்துறாங்க. தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிச்சிக்கிறேங்க," என்றார்.

**ஈரோடு மாவட்டம் குமாரவலசு ஊராட்சி, தண்ணீர் பந்தல் பகுதியில் வசித்து வரும் முருகதாஸ் எனபவரின் மனைவி திருமதி புஷ்பராணி (வயது 22) தெரிவித்ததாவது**




"எனது கணவரின் வருமானம் போதிய அளவு இல்லாததால் மருத்துவமனைக்குச் சென்று வருவதற்கும், மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்கும் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் நடமாடும் மருத்துவமனை என்ற திட்டத்தை அறிவித்துள்ளதாகவும், இத்திட்டத்தின் மூலம் ஒரு முழு மருத்துவமனையே கிராமங்களுக்கு நேரடியாக வந்து மருத்துவ உதவிகள் செய்து வருவதாகவும், இதில்

அனைத்து மருத்துவப் பரிசோதனைகளும் செய்யப்படுவதாகவும், மக்கள் பலரும் பேசினர்.

இதனைக் கேட்ட நானும் இந்த மருத்துவமனை வாகனம் எப்பொழுது நமது கிராமத்திற்கு வரும் என்று கேட்டபோது திட்டமிட்டுள்ளபடி மாதத்தின் ஒரு நாளோ அல்லது இரு நாட்களோ கட்டாயம் கிராமங்களை நோக்கி வருகை தந்து நமக்கெல்லாம் இலவசமாக மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதாகவும் தெரிவித்தனர். அதன்படி இன்றையதினம் இப்பகுதிக்கு இந்நடமாடும் மருத்துவ வாகனம் வந்திருப்பதை அறிந்து நானும் இங்கு வந்தேன்.

மருத்துவர் எனது பெயரைப் பதிவு செய்து கொண்டு எனக்கு இங்கேயே பல்வேறு பரிசோதனைகளை மேற்கொண்டனர். மேலும் கர்ப்ப காலத்தில் சர்க்கரை நோய் உள்ளதா என்பதையும் பரிசோதித்துப் பார்த்தனர். அனைத்துப் பரிசோதனைகளையும் இலவசமாக செய்து எனது உடல்நிலையும், எனது குழந்தையின் வளர்ச்சியும் நன்றாக இருப்பதாக மருத்துவர்கள் கூறியது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது.

எனது தாய், தந்தையர் கூட என்னைக் கவனித்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் மருத்துவர்களே எங்கள் கிராமத்திற்கு நேரடியாக வருகை தந்து என்னை முழு பரிசோதனை செய்து எனக்குத் தேவையான மருந்து, மாத்திரைகளை வழங்கி என்னையும் என் குழந்தையையும் காத்து வருகின்றனர். இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அம்மா அவர்களுக்குக் கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.



**ஈரோடு, வெள்ளோடு குமாரவலசு ஊராட்சி தண்ணீர்பந்தல் பாளையத்தைச் சேர்ந்த கண்ணுச்சாமி என்பவரின் 9 வயது பெண் வினோதினி தெரிவித்ததாவது**

"எனது அப்பா அம்மா இருவரும் விவசாயக் கூலி வேலை செய்து வருகின்றார்கள். எனக்கு அடிக்கடி காய்ச்சல், சளி, இருமல், தலைவலி வந்துகிட்டே இருக்கும். எங்க அப்பா அம்மா கிட்ட எனக்கு ரொம்ப உடம்பு முடியல. ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போங்கன்னு சொல்லுவேன். அவங்க இது சாதாரண காய்ச்சல், தலைவலிதான் என்று கூறி கடையிலிருந்து ஒரு மாத்திரையை வாங்கிக் கொடுத்து தூங்குன்னு சொல்லுவாங்க. அப்போதைக்கு எனக்கு உடம்பு சரியாகிவிடும். பிறகு ரொம்ப கஷ்டப்படுவேன். எங்க ஊருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கிய நடமாடும் மருத்துவமனை வாகனம் வருவதாகச் சொன்னாங்க. நானும் உடனே இங்கு வந்தேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்கள போன்ற சின்ன குழந்தைகளுக்குக் கூட நேரில் வந்து இலவசமாக சிகிச்சை அளிக்க இப்படி ஒரு

சிறப்பான திட்டத்தை அறிவித்து எங்களைக் காப்பாத்தறாங்க. இப்படிப்பட்ட சிறப்பான திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்", என பிஞ்சுக் குழந்தை நெஞ்சார நன்றி தெரிவித்து எவரையும் நெகிழ வைக்கும்!

**மதுரை மாவட்டம், அழகர் கோயில் வள்ளாலப்பட்டியைச் சேர்ந்த 64 வயதுள்ள திருமதி மச்சதேவி கூறும் போது தெரிவித்ததாவது**


மச்சதேவி

எங்களைப் போன்ற ஏழை எளிய மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக ரொம்ப தூரம் போயி சிகிச்சை எடுக்க வேண்டியிருந்தது. ஆனா இப்ப எங்க கிராமத்துக்கே நடமாடும் வேனில் வந்து சிகிச்சை அளிக்கிறாங்க. இந்தத் திட்டத்தால என்னைப் போல பல பேருபயனடைஞ்சிருக்காங்க. இதுபோல நிறைய திட்டங்கள தந்துக்கிட்டு இருக்கிற நம்ம முதலமைச்சர் அம்மாவுக்கு நன்றியைத் தெரிவிச்சுக்கிறோம்".

**மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் தும்பைபட்டியை சேர்ந்த திருமதி வாசுகி (வயது 50) என்பவர் தெரிவித்ததாவது**


வாசுகி

என் கணவர் பெயர் சுரங்கமலை. விவசாயக் கூலி வேலை செய்து வருகிறார். சின்ன சிகிச்சைக்குக் கூட ஒரு நாள் கூலியை இழந்து வெகுதூரம் உள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை எடுத்துக்கிட்டு இருந்தோம். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த நடமாடும் மருத்துவமனைத் திட்டம் மூலம் எங்க ஊருக்கே வந்து முகாம் நடத்தி எங்களப் போலவுள்ள ஏழை மக்களுக்கு நோய் இருக்கா? இல்லையான்னு பரிசோதனை செஞ்சு சிகிச்சை அளிக்கிறாங்க. இந்தத் திட்டம் எங்களப் போல கிராமத்துல வாழுகிற மக்களுக்கு ஒரு வரம். இதற்காக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிச்சுக்கிறோம்".

**நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ரேகா (வயது 27) க/பெ. முருகேசன் அவர்கள் கூறியதாவது**

எங்களைப் போன்ற ஏழை எளிய மக்கள் அதிகம் வாழுகின்ற எங்கள் கிராமத்திற்கு மாதத்திற்கு இரண்டுமுறை நடமாடும் மருத்துவமனை வருகிறது. அவ்வாறு வருகின்றபொழுது பள்ளி செல்லும் எங்கள்




குழந்தைகளுக்குத் தேவைப்படும் உரிய மருத்துவ சிகிச்சை செய்வதற்கும், குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவதற்கும் பெரும் உதவியாக இருக்கிறது. எங்கள் கிராமம் அதிகப் பேருந்து வசதி இல்லாத கிராமமாக இருப்பதால் பள்ளிக்குச் செல்கின்ற குழந்தைகளை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் செல்வதில் பல்வேறு இடையூறுகள் உள்ளன.

இந்தத் துன்பங்கள் ஏதும் இல்லாத வகையில் நடமாடும் மருத்துவமனை எங்கள் கிராமத்திற்கே நேரடியாக வந்து பேருதவி செய்யுது. இந்தத் திட்டத்தின் மூலம் எங்களைப் போன்ற பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், வளர் இளம் பெண்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பயனடைகிறார்கள்.

இந்தக் கிராமத்திற்கு நடமாடும் மருத்துவமனையின் மூலம் ஒவ்வொரு முறையும் 100 முதல் 150 நபர்கள் வரை மருந்து, மாத்திரைகள் பெற்றுக் கொள்வதோடு மருத்துவப் பரிசோதனைகளும் செய்து கொள்கிறார்கள். தமிழக அரசு மூலம் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் திட்டம் கிராமப் பகுதி மக்களுக்கு பேருதவியாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




**நாமக்கல் மாவட்டம், தீர்த்தாம்பாளையத்தைச் சேர்ந்த திருமதி செல்வி (வயது 23) கூறியதாவது**

எனக்கு மனிஷா 2 ½ வயது, லோஷிகா 10 மாதம் என இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இந்த இருவருக்கும் அடிக்கடி சிறுசிறு உடல்நலக் குறைவு ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதுண்டு. ஆனால், இப்போது நான் எனது இரண்டு குழந்தைகளுக்கும் தொடர்ந்து நடமாடும் மருத்துவமனை மூலம் காலமுறைப்படி சிகிச்சையும், மருத்துவப் பரிசோதனைகளையும் செய்து கொள்கிறேன். இதனால் எனக்குச் செலவு குறைவதோடு உரிய மருத்துவ சிகிச்சை நாங்கள் வசிக்கும் கிராமத்தில் கிடைப்பது நன்மையாக உள்ளது. குழந்தைகளுக்குத் தடுப்பூசிகளும் போடப்படுவதால் எவ்வித சிரமமின்றி மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்கிறோம்.

**நாமக்கல் மாவட்டம், தீர்த்தாம்பாளையம் கிராமத்தைச் சார்ந்த திருமதி ரஞ்சிதா (வயது 30) க/பெ. அம்மாவாசை கூறியதாவது**

எனக்கு தரணிஸ் என்கிற 2 வயது ஆண்குழந்தை உள்ளது. இப்போது நடமாடும் மருத்துவமனை இந்தக்




ரஞ்சிதா

கிராமத்திற்கு வருகை தந்ததிலிருந்து நான் தொடர் சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகளை அங்கேயே பெற்று வருகிறேன். தற்பொழுது நான் கர்ப்பமாக இருப்பதால் பேறு காலத்தில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், உணவு முறைகள், ஆகியவற்றை நடமாடும் மருத்துவ மனையில் உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்கள் எடுத்துக் கூறுகிறாார்கள்.

அதோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கர்ப்பிணித் தாய்மார்கள் உதவித் தொகையாக ரூ.12,000/–ஐ 3 தவணையாக வழங்கி வருகிறார்கள். அந்தத் தொகையை நான் பெறுகின்ற வகையில் நடமாடும் மருத்துவமனையில் சிகிச்சை பெற மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். மருத்துவர்களின் ஆலோசனைப் படி நான் இரண்டாவது குழந்தையை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே பெற்றெடுப்பதற்கு இந்த நடமாடும் மருத்துவமனை வழி காட்டுகிறது. எனவே எங்க கிராமத்துக்கு நடமாடும் மருத்துவமனையை அனுப்பி வெச்ச முதல்வர் அம்மாவுக்கு எங்க நன்றி! நன்றி! நன்றி!

★ ★ ★

# சூரிய ஒளி மின்வசதியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

## வீடின்றி ஏங்கிய மக்களின் ஏக்கத்தை போக்கும் ஏற்றமிகு அரசு.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப்பொறுப் பேற்றவுடன் குடிசைகளைக் கோபுரங்களாக மாற்ற வேண்டுமென்ற தாயுள்ளத்தோடு, ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட வண்ணம் "பசுமை வீடாக" "கான்கிரீட் வீடு" கட்டும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு 300 சதுர அடி பரப்பளவில் ரூபாய் 1.80 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய சக்தி (Solar System) மின்வசதியுடன் பசுமை வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. இதில் ரூபாய் 30 ஆயிரம் சூரிய மின் விளக்கு வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள், கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், திருநங்கைகள், எச்.ஐ.வி. பாதிப்புக்கு உள்ளானோர், தீ விபத்து மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

உதவித்தொகை பெறும் பயனாளிகள் குறித்த நேரத்தில், அலைச்சல் இல்லாமல், எந்தவிதச் செலவும் இல்லாமல் பயன்பெற வேண்டும் என்ற தாயுள்ளத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதால் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

2011–2012ம் ஆண்டில் 60,000 பசுமை வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு ரூபாய் 1,080 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஐந்து ஆண்டுகளில் (2011–2012 to 2015–2016 ) 3 இலட்சம் வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வீடுகள் கிரீம் மற்றும் “மெரூன்” வர்ணத்துடன் கட்டவும், ஒவ்வொரு வீட்டிலும் பொது அறை, படுக்கையறை, குளியலறை, கழிவறை மற்றும் மழைநீர் சேகரிப்புத் தொட்டியுடன் கட்டித் தரப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டின் மாடியிலும் சூரிய ஒளி மூலம் மின்சக்தியை உருவாக்க Solar System அமைப்பு

அமைக்கப்படுகிறது. அதிலிருந்து பெறப்படும் மின்சக்தியைச் சேமித்து வைக்க வீட்டுக்குள் ஒரு பேட்டரி வைக்கப்படுகிறது, இதன் மூலம் எரியக்கூடிய 5 விளக்குகள் (CFL Bulb) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு பசுமை வீட்டிற்கும் மின்வாரிய இணைப்பும் வழங்கப் படுகிறது.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆகியோரின் கண்காணிப்பில் நடைபெறும் இத்திட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள, 3 சென்ட் பட்டா நிலம் உள்ள பயனாளிகள் ஊராட்சிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமசபையின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு பயனாளி களுக்கு வீடு கட்டித் தரப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் 13.2.2012 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில், கட்டி முடித்த பசுமை வீடுகளின் சாவிகளை முதன்முதலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**திருச்சி மாவட்டம், அன்பு நகர் நாவலூர் குட்டப்பட்டுவைச் சேர்ந்த பாத்திமாகனி பக்கீர் முகமது கூறுகையில்**

"எங்க வீட்டுக்காரரு சென்டிரிங் வேலை பார்க்கிறாரு. எங்களுக்கென்று சொந்தமாக ஒரு வீடு கட்டுவோம் எனக் கனவில் கூட நினைத்தது கிடையாது. எங்களைப் போன்ற ஏழைகள் வட்டிக்கு கடன் வாங்கித்தான் வீடு கட்ட முடியும். அப்படி வீட்டைக் கட்டினால் வட்டி கட்டியே பாதி வாழ்க்கை முடிந்து விடும். எங்கள் கனவை நினைவாக்கி அம்மா

எங்களுக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய இந்த வீட்டைக் கட்டிக் கொடுத்து இருக்காங்க. வீட்டுச் சாவியை அம்மா கையால பெற்றது எங்களுக்கு சந்தோஷமாக இருக்கு. அம்மாவுக்குக் கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்".

**திருச்சி மாவட்டம், அன்பு நகர் நாவலூர் குட்டப்பட்டுவைச் சேர்ந்த பார்வதி ராஜு கூறுகையில்**



என் கணவர் உடல் நலம் சரியில்லாமல் இருக்கிறாரு. அடிக்கடி ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வர வேண்டியதாயிருக்கு, வேலைக்கே போவது இல்லை. எனக்கு ஒரே பையன் ஐ.டி.ஐ முடிச்சிட்டு கார் மெக்கானிக்கா டவுன்ல வேலை பார்க்கிறான். மாதம் ரூபாய். 5000/– சம்பளம் வாங்குகிறான். அதை வைத்துதான் குடும்பத்தை நடத்துகிறோம். இப்போ அம்மா புண்ணியத்துல ஒரு அழகான வீட்டைக் கட்டிக் கொடுத்திருக்காங்க . இந்த வீடு எங்களுக்குக் கிடைச்சது இன்ப அதிர்ச்சியாக இருக்கு. அம்மாவுக்கு என்றைக்கும் நன்றியோட இருப்போம்ங்க,'' என தெரிவித்தார்.

* * *

# சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கும் தொலைநோக்குத் திட்டம்

## விளையாட்டுத் திறமையை வெளிக்கொணரும் திறன்மிகு அரசு




2002ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிந்தையில் உதித்ததுதான் “சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டம்”. இத்திட்டத்தின்படி 6, 7, 8ஆம் வகுப்புப் பயிலும் சிறந்த உடல்திறன் கொண்ட இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் பல கட்டங்களாகத் தேர்வுகள்

நடத்தி அறிவியல் ரீதியான பயிற்சிகள் வழங்கி அவர்களின் திறமை வெளிக்கொணரப்படுகின்றது. சர்வதேச அளவிலான விளையாட்டு அரங்குகளில் பதக்கங்களும், பரிசுகளும் பெறக்கூடிய திறமை வாய்ந்தவர்களைக் கண்டறியும் இத்திட்டம் இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழகத்தில்தான் துவங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை ஒவ்வொரு துறையிலும் முன் நிறுத்த வேண்டும் என்று முனைப்புடன் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் இத்திட்டத்தை மிகுந்த ஆர்வத்துடன் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

இத்திட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் 6,7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு உடல்திறன் தேர்வுகள் நடத்தப்படும். பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் மூன்று முறை உடல்திறன் தேர்வுகள் நடத்தப்படும். இப்போட்டிகளில் சிறந்த திறனை வெளிப்படுத்தி 10 மதிப்பெண்களுக்கு 10 மதிப்பெண்களும், 8 (அல்லது) 9 மதிப்பெண்கள் என இரு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர்களை, அளவீடுகளுடன் (நேரம், தூரம்) ஒட்டுமொத்த மதிப்பெண் படிவத்தில் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் அல்லது முதல்வர் அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலர்களுக்கு தெரிவிப்பார்கள்.

மேலும், அவர்கள் செயல்திறன் மதிப்பெண்கள் அடங்கிய முன்னேற்றப் படிவம் தயார் செய்து வழங்குவார்கள். பள்ளிகளில் உடல்திறன் தேர்வுப் போட்டிகளில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்குக் கல்வி

மாவட்ட அளவில் வகுப்பு வாரியாக, தடகளப் போட்டிகள் 100மீ, 200மீ, 400மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு வீசுதல் ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

அப்போட்டியில் முதல் இரண்டு இடத்தில் வெற்றி பெற்றவர்கள் அரசு செலவில், கல்வி மாவட்டங்களுக்கு இடையேயான மண்டலப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். மண்டலப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கு பயணப்படி, தினப்படி, தங்குவதற்கு வசதி ஆகியவை வழங்கப்படுகின்றன. மண்டலப் போட்டிகளில் மிகச் சிறந்தவர்கள் வேகம், தூரம் அடிப்படையில் தேர்வு செய்யப் பெற்று, மாநில அளவில் நடைபெறும் சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பெற்று, அறிவியல் ரீதியான சிறப்புப் பயிற்சிகள் மாதந்தோறும் விடுமுறை நாட்களில் ஒரு முறையும், காலாண்டு, அரையாண்டு மற்றும் முழு ஆண்டுத் தேர்வு விடுமுறை நாட்களிலும் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு அளிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விளையாட்டு வீரர்களுக்குச் சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதுடன், மாநில, தேசியப் போட்டியில் கலந்துகொள்வோருக்கு பயணப்படியும் வழங்கப்படுகிறது. இவ்வீரர்கள் தெற்காசிய, ஆசிய, காமன்வெல்த் நாடுகள் அளவில் பன்னாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

## இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் மாணவச் செல்வங்கள் தங்களது எண்ண ஓட்டத்தை இங்கே பகிர்ந்து கொள்கிறார்கள்

**கோவை தெலுங்குபாளையத்தைச் சேர்ந்த சிவஅன்பரசி கூறுகையில்,**




"நான் கிருஷ்ணம்மாள் மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்து வருகிறேன். எனது தந்தை ஆனந்த் விஜயகுமார். தாயார் ராசாத்தி ஆவார். 2006ஆம் ஆண்டு நான் 6ஆம் வகுப்பு படிக்கும்போது சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் கீழ் என்னைத் தேர்வு செய்து எனக்கு அதிக ஈடுபாடு உடைய நீளம்தாண்டுதல், மும்முறை தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளில் ஆண்டுதோறும் தொடர்ந்து சிறப்பாகப் பயிற்சி அளித்தனர்.

நான் 6ஆம் வகுப்பு மற்றும் 7ஆம் வகுப்பு படிக்கும்போது, நீளம்தாண்டுதல் மற்றும் மும்முறை தாண்டுதல் போட்டிகளில் மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றேன். 8ஆம் வகுப்பு

படிக்கும்போது தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. 9ஆம் வகுப்பு படிக்கும்போது சண்டிகரில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் இரண்டாமிடமும், 10ஆம் வகுப்பு படிக்கும்போது கொச்சின் மற்றும் ராஞ்சியில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் பங்குகொண்டு முதல் இரண்டு இடங்களுக்குள்ளும் வெற்றிபெற்றேன். இந்த ஆண்டு போபாலில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசு பெற்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2002ஆம் ஆண்டு கொண்டுவந்த சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் மூலம் பல்வேறு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி சிறப்பான பயிற்சிகள் வழங்கப்பட்ட காரணத்தால்தான் என்னால் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற முடிந்தது. இத்திட்டத்தைக் கொண்டுவந்த முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சிறப்பான பயிற்சிபெற்று நம்நாட்டிற்காக விளையாடி பெருமை சேர்ப்பேன் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோவை ஒண்டிப்புதூரைச் சேர்ந்த ஹேமாஸ்ரீ தெரிவிக்கையில்**

"கோவை ஒண்டிப்புதூர் எனது ஊர். எனது தந்தையின் பெயர் பி.ஜெயபால். தாயார் பெயர் ராஜாமணி. நான் பி.காம். இறுதி ஆண்டு படித்து வருகிறேன். 2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்




விளையாட்டுத் துறையை மேம்படுத்தக் கொண்டுவந்த சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் கீழ் என்னைத் தேர்வு செய்தனர். அப்போது நான் சி.ஆர்.ஆர்.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 6 ஆம் வகுப்பு பயின்று வந்தேன்.

எனக்கு இத்திட்டத்தின் கீழ் சிறப்பான பயிற்சிகள் வழங்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டு டிரையத்லான் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றேன். தொடர்ந்து, தேசிய அளவிலான போட்டிகளிலும் பங்கேற்றேன். 2004 ஆம் ஆண்டு மாநில அளவிலான நீளம் தாண்டுதல் போட்டியில் முதல் பரிசு பெற்றேன். 2005 ஆம் ஆண்டு மாநில அளவிலும், தேசிய அளவிலும் 100 மீட்டர் தடைதாண்டுதல் போட்டியில் முதல் பரிசும் வென்றேன்.

தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 100 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் முதல் இரண்டு இடங்களுக்குள் வந்து தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளேன். 2008 ஆம் ஆண்டு இந்தோனேசியாவில்

நடைபெற்ற சர்வதேச அளவிலான தடகளப் போட்டியில் கலந்து கொண்டு 8ஆவது இடத்திற்கு வந்தேன். காமன்வெல்த் போட்டியில் கலந்து கொண்டு 5ஆவது இடத்தில் வந்தேன். 2010 ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் சேம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப்பதக்கம் வென்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டு வந்த இத்திட்டத்தினால்தான் என்னால் இந்தளவிற்கு விளையாட்டில் சாதிக்க முடிந்தது. மேலும், இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையுடன் விளையாட்டு உபகரணங்கள், சீருடைகளையும் எனக்கு வழங்கினார்கள். ஒவ்வொரு மாதமும் விளையாட்டு முகாம் நடத்தப்பட்டு எங்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது. பி.காம். மூன்றாம் ஆண்டு படித்துவரும்போதே விளையாட்டு வீரர் என்ற காரணத்திற்காக எனக்கு எல்.ஐ.சி.இல் பணிநியமனம் கிடைத்துள்ளது. இந்த நிலைமைக்கு நான் வருவதற்குக் காரணமாக இருந்து எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

**கோவை மாவட்டம், பீளமேடு பகுதியைச் சேர்ந்த ஆர்.கௌசல்யா அவர்கள் தெரிவிக்கையில்,**

"கோவை மாவட்டம் பீளமேடு பகுதியில் வசித்து வருகிறேன். எனது தந்தையின் பெயர் ராமசாமி. எனது தாயார் பெயர் கலாமணி. 2003 ஆம் ஆண்டு சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் கீழ் என்னைத் தேர்வு செய்து எனக்குப் பயிற்சிகள் வழங்கினர். 100 மீட்டர், 200 மீட்டர் தடை தாண்டுதல் போட்டிகளில் மாவட்ட அளவில் பங்கேற்றேன். 2003 ஆம் ஆண்டு மாநில அளவில்




பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற தடகளப் போட்டியில் 100 மீட்டர், 200 மீட்டர் மற்றும் ரிலே போட்டிகளில் முதல் பரிசு பெற்றேன். நான் 8 ஆம் வகுப்பு படிக்கும்போது மாநில அளவில் பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் 100 மீட்டர் தூரத்தை 12.5 வினாடிகளில் கடந்து புதிய சாதனை படைத்தேன். 9 ஆம் வகுப்பு படிக்கும்போது சென்னையில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியிலும், அதே ஆண்டு பள்ளிகளுக்கிடையில் மாநில அளவில் நடைபெற்ற தடகளப்போட்டிகளிலும் கலந்து கொண்டு 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு பெற்றேன். 200 மீட்டர் தூரத்தை 26.1 வினாடிகளில் தூரத்தைக் கடந்து புதிய சாதனை படைத்தேன்.

2008 ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடைபெற்ற ஆசிய அளவில் ஜுனியர்களுக்கான தடகளப்போட்டியில் கலந்து கொண்டு 4 x 100 மீட்டர் ரிலே போட்டியில் 6ஆவது இடம் பிடித்தேன். அதன் பின்பு தொடர்ந்து தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று முதல் இரண்டு இடங்களுக்குள் வெற்றி பெற்று வருகிறேன். நான் 2003 ஆம் ஆண்டு சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் கீழ் சேர்வதற்கு முன்பே பயிற்சி

வழங்கப்பட்டிருந்தாலும், இந்தத் திட்டத்தின் கீழ் சிறப்பாக பயிற்சி வழங்கியதால்தான் இந்த அளவிற்கு என்னால் சாதனை புரியமுடிந்தது. இந்தப் பயிற்சி மூலம் புதிய யுக்திகள் நிறைய கற்றுக்கொண்டோம். மேலும், தேசிய அளவிலும் ஆசிய அளவிலும் உலகளவிலும் பல்வேறு சாதனைகளைப் புரிவேன். விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கம்தரும் இத்திட்டத்தைக் கொண்டுவந்த முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினார்.

**கோவை கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்த**
**பி.வெங்கடேஸ்வரன் அவர்கள் கூறுகையில்**




"கோவை கவுண்டம்பாளையம் எனது சொந்த ஊராகும். எனது தந்தையின் பெயர் பாலசுந்தரம். தாயார் பெயர் ரேவதி. 2006 ஆம் ஆண்டு நான் 6 ஆம் வகுப்பு படிக்கும்போது என்னை சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்து எனக்குப் பயிற்சிகள் அளித்தனர். அந்த ஆண்டே மாவட்ட அளவில் போட்டிகளில் பங்கேற்று பரிசு பெற்றேன். 7 ஆம் வகுப்பு படிக்கும்போது மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்றேன். 2008 ஆம் ஆண்டு கொச்சியில் நடைபெற்ற தேசிய அளவிலான

தடகளப் போட்டியில் பங்கேற்று 4ஆவது இடம் பிடித்தேன். 2009 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான 1500 மீட்டர் தூரத்தை 4.17 நிமிடங்களில் ஓடி பழைய சாதனையை சமன் செய்து முதல் பரிசு பெற்றேன். அதே ஆண்டு வாரங்கல்லில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப்போட்டியில் பங்கேற்றேன்.

மேலும், மதுரையில் மாநில அளவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் பங்குபெற்று 1,500 மீட்டர் மற்றும் 3,000 மீட்டர் ஓட்டங்களில் முதல் இடம் பெற்றேன். 2009 ஆம் ஆண்டு சத்தீஸ்கரில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் பங்குகொண்டு 1,500 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாம் பரிசு பெற்றேன்.

தொடர்ந்து பள்ளிகளுக்கிடையேயான மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு 800 மீட்டர் 1,500 மீட்டர் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களுக்குள் பரிசு பெற்று வருகிறேன். 6ஆம் வகுப்பு படிக்கும் வரை எனக்கு விளையாட்டில் ஈடுபடுவது அவ்வளவாக இல்லை. என்னை சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தில் தேர்வு செய்த பின்புதான் என்னுடைய திறமையை நான் உணர்ந்தேன்.

கடந்த ஆண்டு ஜனவரி26 –இல் கோவையில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் கிடைத்தது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் புரட்சிகரமான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களின் திறமையை வெளிப்படுத்தக்கூடிய இத்திட்டத்தையும் கொண்டுவந்த அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**கோவை பீளமேட்டில் வசித்து வரும் எஸ்.என்.முகமது ஹலாவுதின் அவர்கள் தெரிவிக்கையில்**




"கோவை பீளமேட்டில் வசித்து வருகிறேன். எனது தந்தையின் பெயர் முகமது நிஜாமுதின். தாயார் முஜிதாபேகம் ஆகும். நான் 8 ஆம் வகுப்பு படித்துவரும் போது நீளம் தாண்டுதலிலும், மும்முறை தாண்டும் போட்டியிலும் பள்ளிகள் அளவில் சிறப்பாக விளையாடியதால் என்னை சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தில் தேர்வு செய்தனர்.

எனக்கு நுணுக்கமான பல்வேறு பயிற்சிகளை சொல்லித் தந்தனர் அதன் காரணமாக 2008ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற மாநில அளவிலான தடகளப்போட்டியில் கலந்துகொண்டு மும்முறை தாண்டுதல் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றேன். 2009 ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற தேசிய அளவிலான இளையோர் தடகளப்போட்டியில் மும்முறை தாண்டுதல் போட்டியில் முதலிடம் பிடித்தேன். 2010 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய அளவிலான தடகளப்போட்டியில்

மும்முறை தாண்டுதல் போட்டியில் 5ஆம் இடம் பிடித்தேன். 2010ஆம் ஆண்டு 12ஆம் வகுப்பு படித்தபோது ஜுனியர் தேசிய தடகளப் போட்டியில் 15.24 மீட்டர் தூரம் தாண்டி பழைய சாதனையைச் சமன் செய்தேன்.

அதே ஆண்டு பள்ளிகளுக்கான மாநில அளவிலான தடகளப் போட்டியில் 15.09 மீட்டர் தூரம் தாண்டி புதிய சாதனை படைத்தேன். ராஞ்சியில் நடைபெற்ற இளையோருக்கான தடகளப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றேன். 2012ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற பல்கலைக்கழகப் போட்டிகளில் முதல் பரிசு பெற்றதுடன், 15.41 மீட்டர் தூரம் தாண்டி புதிய சாதனை படைத்தேன்.

அதே ஆண்டு மங்களூரில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான பல்கலைக் கழகங்களுக்கான தடகளப் போட்டியில் பங்கேற்று மும்முறை தாண்டும் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றேன்.

இத்திட்டத்தில் என்னைக் கண்டறிந்து சேர்த்ததால்தான் என்னால் இவ்வளவு சாதனைகளைச் செய்ய முடிந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தக் கூடிய வகையில் பரிசுத் தொகைகளை அதிகரித்து வழங்கி உள்ளார்கள். இதனால் நாங்கள் உலகத்தரம் வாய்ந்த உபகரணங்களை வாங்கிப் பயிற்சி பெற முடியும்.

மேலும், தேசிய அளவிலும் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்கேற்று வெற்றி பெற்று நமது நாட்டிற்குப் பெருமை தேடித் தருவேன்" என்று கூறினார்.

**கோவை, செல்வபுரத்தைச் சேர்ந்த கே. சுபாஷினி அவர்கள் கூறுகையில்**




"எனது தந்தையின் பெயர் ஆர்.கருணாகரன். தாயார் அருள்செல்வி. நான் ஸ்ரீ சௌடேஸ்வரி வித்யாலய மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு படித்து வருகிறேன். நான் 5 ஆம் வகுப்பு படிக்கும்போதே குண்டு எறிதல் மற்றும் வட்டு எறிதல் போட்டிகளில் மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றேன். 2008 ஆம் ஆண்டு நான் 8 ஆம் வகுப்பு படித்தபோது என்னை சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்தனர். இத்திட்டத்தில் எனக்குப் பல்வேறு பயிற்சிகளும், நுணுக்கங்களும் சொல்லித்தந்தனர். மேலும், தேசிய அளவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது.

2008 ஆம் ஆண்டு கொச்சியில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் பங்கேற்று குண்டு எறிதல் போட்டியில் முதல் பரிசும், வட்டு எறிதல் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றேன். 2009 ஆம் ஆண்டு சண்டிகரில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் பங்கேற்று குண்டு எறிதல் போட்டியில் முதலிடம்

பெற்றதுடன், புதிய சாதனையும் படைத்தேன். இதே ஆண்டு வாரங்கல்லில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசு பெற்றதுடன், முந்தைய எனது சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்தேன்.

2010ஆம் ஆண்டு குண்டூரில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் குண்டு எறிதல் போட்டியில் முதலிடமும், 2011 ஆம் ஆண்டு ஹைதரா பாத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் குண்டு எறிதலில் முதல் பரிசும் பெற்றேன். 2011 ஆம் ஆண்டில் ராஞ்சியில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளப் போட்டியில் பங்கேற்று குண்டு எறிதல் போட்டியில் இரண்டாம் இடமும், வட்டு எறிதல் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றேன்.

மாவட்ட அளவில் பள்ளிகளுக்கிடையேயான போட்டியில் மட்டும் பங்கேற்ற நான் சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தில் தேர்வான பின்புதான் தேசிய அளவிலான சாதனைகளைப் புரிந்துள்ளேன். நான் இந்த நிலைமைக்கு வர காரணமாக இருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய அளவிலான விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றால் ஒரு இலட்சம் ரூபாய் பரிசு அறிவித்துள்ளார்கள். இதன் மூலம் என்னுடைய திறமைகளை மேலும் வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கும். தொடர்ந்து நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் பல்வேறு போட்டிகளில் சாதனைகளைப் புரிவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

விளையாட்டுத் துறையை மேம்படுத்தி தேசிய அளவிலும் சர்வதேச அரங்கிலும் தமிழக விளையாட்டு வீரர்கள் முதலிடம் பிடித்திட வேண்டும் என்ற ஊக்கத்தை அவர்களது மனதில் விதைத்து, அந்த வெற்றியை அவர்கள் பெறுவதற்குத் தேவையான பயிற்சிகளுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் காலங்களில் எல்லாம் அற்புதத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

2011ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் வெற்றி பெறும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்காக ஊக்கத்தொகை மற்றும் பரிசுத் தொகைகளைப் பன்மடங்கு உயர்த்தி ஆணையிட்டார்கள்.

அதனடிப்படையில், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு வழங்கப்படும் உயரிய ஊக்கத் தொகையை இவ்வாண்டு முதல் மேலும் உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்கள்/ வீராங்கனைகளுக்கான ஊக்கத் தொகை 1 கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாகவும், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாயாகவும், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு

25 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாகவும், ஊக்கத்தொகையை உயர்த்தியுள்ளனர். ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 20 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு15 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாகவும், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயிலிருந்து 20 இலட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளனர்.

அதேபோல் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையை 1 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாகவும், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50,000/– ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாகவும், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 25,000/– ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தியுள்ளனர்.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் நடைபெறும் குழுப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வெல்பவர்களுக்கு வழங்க ப்படும் ஊக்கத்தொகையை 20,000 ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாகவும், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 15,000 ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாகவும், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10,000 ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழகத்திலுள்ள 9 விளையாட்டு விடுதிகள் மற்றும் விடுதிகளுடன் கூடிய 3 விளையாட்டுப் பள்ளிகளில் 860 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர்.

மேலும், தமிழகத்திலிருந்து தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் அதிக அளவில் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்வதற்காக இந்த விடுதிகளில் தங்கி பயிற்சி பெறும் வீரர்களின் எண்ணிக்கையை 860லிருந்து 1,100 ஆக உயர்த்தியும், கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கென செயல்பட்டுவரும் உயர்தர விளையாட்டு விடுதியில் பயிற்சி பெற்று வரும் வீரர்களின் எண்ணிக்கையை 50லிருந்து 80ஆக உயர்த்தியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு தொடர் செலவினமாக 83 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாயும், தொடராச் செலவினமாக 1 கோடி ரூபாயும் செலவு ஏற்படும்.

மேலும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த 70 பயிற்றுநர்களுக்கு "தினப்பயிற்சித் திட்டம்" எனப்படும் புதிய திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இத்திட்டத்தில் 10–14 வயதுக்குட்பட்ட 20 சிறுவர் சிறுமியர் ஒவ்வொரு விளையாட்டிற்கும், அவரவரது திறமைக்கேற்ப தொடர் திறனறிவு மற்றும் தொழில்நுட்பச் சோதனைகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு, விளையாட்டில் சாதனை புரியும் திறனை ஏற்படுத்துகின்ற வகையில்,

பயிற்றுநர் பயிற்சி அளிக்க ஏதுவாக தினப்பயிற்சி மையத்தில் இணைக்கப்படுவர். தேர்வு செய்யப்பட்ட பயிற்சியாளர் களுக்கு, ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கு தினசரி காலையிலும் மாலையிலும் விளையாட்டு அரங்கில் பயிற்சி அளிக்கப்படும். அவர்களுக்குச் சிற்றுண்டி, போக்குவரத்துப் படி, சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

இத்திட்டம் கன்னியாகுமரி, விருதுநகர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், பெரம்பலூர் ஆகிய 5 மாவட்டங்களில் 10 பயிற்றுநர்களுடன் சோதனை அடிப்படையில் செயல் படுத்தப்படும். இத்திட்டத்திற்காகத் தொடர் செலவினமாக 18 இலட்சம் ரூபாய்க்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்து ஆணையிட்டுள்ளார்கள்.



★ ★ ★

# உணவு உற்பத்தியைப் பெருக்கிட உருவாகியுள்ள இரண்டாம் பசுமைப் புரட்சித் திட்டம்

## சமூகப் பாதுகாப்பு அளித்து உழவர் நலம் காக்கும் உயரிய அரசு




இந்தியாவின் மொத்த மக்கள் தொகையாகிய 110 கோடியில், 90 கோடி மக்கள் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். இந்த 90 கோடி மக்களும் முழுமையாக விவசாயத்தையே நம்பி வாழ்கின்றார்கள்.

பருவகால மாறுபாடுகளாலும் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாமலும் விவசாயம் என்பது வருமானம் குறைந்த ஒரு நிச்சயமற்ற தொழிலாகி வருகிறது.

இதனை முழுவதுமாக மாற்றி வேளாண் தொழிலை மேம்படுத்துவதையும், விவசாயிகள் நலன் காப்பதையும் தமது தலையாய கடமைகளாகக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முழுமுனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

விவசாயிகளைப் பாதுகாக்கவும் உணவு உற்பத்தியைப் பெருக்கிப் பொருளாதார வளர்ச்சிபெறவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் முந்தைய ஆட்சிக்காலத்தில் 15.8.2005 முதல் “உழவர் பாதுகாப்புத் திட்டம்” என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வகையில் புதிய, விரிவுபடுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைத் தமிழக அரசு தற்போது செயல்படுத்தி வருகிறது. இந்தப் புதிய திட்டமே “முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்” ஆகும்.

தமிழகத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகள், குத்தகைதாரர்கள், விவசாயத் தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் விவசாயிகளுக்கு வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு இந்த உழவர்

பாதுகாப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.5 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் முதலியவற்றை உடைமையாகக் கொண்டு, அந்த நிலத்தில் நேரடியாகப் பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயதிற்குட்பட்ட சிறு, குறு விவசாயிகள், விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ, அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து விவசாய குத்தகைதாரர்கள், தொழிலாளர்கள் இவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபடும் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் ‘மெரூன்’ வண்ணத்திலும், அவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களுக்கு சாம்பல் நிறத்திலும் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இந்த அடையாள அட்டை பெறுபவர்கள் அனைவரும் அரசின் திட்ட உதவிகளைப் பெறத் தகுதியுடைவர்கள் ஆவார்.

இதுவரை குடும்பத் தலைவருக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்கப்பட்டு வந்த நிலை மாறி, இந்தப் புதிய உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அடையாள அட்டை வழங்கப்படுவதால் எவ்வித விடுபடுதலும் இன்றி குடும்ப

உறுப்பினர்கள் அனைவரும் திட்ட உதவிகளைப் பெற வழிவகை ஏற்பட்டுள்ளது.

தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், ஜுன் 6ஆம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிட ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்குவதற்காக வேளாண்மைத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, விவசாயிகளுக்கு அரசு அறிவிக்கும் அனைத்துத் திட்டங்களும் நேரிடையாகக் கிடைக்க வழிவகை செய்துள்ளார்கள்.

வேளாண் உயர் தொழில் நுட்பம், தரமான விதை, மான்ய விலையில் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கி உணவு உற்பத்தியைப் பெருக்கவும் விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்கவும், குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், வேளாண் உயர் தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்கவும் விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளித்து, திருந்திய நெல்சாகுபடி முறையில் விவசாயம் செய்யவும், துல்லிய பண்ணைத்திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடி செய்யவும், பயறு வகைகளின் உற்பத்தியை அதிகப்படுத்தவும் பல்வேறு நலத்திட்டங்கள் வகுக்கப்பட்டு விவசாயிகளை ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

## இத்திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ள விவசாயப் பெருமக்கள் தங்களது அனுபவங்களை இங்கே நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்கள்

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் மணக்கால் கிராமத்தைச் சேர்ந்த முகமது ஹனிபா தெரிவித்ததாவது**




"எனக்கு 65 வயதாகிறது. நான் 25 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். 8 ஏக்கர் நஞ்சை நிலம் சொந்தமாக உள்ளது. இந்த நிலத்தில் குறுவை, சம்பா நெல் சாகுபடி செய்து வருகிறேன். அதன்பிறகு மாற்றுப்பயிராக எண்ணெய் வித்து மற்றும் பயறு வகைகள் சாகுபடி செய்து வருகிறேன். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் சாதாரண நடவு முறையைக் கடைப்பிடித்து விவசாயம் செய்து குறைந்த மகசூல் எடுக்க முடிந்தது.

வேளாண் துறையினர் நவீன தொழில்நுட்பம் கடைப்பிடித்து விவசாய சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெற முடியும் என்று தெரிவித்தனர். இதை ஏற்று நான் கடந்த

4 ஆண்டுகளாகத் திருந்திய நெல்சாகுபடி முறையில் விவசாயம் செய்து வருகிறேன். இந்த ஆண்டும் 8 ஏக்கர் நிலத்தில் குறுவை சாகுபடி செய்து அறுவடை முடித்து விட்டு தற்போது தாளடி நெல் சாகுபடி செய்து வருகிறேன். எனது நிலத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து 7 ½ குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார் பொருத்தி விவசாயம் செய்து வருகிறேன்.

மேலும், எனது நிலத்திற்குக் காவிரி நீர்ப் பாசனமும் இயற்கையாகப் பாயும். கடந்த 4 ஆண்டுகளாக திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயம் செய்து வருகிறேன். இந்த ஆண்டும் ஆடுதுறை 37 ரகம், திருந்திய நெல் சாகுபடி முறையில் குறுவை சாகுபடி செய்தேன். விவசாயத் துறையினரால் கொடுத்த கோனோவீடர் வாயிலாக 15 நாட்களுக்கு ஒருமுறை 7 கட்டமாக பயிர்களில் களை எடுத்தேன். ஒரு பயிர் தூர் 80 கிளைகளாக வளர்ந்து நல்ல மகசூல் கிடைக்கிறது.

ஒரு ஏக்கருக்கு 4800 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. இந்த நெல்லை உடனடியாக அரசு கொள்முதல் நிலையத்தில் ஒரு மூட்டைவிலை ரூபாய் 600 என்ற விலையில் விற்பனை செய்தேன். ஒரு ஏக்கருக்கு பயிர் நடவு, உரமிடுதல், களை எடுத்தல், பூச்சி கட்டுப்படுத்துதல், அறுவடை செய்தல் என அனைத்துச் செலவுகளும் சேர்த்து ரூபாய் 20 ஆயிரம் செலவு செய்தேன்.

இந்தக் குறுவை சாகுபடியில் ஏக்கருக்கு ரூபாய் 28 ஆயிரம் மூன்று மாத காலத்தில் லாபம் கிடைத்துள்ளது. தக்க சமயத்தில் பயிர்களுக்கு உரம் தெளிப்பதும், கோனோவீடர்

மூலம் களை எடுப்பதும், உரிய காலத்தில் பயிர்களில் உள்ள பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் வாயிலாகவும் விவசாயத்தில் அபிரிமிதமான வருவாய் உள்ளது என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறேன்.

இந்த ஆண்டு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து முன் எப்போதும் இல்லாத வகையில் ஜூன் 6ம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டார்கள்.

இதன்மூலம் விவசாயிகள் பொருளாதார வளர்ச்சியடைவதற்கும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்பாக குறுவை நெல் சாகுபடி செய்து மகசூல் அறுவடை செய்வதற்கு வசதியாகத் தக்க பருவத்தில் ஜூன் 6ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது".

**நவீன கோனோவீடர் மூலம் பயிர் களை எடுத்தல் முறை திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணக்கால் கிராமத்தில் வசிக்கும் பிச்சைகனி என்பவர் தெரிவித்ததாவது**

"எனக்கு தற்போது 54 வயதாகிறது. சொந்தமாக 10 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளது. ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, 7 1/2 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் மூலமாக எனது நிலத்திற்குப் பாசனமும் காவிரி நீர் பாசனமும் என் வயலுக்குப் பாயும்.

24 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 4 ஆண்டுகளாகத் திருந்திய நெல் சாகுபடி முறையில் நவீன தொழில்நுட்பம் மூலமாக விவசாயம் செய்து

வருகிறேன். இந்த ஆண்டு குறுவைச் சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு 50 மூட்டை மகசூல் கிடைத்துள்ளது. இந்த நெல்லைச் சில்லறை வியாபாரியிடம் விற்பனை செய்துள்ளேன். ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையில் பாசனத்திற்குப் போதுமான அளவு நீர் இருப்பு இருந்த போதும், ஜூன் மாதம் 12–ஆம் தேதிதான் விவசாயத்திற்கு பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கமாக இருந்து வந்தது. இந்த ஆண்டு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஜூன் 6–ஆம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க உத்தரவிட்டிருந்தார். இந்த ஆண்டு குறுவை நெல் சாகுபடியில் நல்ல மகசூல் கிடைத்துள்ளது".

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் மணக்கால் கிராமத்தைச் சேர்ந்த சொக்கலிங்கம் மகன் ராஜேஸ்கண்ணன் என்பவர் தெரிவித்ததாவது**

"எனக்கு 37 வயதாகிறது. எங்கள் குடும்பம் விவசாயக் குடும்பம். எனது அப்பா 40 ஆண்டு காலமாக விவசாயம் செய்து வருகிறார். நான் கடந்த 4 ஆண்டுக் காலமாக விவசாயம் செய்து வருகிறேன். நான் தற்போது திருந்திய நெல் சாகுபடி செய்து வருகிறேன்.

இதற்கு முன்னர் சாதாரண நடவு செய்து பழைய முறையில்தான் விவசாயம் செய்து வந்தேன். இந்தாண்டு குறுவை நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி செய்து ஏக்கருக்கு 50 மூட்டை மகசூல் பெற்றுள்ளேன். தற்போது விவசாயத்திற்காகக் கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. வேளாண் துறையினர் வழங்கிய கோனோவீடர் வாயிலாகப் பயிர் களையெடுத்து நல்ல விளைச்சல் மகசூல்

கிடைத்துள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே குறுவை நெல் அறுவடை செய்து மழையினால் எந்தவித சேதாரமுமில்லாமல் நல்ல மகசூல் கிடைத்துள்ளது".

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் செபரை கிராமத்தைச் சேர்ந்த சுப்பையன் மகன் அழகிரி (வயது 48) என்பவர் தெரிவித்ததாவது**



அழகிரி

"நான் 20 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். எனக்குச் சொந்தமாக 4 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தில் நெல், கரும்பு போன்ற பயிர்கள் செய்து வருகிறேன். கடந்த ஆண்டு 4 ஏக்கர் நிலத்திலும், துல்லிய பண்ணையத் திட்டத்தின் கீழ் குஜராத் ரகம் சி.ஓ.எண்05–072 கரும்பு சாகுபடி செய்திருந்தேன். இந்தச் சாகுபடியில் கடந்த ஆண்டு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 55 ஆயிரம் செலவானது. ஒரு ஏக்கருக்கு 50 டன் கரும்பு வெட்டி எடுத்து கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு லாரி மூலமாக அனுப்பினேன். இதில் ஒரு டன் கரும்புக்கு கோத்தாரி சர்க்கரை ஆலை ரூபாய் 1900/– விலை கொடுக்கின்றனர். இதில் கரும்பு வெட்டுக்

கூலியாக ரூபாய் 600–ம், போக்குவரத்துச் செலவு ரூபாய் 125–ம் என மொத்தம் ரூபாய் 725–போக எங்களுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 1275/– கிடைக்கிறது.

துல்லிய பண்ணையத்திட்டத்தின்கீழ் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 100 சதவீதம் மான்யம் அளித்துத் தற்போது அறிவித்துள்ளார்கள்.

இதுபோன்ற திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கே அதனுடைய பயன் கிடைக்கின்றது. அரசு என்ன நோக்கத்திற்காக இந்த திட்டத்தை அறிவித்துள்ளதோ அதன் முழு பலனும் எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு நேரிடையாக கிடைக்கின்றது. முதல்வர் அம்மா அவர்கள் விவசாயிகளின் வாழ்வில் பிரகாசமான ஒளி ஏற்படுத்தியுள்ளார்கள்.

விவசாயம் புயல், வெள்ளம், வறட்சி, பருவகாலங்கள் மாறி மழை பெய்வது போன்ற இயற்கை சீற்றங்களால் விவசாயத்தில் அதிக அளவில் பாதிப்பு ஏற்படுகின்றது.

இதனால் இன்றைக்கு பெரும்பாலான விவசாயிகள் தங்களுடைய விளை நிலங்களை வீட்டுமனைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் விற்பனை செய்து வருகின்றனர்.

விவசாய நிலங்களைத் தொடர்ந்து பாதுகாக்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும், விவசாயிகளுக்கு நேரிடையாக பயன்தரும் திட்டங்களை அம்மா அவர்கள் அறிவித்துள்ளது எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்".

★ ★ ★



## சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை

ரூ.500 லிருந்து ரூ1,000 ஆக உயர்வு
விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் –
திருமதி. பாக்கியலெட்சுமி

இப்போது மனதைரியத்துடன் இருக்கிறேன். நல்லது கெட்டது பார்க்க முடிகிறது. எங்களைப் போன்ற ஆதரவற்ற முதியோர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பிள்ளையாக இருந்து எங்களை காத்து வருகிறார்.



## மீன்பிடித் தடைகால நிவாரண உதவி

கடலூர் மாவட்டம் சலங்ககார கிராமத்தைச் சேர்ந்த மீனவர் திரு. ராஜா

நிவாரண உதவித் தொகை ரூ.2000 கிடைக்க ஆணையிட்ட அம்மாவின் அரசுக்கு நாங்கள் எப்பவும் நன்றியோட இருப்போம். மீன்பிடிக்க தடை இருந்த காலத்தில வருமானத்துக்கு வழி இல்லாதப்ப பணம் கொடுத்ததால எங்க பசங்க படிப்பு செலவுக்கும், குடும்ப செலவுக்கும் ரொம்ப உதவியா இருந்துச்சு. அந்தப் பணம் கிடைச்சதால, நான் கடலுக்கு போகலங்கற பாதிப்பே இல்லாம குடும்பம் நடத்த முடிஞ்சுது.



## விலையில்லா அரிசித் திட்டம்

நாமக்கல் மாவட்டம், தும்மங்குறிச்சி திருமதி. பூங்கொடி

அரிசியும் தரமானதாக இருக்கு. எடையும் சரியான முறையில் இருக்கு. இந்த அரிசியில் நாங்க இட்லி, தேங்காய்ப் புட்டு ஆகியவை செய்து சாப்பிடுகிறோம். அரிசி தரமாக இருப்பதினால் இதெல்லாம் நல்ல முறையில் செய்ய முடிகிறது. இலவச அரிசி வழங்கிய அம்மா அவர்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம்.

## ஆறுமாத கால மகப்பேறு விடுப்பு

பெண்ணின் மனது ஒரு பெண்ணுக்குத்தான் புரியும் என்பார்கள். அதுபோல குழந்தையைப் பெற்ற தாயின் மனது தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு நம் தமிழக முதல்வர் அவர்களுக்கு தெரிந்துள்ளதால்தான் இந்த சலுகையை அறிவித்துள்ளார்கள். அல்லலுறும் பெண்களுக்கு மன நிம்மதி அளிக்கும் வகையில் இத்திட்டத்தை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு மீண்டும் எனது நன்றி.

எம். மேகலா – உதவியாளர்,
மாவட்ட ஊராட்சி அலுவலகம்,
தூத்துக்குடி





## தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்

நீலகிரி மாவட்டம், பாரஸ்ட் கேட், புதுமந்து கிராமம்
லதாமணி ( வயது 23)

தங்கம் என்பது ஒரு கனவாகவே எங்கள் வாழ்க்கையில் இருந்து வந்தது. தற்சமயம் அப்படிப்பட்ட ஒரு நிலை மாறி நாங்களும் மற்றவர்களைப்போல தங்கத்தில் தாலி அணிந்திருப்பதைக் கண்டு எங்கள் மனது சொல்ல முடியாத சந்தோஷத்தில் திளைக்கிறது. இத்தனைக்கும் காரணம் முதல்வர் அம்மா அவர்கள் தான்.